# புதிய ஜனநாயகம்

அக்டோபர் 2016
ரூ. 15.00



## பா.ஜ.க.வின் பாகிஸ்தானா தமிழ்நாடு?



# எல்லா மானியங்களையும் உறிஞ்ச வருகிறது ஆதார் அட்டை!

மானியங்கள், கல்வி, முதியோர் உதவித் தொகைகள் உள்ளிட்ட அரசின் சேவைகளைப் பெறுவதற்கு, ஆதார் எண் வைத்திருக்க வேண்டும்; இல்லையென்றால், இந்த உதவிகள் / சேவைகள் மறுக்கப்படும் என்ற இடியை, மைய, மாநில அரசுகள் அதிரடியாகப் பொதுமக்கள் மீது இறக்கி வருகின்றன. மானிய உதவிகள் பெறுவதற்கு மட்டு மல்ல; வேலையில் சேருவதற்கு, வங்கிக் கணக்கு தொடங்குவதற்கு, ஓய்வூதியம் பெறுவதற்கு, புதிய தொலைபேசி இணைப்பிற்கு, ஏன் குழந்தைகளைப் பள்ளியில் சேர்ப்பதற்குக்கூட ஆதார் எண் கேட்கப்படுகிறது. சுடுகாட்டில் அடக்கம் செய்ய பிணத்தின் ஆதார் எண் என்ன எனக் கேட்காதிருப்பது மட்டும்தான் பாக்கி. அந்த அளவிற்கு அரசின் அனைத்து மட்டங்களிலும் ஆதார் எண் இந்தியக் குடிமகனின் அடையாளமாகிவிட்டது.

அரசின் மானியங்கள் மற்றும் உதவிகளைப் பெறுவதற்கு, ஆதார் எண்ணைக் கட்டாயம் வைத்திருக்கத் தேவையில்லை என்ற உச்ச நீதிமன்றத் தீர்ப்பு ஒருபுறம் இருந்தாலும், அது பற்றியெல்லாம் அலட்டிக்கொள்ளாமல் இதுவரை 147 சேவைகளை ஆதார் எண்ணுடன் இணைத்துவிட்டது, அரசு. ஆட்டைக் கடிச்சு, மாட்டைக் கடிச்சு, மனுசனைக் கடிச்ச கதையாக, தற்போது ரேசன் அட்டைகளை ஆதார் எண்ணோடு இணைக்கும் நடைமுறை தமிழகத்திலும் முடுக்கி விடப்பட்டிருக்கிறது.

இதுவரை நாடெங்கும் 69% ரேசன் அட்டைகள் அவற்றுக்கான ஆதார் எண்களுடன் இணைக்கப்பட்டுவிட்டதாகத் தெரிவித்திருக்கும் மைய அரசு, மீதம் உள்ள அட்டைகளை விரைந்து இணைப்பதற்குக் கெடு தேதிகளையும் நிபந்தனைகளையும் விதித்திருக்கிறது. இதுவரை நடந்த இணைப்பின் மூலம், “2.33 கோடி போலி ரேசன் அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டு நீக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றின் மூலம் 14,000 கோடி ரூபாய் அளவிற்கு மானியம் மிச்சமாகியிருப்பதாகவும்” மைய அமைச்சர் பஸ்வான் கூறியிருக்கிறார். அதாவது, போலி ரேசன் கார்டுகளை ஒழித்து, ரேசன் கடை அரிசி கள்ளச் சந்தைக்குக் கடத்தப்படுவதைத் தடுக்கும் உயர்ந்த நோக்கில்தான் இந்த இணைப்பு கட்டாயமாக்கப்படுவதைப் போல நியாயவாதம் கற்பிக்கப்படுகிறது.

பொதுமக்களைப் பொருத்தவரையில், ஆதார் எண்ணைக் கொடுக்கவில்லை என்றால், நைந்து, கிழிஞ்சு போன கார்டுக்குப் பதிலாக புது கார்டு கிடைக்காது, பொருள் கிடைக்காது என்ற பரிதவிப்பில் அரசின் இந்த வலுக்கட்டாயத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்காமல், ஆதார் எண்ணைப் பதிந்து வருகிறார்கள். ஆதார் எண் இல்லாதவர்கள், அந்த எண்ணை வாங்குவதற்காக அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆதார் எண்ணை ரேசன் அட்டையோடு இணைத்துவிட்டால் போலி ரேசன் கார்டுகள் ஒழிந்துவிடும் என்பது, கள்ளன் பெரிசா, காப்பான் பெரிசா என்ற புதிரைப் போன்றது. சமையல் எரிவாயு பெறுவதற்கு ஆதார் எண்ணை இணைத்தபோதும் இதைத்தான் சொன்னார்கள். ஆனால், வீட்டு உபயோகத்திற்கான சமையல் எரிவாயு உருளைகள் டீக்கடைகளிலும், ஓட்டல்களிலும் மடைமாற்றப்படுவது நின்றுபோய் விட்டதா, என்ன?

சாலவன்பேட்டை என்ற ஊரில் ரேஷன் கார்டோடு ஆதார் எண்ணை இணைக்கக் காத்திருக்கும் பொதுமக்கள்.



அரசின் உண்மையான இலக்கு போலி ரேசன் கார்டுகளை ஒழிப்பது அல்ல; மாறாக, உணவு மானியத்தைப் படிப்படியாக வெட்டுவது. இதன் முதல்படியாக, ரேசன் கார்டுகளோடு குடும்ப உறுப்பினர்களின் ஆதார் எண்களையும் குடும்பத் தலைவரின் வங்கிக் கணக்கையும் இணைக்கிறார்கள். அடுத்து, மானிய விலையில் ரேசன் கடை மூலம் அரிசி, கோதுமை உள்ளிட்ட உணவுப் பொருட்களை விநியோகிப்பதை நிறுத்திவிட்டு, அவற்றை ரேசன் கடையில் சந்தை விலையில் வாங்கிக் கொள்ளுமாறும், அதற்கான மானியம் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும் என்றும் உத்தரவு வரும். ஏற்கெனவே புதுச்சேரி, சண்டிகர்,

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்

# பா.ஜ.க.-வின் பாகிஸ்தானா தமிழ்நாடு?

''பாகிஸ்தானுடனான சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை தொடரப் போவதில்லை'' என்று சொன்ன மோடி அரசுக்கு உடனே பதிலடி கொடுத்தார், பாக். அரசின் வெளியுறவுத்துறை ஆலோசகர் சர்தாஸ் அஜீஸ். ''ஒருதலைப்பட்சமாக நதிநீர் ஒப்பந்தத்தை மீறுவதாகச் சொல்வதே போர்ப் பிரகடனம் ஆகும். கார்கில், சியாச்சின் போர்களின்போதுகூட சிந்து தடுக்கப்பட்டதில்லை. எனவே, இது குறித்து ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலிலும், சர்வதேச நீதிமன்றத்திலும் பாக். முறையிடும்'' என்றார்.

''போரிடும் பகை நாடாக இருப்பினும், நதிநீரைத் தடுப்பதென்பது அந்நாட்டு குடிமக்களைப் பட்டினிக்குத் தள்ளும் போர்க் குற்றம்'' என்று கூறுகிறது ஜெனிவா ஒப்பந்தத்தின் 54-வது பிரிவு. காவிரியைச் சார்ந்திருக்கும் 25 இலட்சம் ஏக்கர் விவசாயத்தை, 40 இலட்சம் தஞ்சை விவசாயிகளை, குடிநீருக்குச் சார்ந்திருக்கும் 19 மாவட்ட மக்களை மரணத்துக்குத் தள்ளும் பாரதிய ஜனதா, தமிழகத்தை பாகிஸ்தானைவிடக் கொடிய பகைநாடாக நடத்ததுகிறதென நீங்கள் கருதவில்லையா?

பாகிஸ்தானுக்கு எதிரான போர்ப் பதற்றம் நிலவுகின்ற சூழலிலும் வாகா எல்லை வழியாக சுமார் 185 லாரிகளில் சரக்குகள் வந்து போகின்றன; பேருந்துகள் செல்கின்றன. ஆனால், கர்நாடக எல்லைக்குள் தமிழகப் பேருந்துகளோ, லாரிகளோ அனுமதிக்கப்படுவதில்லை. தடுப்பவர்கள் கன்னட அமைப்பு என்ற போர்வையில் உலவும் பாரதிய ஜனதா காலிகள். ஒருமைப்பாடு பேசும் இந்தப் பிரிவினைவாதிகள், பாகிஸ்தானைக் காட்டிலும் கேவலமாகத் தமிழகத்தை நடத்துவதை நீங்கள் காணவில்லையா?

தமிழர்கள் கட்டிய கோவிலில் எந்தப் பார்ப்பான் மணியாட்ட வேண்டும் எனத் தீர்ப்பு கூறவும், நீட் தேர்வு மூலம் தமிழகத்தின் மருத்துவ இடங்களைத் 'தேசியமயமாக்கவும்', பேரழிவு அணு உலைகளைக் கூடங்குளத்தில் அமைக்கவும், சேதுக்கால்வாய்க்காக நடைபெற்ற கடையடைப்பைக் காட்டி, தி.மு.க. ஆட்சியைக் கலைத்துவிடுவதாக மிரட்டவும் நாக்கைச் சுழற்றிக் கொண்டு பேசிய உச்சநீதி மன்றம், காவிரி விவகாரத்தில் நீதிமன்றத்தைத் தொடர்ந்து அவமதித்துவரும் கர்நாடக அரசிடம் வாலைக் குழைக்கிறதே, சட்டம், நீதி என்ற இந்தப் பித்தலாட்டத்தை இனிமேலும் நாம் நம்புவதும், கட்டுப்படுவதும் மடமையில்லையா?

எல்லா நெறிமுறைகளையும் மீறி சதானந்த கவுடா, நிர்மலா சீதாராமன், வெங்கய்யா நாயுடு என ஒரு கும்பல், கர்நாடகத்துடன் சேர்ந்து கொண்டு தமிழகத்துக்கு எதிராகச் சதி செய்கிறது. மோடி தங்களுக்கு அளித்த வாக்கை காப்பாற்றிவிட்டதாகச் சொல்லி ஆனந்தக் கூத்தாடுகிறார் கர்நாடக பா.ஜ.க.வின் ஜெகதீஷ் ஷெட்டர். ''காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்ற காவிரி நடுவர் மன்றத்தின் பரிந்துரை அடிப்படையில் உத்தரவிட உச்சநீதி மன்றத்துக்கு அதிகாரம் இல்லை; அதனை ஏற்பதும் நிராகரிப்பதும் மத்திய அரசின் விருப்பம்'' என்று உச்சநீதி மன்றத்தில் பேசுகிறது மோடி அரசு. ''இதைவிட காவிரித் தண்ணீர் தமிழகத்துக்கு கிடையாது என்று மைய அரசு நேரடியாகச் சொல்லியிருக்கலாம்'' என்று பா.ஜ.க. அபிமானியான தினமணியே புலம்புகிறது. இது தமிழ்நாட்டுக்கு எதிராக ஆர்.எஸ்.எஸ். வெறியர்கள் நடத்தும் போர் என்பதை உங்களால் புரிந்துகொள்ள முடியவில்லையா?

பா.ஜ.க.வும் காங்கிரசும் தமிழகத்தில் தலையெடுக்கவே இயலாததுதான், இந்த தேசியக் கட்சிகளின் ஓரவஞ்சனைக்கு காரணம் என்பது பகுதியளவே உண்மை. தமிழகத்தின் ஆரிய - பார்ப்பன எதிர்ப்பு, இந்தி - சமஸ்கிருத எதிர்ப்பு, திராவிட இயக்க மரபுதான் இந்த மதவெறியர்கள் இங்கே காலூன்ற முடியாததற்குக் காரணம். இவர்களை இந்துக்களின் பிரதிநிதிகளாக எண்ணியிருந்தவர்களும் கோவையில் அவர்கள் நடத்திய காலித்தனத்தைப் பார்த்தபின் தெளிந்து விட்டார்கள். ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பல்தான் தமிழ்ச் சமூகத்தின் கொடிய எதிரி. இந்தச் செய்தியைத் தமிழகம் முழுதும் கொண்டு செல்வோம். எதிரிக்குரிய இடத்தை அவர்களுக்குக் காட்டுவோம். ●


புதிய ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 31 இதழ்: 12
அக்டோபர் 2016

தனி இதழ்: ரூ. 15.00
ஆண்டு சந்தா: ரூ.180.00

வடிவமைப்பு : மு.துரை



தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண் : 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:
puthiyajananayagam@gmail.com
தொலைபேசி: 94446 32561

# பாக். மீது தாக்குதல்: சண்டையா.... சண்டைக் காட்சியா?

“அடி பின்னிவிட்டோம்” என்கிறது மோடி அரசு. “இல்லவே இல்லை” என்கிறது பாகிஸ்தான். இப்படி ஒரு நகைச்சுவையான யுத்தக்காட்சியை உலகம் கண்டதில்லை என்கிறார்கள் பத்திரிகையாளர்கள்.

பாகிஸ்தானுக்கு எதிராக இந்திய அரசு நடத்திக் கொண்டிருப்பது, சண்டையா, அல்லது இது வெறும் சண்டைக் காட்சியா? இந்தக் கேள்விக்கு இரண்டு பதில்கள் இருக்கின்றன. மோடி அரசைப் பொருத்தவரை இது சண்டைக் காட்சி. உத்திரப் பிரதேசம், பஞ்சாப், உத்தர்கண்ட் சட்டமன்றத் தேர்தல்களைக் குறிவைத்து நடத்தப்படும் நாடகம். “நல்ல காலம் பொறக்குது” என்று கூவிப் பார்த்துக் காசு கிடைக்கவில்லையென்றால், “நாச காலம் வருது” என்று மிரட்டிக் காசு பறிக்கும் குடுகுடுப்பைக்காரனைப் போல, வாக்களித்த மக்களுக்கு ‘அச்சே தின்’ எதையும் காட்ட முடியாத மோடி, ‘சண்டைக் காட்சி’யைக் காட்டி ஓட்டு அறுவடைக்கு முயற்சிக்கிறார்.

உரி இராணுவ முகாம் மீதான தாக்குதல், காஷ்மீர் மக்களின் போராட்டத்தை எதிர்கொள்ள முடியாமல் தடுமாறிக் கொண்டிருந்த மோடியை, ஒரு விதத்தில் காப்பாற்றியிருக்கிறது. வேறொரு விதத்தில் இக்கட்டிலும் ஆழ்த்தியிருக்கிறது. “56 அங்குல மார்பு கொண்ட மாவீரன்” என்ற முறையில் மோடி ஏதாவது செய்தாக வேண்டும். அதே நேரத்தில் பாக். இராணுவத்திற்கு உண்மையிலேயே ஆத்திரமூட்டும்படி ஏதும் செய்துவிடவும் கூடாது. இவ்விரு நிபந்தனைகளுக்கு இடைப்பட்ட சந்தில், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் உருவாக்கிய “கலைப்படைப்புதான் செப் 29. அன்று அரங்கேற்றப்பட்ட” சர்ஜிகல் ஸ்டிரைக்.

“அடி பின்னிவிட்டோம்” என்கிறது மோடி அரசு. “இல்லவே இல்லை” என்கிறது பாகிஸ்தான். இப்படி ஒரு நகைச்சுவையான யுத்தக் காட்சியை உலகம் கண்டதில்லை என்கிறார்கள் பத்திரிகையாளர்கள். தனது கூற்றை நிரூபிக்கும் பொருட்டு, தம் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீர் பகுதியில், இந்திய இராணுவம் பயங்கரவாத முகாம்களைத் தாக்கியதாக கூறப்படும் பகுதிகளுக்கு சர்வதேச பத்திரிகையாளர்களை அழைத்துச் சென்று மக்களிடம் பேச விட்டிருக்கிறது பாக். அரசு. பிம்பேர், சம்ப், சமானி ஆகிய மூன்று மாவட்ட எல்லைப்புறக் கிராமங்களைப் பார்வையிட்ட வாஷிங்டன் போஸ்ட் நாளேட்டின் நிருபர் பமேலா கான்ஸ்டபிள், “எல்லைப்புறத்தில் துப்பாக்கிச் சத்தம் கேட்டது என்று மக்கள் சொல்கிறார்களே தவிர, பல போராளிகள் கொல்லப்பட்டதாக இந்தியா சொல்வதை உறுதி செய்யும் விதத்தில் அவர்கள் எதுவும் கூறவில்லை” என்கிறார். காஷ்மீரின் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டில் போர் நிறுத்தத்தைக் கண்காணிக்கும் ஐ.நா குழுவினரும், “இந்தியா கூறுவதைப் போன்ற துப்பாக்கிச் சண்டை எதையும் நாங்கள் பார்க்கவில்லை” என்றே கூறியிருக்கின்றனர்.

“அதிக பட்சம் 200 மீட்டர் தூரத்துக்கு பாக். எல்லைக்குள் சென்று சுட்டிருக்க கூடும்” என்று சில பாக். பத்திரிகையாளர்கள் மதிப்பிடுகின்றனர். ஷான் ஸ்நோ என்ற இராணுவத்துறை வல்லுநர், “துல்லியமாக இலக்கைத் தாக்குவதற்கான (*Surgical Strike*) ஆற்றலை இந்திய இராணுவம் இன்னமும் பெற்றுவிடவில்லை. அப்படியொரு தாக்குதல் நடத்தியதற்கான விவரங்கள் எதையும் இந்தியா அளிக்கவுமில்லை” என “டிப்ளமாட்” என்ற பத்திரிகையின் இணையதளத்தில் தரவுகளுடன் எழுதியிருக்கிறார்.

செப் 29 தாக்குதலைப் பற்றி இந்திய இராணுவத் தலைமையகம் (DGMO) வெளியிட்ட அறிக்கையில் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை ஒட்டி தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளதேயொழிய, கோட்டைக் கடந்து சென்று தாக்கியதாக அந்த அறிக்கை கூறவில்லை. எத்தனை இலக்குகள்

எல்லை தாண்டிய பயங்கரவாதிகளால் நடத்தப்பட்டதாகச் சொல்லப்படும் உரி தாக்குதலில் கொல்லப்பட்ட இந்தியச் சிப்பாய்களின் சடலங்களைக் காட்டித் தேசிய வெறியைத் தூண்டும் முயற்சி.



தாக்கப்பட்டன என்றோ, என்ன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன என்றோ, எத்தனை பேர் கொல்லப்பட்டார்கள் என்றோ, கொல்லப்பட்டவர்கள் யார் என்றோ எந்த விவரமும் கூறப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. “அடிவாங்கிய” பாக். இராணுவத்துக்கும் தீவிரவாதிகளுக்கும் தெரிந்திருக்கக்கூடிய மேற்படி விவரங்களை, இந்தியர்களுக்கு ஏன் மறைக்க வேண்டும்?” என்று பத்திரிகையாளர்கள் எழுப்பும் கேள்விக்கும் மோடி அரசிடம் பதில் இல்லை.



சர்ஜிகல் ஸ்டிரைக் என்ற சண்டைக் காட்சியை வடிவமைத்த தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல்.

இருந்த போதிலும் “வெற்றி, வெற்றி” என்று ஊடகங்கள் மூலம் சவுண்டு கிளப்பி, பாக். எதிர்ப்பு தேசவெறியை நாடு முழுவதும் பா.ஜ.க. தூண்டியிருப்பதால், ராகுல் காந்தி முதல் கருணாநிதி வரையிலான அனைவரும் மோடிக்கு ஒரு பாராட்டைத் தெரிவித்து விட்டனர். இருப்பினும் நடந்து கொண்டிருப்பது நாடகம் என்பது அவர்களுக்குத் தெரியாமல் இல்லை.

**செப். 29 தாக்குதலைப் பற்றி இந்திய இராணுவத் தலைமையகம் (DGMO) வெளியிட்ட அறிக்கையில் எத்தனை இலக்குகள் தாக்கப்பட்டன என்றோ, என்ன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன என்றோ, எத்தனை பேர் கொல்லப்பட்டார்கள் என்றோ எந்த விவரமும் கூறப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.**

எங்கள் ஆட்சிக் காலத்தில் பல முறை இராணுவம் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறது. நாங்கள் அரசியல் ரீதியில் அதற்கு உரிமை கொண்டாடியதில்லை. இராணுவத்தின் செயலுக்கு மோடி அரசு உரிமை கொண்டாடுவதாலும், பாகிஸ்தான் அதனை மறுப்பதாலும், வீடியோ ஆதாரத்தை வெளியிடுவதுதான் சரியானது என்று கூறியிருக்கிறார் ப.சிதம்பரம். “வீடியோ ஆதாரம் இருக்கிறது, தக்க நேரத்தில் வெளியிடுவோம்” என்று முழங்கிய ராஜ்நாத் சிங் பதிலளிக்கவில்லை. “நம்முடைய இராணுவத்தின் வீரத்தில் நம்பிக்கையில்லாமல் ஆதாரம் கேட்கிறீர்களா?” என்று ரவி சங்கர் பிரசாத் ஆஜராகிறார். “ஆதாரம் கேட்பவனெல்லாம் பாகிஸ்தானுக்கு ஓடுங்கள்” என்கிறார் உமா பாரதி.

“வீடியோ ஆதாரத்தை வெளியிட மோடி அரசு ஏன் அஞ்ச வேண்டும்? அது சொல்லிக்கொள்ளும்படியான ஆதாரமாக இல்லாமல் இருக்க வேண்டும். ஒரு வேளை பா.ஜ.க.வினர் சொல்வது போல, அது பயங்கரமான தாக்குதலாக இருக்கும் பட்சத்தில், அந்த வீடியோ காட்சி பாகிஸ்தான் மக்களின் கோபத்தைத் தூண்டி, அதனைச் சமாளிக்கும் பொருட்டு, பாக். இராணுவம் இந்தியா மீது போர் தொடுக்கவேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகிவிடும் என்று மோடி அரசு அஞ்சுவதாக இருக்கவேண்டும். அப்படி ஒரு அச்சம் இருக்கும் பட்சத்தில், சர்ஜிகல் ஸ்டிரைக் பற்றி ஊடகங்களில் அன்றாடம் அடித்து விடப்படும் சரக்குகள், ஒரு போருக்கு வழி வகுக்கும் என்று மோடி அரசுக்குத் தெரியவில்லையா?” என்று கேள்வி எழுப்பியிருக்கிறார் பத்திரிகையாளர் சித்தார்த் வரதராஜன்.

“சவுண்டு மட்டும்தான் வரவேண்டும், சண்டை வரக்கூடாது” என்றுதான் இந்த ஆட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார் மோடி. இருப்பினும் “சர்ஜிகல் ஸ்டிரைக்” என்பதற்கு பயங்கரமான வியாக்கியானங்கள் ஊடகங்களில் உலா வருகின்றன. “இது பாக். இராணுவத்தின் மீதான தாக்குதல் அல்ல, ஆக்கிரமிப்பும் அல்ல, தீவிரவாதிகளைத் தடுத்து அழிக்கும் நடவடிக்கை மட்டுமே” என்பதைத் தெளிவுபடுத்துவதற்காகத் தான் “துல்லியத் தாக்குதல்” என்று இராணுவம் இதற்குப் பெயரிட்டிருக்கிறது. தாக்குதல் முடிந்த மறுகணமே பாக். இராணுவத் தலைமையையும், சர்வதேச பிரதிநிதிகளையும் அழைத்து, “இந்த நடவடிக்கை இத்துடன் முடிந்து விட்டது” என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறது மோடி அரசு.

அதாவது சண்டை 29 இரவே முடிந்து விட்டது. ஆனால், சவுண்டு மட்டும் ஊடகங்களில் தொடர்ந்து கொண்டிருக்கிறது. பத்திரிகையாளர் கிஷாலய் பட்டாசார்ஜி கூறுவது போல “இந்த யுத்தம், சமூக ஊடகங்கள், தொலைக்காட்சிகள் மற்றும் தகவல் ஊடகங்கள் வழியே நடத்தப்படும் உளவியல் யுத்தம்.” வல்லரசு இந்தியா குறித்த போதையில் திளைக்க விரும்பும் நடுத்தர வர்க்கத்தினருக்காக, அர்னாப் கோஸ்வாமியைப் போன்ற ஆங்கிலம் பேசும் பார்ப்பன மேட்டுக்குடி லும்பன்கள், டி.வி. ஸ்டூடியோக்களில் நடத்திக் காட்டும் யுத்தம். தினமணி மதியைப் போன்ற அசடுகளை ஆனந்த பரவசத்தில் ஆழ்த்தும் யுத்தம்.

மற்றபடி நடப்பது சண்டையா, காட்சியா என்று அம்பானிக்கும் அதானிக்கும் தெரியும் என்பதால், இது பற்றி பங்குச்சந்தை அலட்டிக் கொள்ளவில்லை. பாகிஸ்தானுக்கு வழங்கப்பட்டிருந்த “சலுகை பெற்ற நாடு” என்ற வணிக அந்தஸ்தை மோடி ரத்து செய்தது குறித்து அந்நாட்டு முதலாளிகளும் கவலைப்படவில்லை. இந்திய - பாக். வணிகத்தில் அதிக ஆதாயமடைபவர்கள் இந்திய முதலாளிகள்தான் என்பதால், இதனை ரத்து செய்ததில் அவர்களுக்கு மகிழ்ச்சியே.

வெறும் சண்டைக் காட்சியாகவே இருக்கும் நிலையிலும் இது எல்லையோர கிராம மக்களைத்தான் பாதித்தது. 553 கி.மீ எல்லையுள்ள பஞ்சாப் பாக்.

எல்லைப்புறத்தில், பத்து கி.மீ. சுற்றுவட்டாரத்தில் இருக்கின்ற 1,871 கிராமங்களிலிருந்து அறுவடைக்கு நிற்கும் பயிர்களை அப்படியே விட்டு விட்டு வெளியேறுகிறார்கள் விவசாயிகள்.




காஷ்மீரிலிருந்து இந்தியாவை வெளியேறக் கோரி காஷ்மீர் மக்கள் நடத்தும் ஆர்ப்பாட்ட ஊர்வலம்: முற்றுப் பெறாத போர். (கோப்புப் படம்)

‘‘சிப்பாய்களெல்லாம் முகாமில் இருக்கும்போது எங்களை மட்டும் ஏன் வெளியேற்றுகிறீர்கள்?’’ என்று கேட்பவர்களிடம், ‘‘நாங்கள் கிராமத்தைக் காலி செய்யச் சொல்லவில்லை. உங்களுக்கு உத்தரவிட்டிருப்பது மாவட்ட நிர்வாகம்’’ என்று கூறுகிறார் எல்லைப் பாதுகாப்புப் படையின் டைரக்டர் ஜெனரல் எஸ்.எஸ்.சர்மா (*The Hindu*, 5.10.2016). இது பஞ்சாப் சட்டமன்றத் தேர்தலைக் குறிவைத்து அம்மாநிலத்தின் பா.ஜ.க. கூட்டணி அரசு நடத்தும் இரக்கமற்ற நாடகம் என்பது அப்பட்டமாகத் தெரிகிறது.

**இது, தகவல் ஊடகங்கள் வழியே நடத்தப்படும் உளவியல் யுத்தம். வல்லரசு இந்தியா குறித்த போதையில் திளைக்க விரும்பும் நடுத்தர வர்க்கத்தினருக்காக, அர்னாப் கோஸ்வாமியைப் போன்ற ஆங்கிலம் பேசும் பார்ப்பன மேட்டுக்குடி லும்பன்கள், டி.வி. ஸ்டூடியோக்களில் நடத்திக் காட்டும் யுத்தம்.**

‘‘எல்லையில் போர் மேகங்கள் சூழ்கின்றனவா, அப்படியென்றால் தேர்தல் நெருங்கி விட்டது என்று பொருள்’’ என்ற பஞ்சாபி கவிதையை காங்கிரசு கட்சியினரே தேர்தல் பிரச்சாரத்துக்குப் பயன்படுத்துகின்றனர். ‘‘பாகிஸ்தானுக்கு எதிராகப் போர் தொடங்குவதன் மூலம் உ.பி. தேர்தலில் வெற்றி பெற்று விடலாம் என்பது மோடியின் திட்டம்’’ என ஆகஸ்டு மாதத்திலிருந்தே அம்பலப்படுத்தி வருகிறார் மாயாவதி. இப்படியெல்லாம் பேசினாலும், போர்வெறி மோடிக்கு தரக்கூடிய ஆதாயத்தை எண்ணி எதிர்க் கட்சிகள் அஞ்சவும் செய்கின்றனர்.

‘‘பாகிஸ்தானின் அணு ஆயுதத்தைப் பார்த்து அஞ்சிய காலமெல்லாம் போய்விட்டது. அணு ஆயுதப் போர் மூண்டால், பத்து கோடி இந்தியர்கள் ஒரு வேளை சாகலாம். அப்புறமும் 110 கோடிப் பேர் மிச்சமிருப்போம். ஆனால், பாகிஸ்தான் என்ற நாட்டைத் துடைத்து ஒழித்துவிடுவோம்’’ என்று பார்ப்பனக் கொழுப்பெடுத்த சு.சாமி உளற, ‘‘போர் என்று வந்து விட்டால் அணு ஆயுதத்தைப் பயன்படுத்தவும் தயங்கமாட்டோம்’’ என்று பதிலுக்குப் பிதற்றினார் பாக். இராணுவ அமைச்சர்.

இவையெல்லாம் செயலுக்கு வர முடியாத உளறல்கள் மட்டும்தானா? ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பல் எழுப்பி வரும் போர்வெறிக் கூச்சலும், இராணுவ மோதல்களும் அவர்கள் விரும்புவது போல, தேர்தலுக்கு மட்டும் பயன்படும் துருப்புச் சீட்டுகளாக முடிந்து விடுமா அல்லது இந்த சண்டைக்காட்சி அபாயகரமான ஒரு சண்டைக்கு வழி வகுத்து விடுமா? - இதற்குத் தீர்மானமான ஒரு பதிலைக் கூற இயலாது.

பாகிஸ்தானை மட்டம் தட்டிச் செய்யப்படும் பிரச்சாரத்தின் காரணமாக ஆத்திரம் கொண்ட இசுலாமிய தீவிரவாதக் குழுக்களோ, அல்லது இந்தியாவிலேயே இருக்கும் அவர்களுடைய ஆட்களோ, ஒரு பயங்கரவாத தாக்குதலை நடத்தக் கூடும் என்ற அச்சம் பா.ஜ.க. தலைமைக்கு இருக்கத்தான் செய்கிறது. அதனால் மக்களுக்கு ஏற்படும் அழிவு பற்றி அவர்களுக்கு கவலை இல்லை. அத்தகைய தாக்குதல், தங்களுக்கு இந்து வாக்குகளைப் பெற்றுத் தருமா, அல்லது தோல்விக்குத் தள்ளிவிடுமா என்பது மட்டுமே அவர்களது கவலை.

தமக்குக் கடுகளவும் உரிமையில்லாத காஷ்மீரை மையப்படுத்தி இந்தியாவும் பாகிஸ்தானும் நடத்தி வரும் இந்தச் சண்டையில் காஷ்மீர் மக்களின் உரிமையை இரு நாட்டு அரசுகளுமே நிராகரிக்கின்றன. அதே போல, பாகிஸ்தானை முறியடித்து, காஷ்மீரை இந்தியா தக்கவைத்துக் கொள்ளவேண்டும் என்ற கருத்தில் மோடிக்கும், மோடியைத் தோற்கடிக்க விரும்புகின்ற காங்கிரசு முதல் ஆம் ஆத்மி வரையிலான கட்சிகளுக்குமிடையில் எவ்விதக் கருத்து வேறுபாடும் இல்லை.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான சண்டைக்காட்சியாகத் தோற்றம் தரும் தற்போதைய மோதல், சண்டையாக மாறலாம், மாறாமலும் போகலாம். ஆனால், ஒரு உண்மையான சண்டை, உள்நாட்டுப் போர் ஏற்கெனவே காஷ்மீரில் நடந்து கொண்டிருக்கிறது. அது நான்கு மணி நேரத்தில் முடிந்து விட்ட சர்ஜிகல் ஸ்டிரைக் அல்ல. பல பத்தாண்டுகளாக நடந்து வரும் போர்.

அந்தப் போர் முடிவுக்கு வரும் வரை அல்லது காஷ்மீர் மக்களுக்கு நீதி கிடைக்கும் வரை, பாகிஸ்தானுடனான போர் அபாயத்திலிருந்து நாம் தப்பிக்க இயலாது. ‘‘எல்லை தாண்டிய பயங்கரவாதம்’’ என்ற சொற்றொடரை இந்திய ஆளும் வர்க்கம் நெடுநாளாகப் பயன்படுத்தி வருகிறது. ‘‘காஷ்மீரின் சாபம்’’ என்று இதனை அழைப்பது, உண்மைக்கு நெருக்கமானதாக அமையும்.

● சூரியன்

# கோவை இந்து முன்னணி ரவுடித்தனம்:

# அம்மா போலீசு - ஆர்.எஸ்.எஸ். கூட்டணி!

**செத்த பிறகு தியாகிப் பட்டம் பெற விரும்பும் ரியல் எஸ்டேட் ரவுடிகள், காமவெறிக் கயவர்கள், கந்துவட்டிக்காரர்களே! உங்கள் அனைவரையும் இந்து முன்னணி அறைகூவி அழைக்கிறது. (கிறித்தவ, முஸ்லிம் ரவுடிகளுக்கு அனுமதி இல்லை)**

கோவையில் கடந்த செப்டம்பர் 22 அன்று இந்து முன்னணி செய்தி தொடர்பாளர் சசிக்குமார் வெட்டிக் கொல்லப்பட்டதை முகாந்திரமாகக் கொண்டு, கோவையின் பல பகுதிகளில் வீடுகளை விட்டு மக்கள் வெளியேவர முடியாத அளவுக்குப் போலீசின் ஆசியுடன் பகிரங்கமாகவே வெறியாட்டம் போட்டிருக்கிறது, இந்து முன்னணி. கோவை மட்டுமின்றி, திருப்பூர், ஈரோடு, நீலகிரி மாவட்டங்களிலும் கடைகளையும் பேருந்துகளையும் தாக்கி வன்முறை வெறியாட்டங்களில் ஈடுபட்டிருக்கிறது.

இந்த வெறியாட்டத்தில் 60-க்கும் மேற்பட்ட அரசுப் பேருந்துகளின் கண்ணாடிகள் உடைக்கப்பட்டு, எண்ணற்ற இரு சக்கர வாகனங்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன. ஏராளமான கடைகள் சூறையாடப்பட்டுள்ளன. திருப்பூரில் கல்வீச்சைக் கண்டு பதறி பேருந்திலிருந்து இறங்கிய ஒரு பெண்மணியின் மீது பேருந்து சக்கரம் ஏறி கால் முறிந்து பின்னர் மரணமடைந்திருக்கிறார்.

இந்து முன்னணியின் பொதுச் செயலாளரான காடேஸ்வரா சுப்பிரமணியன், சசிகுமாரின் மரணத்தைத் தொடர்ந்து செப்டம்பர் 23 அன்று தமிழகம் தழுவிய கடையடைப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்து, கொலைகாரர்களை காவல்துறை கைது செய்யாவிட்டால் தமிழ்நாடு குஜராத்தாக மாறும் என பகிரங்க மிரட்டல் விடுத்தார். இந்நிலையில், சசிகுமாரின் உடற்கூறாய்வை உடனடியாக முடித்து சவத்தை அடக்கம் செய்ய ஏற்பாடு செய்யாமல், இந்து வெறியாட்டத்துக்கான அணிதிரட்டல் முழுமையாக நடக்கும்வரை தாமதப்படுத்தி, இப்பாசி கும்பல் வன்முறை வெறியாட்டங்களை நடத்த தொடக்கம் முதல் இறுதிவரை உறுதுணையாக இருந்துள்ளது கோவை போலீசு.

தொழில் நகரமான கோவையில் தொழிலாளர்களும், அடிப்படைப் பிரச்சனைகளுக்காக சாமானிய மக்களும் போராட்டம் நடத்தும்போது, அவற்றை ஒடுக்கி, போராடுபவர்களைச் சிறையில் அடைக்கும் போலீசு, கற்கள், சோடாபாட்டில்கள், பெட்ரோல் குண்டுகள், உருட்டுக் கட்டைகளுடன் தயாரிப்போடு வந்து இந்த ரவுடித்தனங்களை இந்து முன்னணி நடத்துவதற்கு உறுதுணையாக நின்றது. ஆணவக் கொலை என்றால் சவ ஊர்வலம் நடத்த அனுமதி மறுத்து அவசரமாக சுடுகாட்டுக்குக் கொண்டு செல்ல கட்டாயப்படுத்தும் போலீசு, தாழ்த்தப்பட்டோரின் இறுதி ஊர்வலத்தை பொதுப்பாதை வழியாகக் கொண்டு செல்ல அனுமதிக்காததை எதிர்த்துப் போராடுவோரை ஒடுக்கி சவத்தை தானே அடக்கம் செய்யும் போலீசு, இந்துவெறி குண்டர்கள் துடியலூர் வரை 18 கி.மீ. தொலைவுக்கு சவ ஊர்வலம் நடத்த அனுமதி அளித்தது. வேறு எந்த ஓட்டுக் கட்சிக்காரர்களுக்கும் இப்படி சவ ஊர்வலம் நடத்த அனுமதிக்காத போலீசு, கோவை, திருப்பூர் பகுதிகளிலிருந்து திரட்டப்பட்ட குண்டர்களுடன் பிணத்தை வைத்துக் கொண்டு இந்துவெறி பயங்கரவாதிகள் மோட்டார் சைக்கிள் பேரணி நடத்த தாராள அனுமதியளித்தது.

1998-இல் கோவை குண்டு வெடிப்பைத் தொடர்ந்து, அந்நகரைத் தனது கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு இந்து வெறியர்கள் வன்முறை வெறியாட்டங்களைக் கட்டவிழ்த்து விட்டபோது, அதற்கு உறுதுணையாக இருந்ததைப் போலவே, இப்போதும் போலீசு துணை நின்றுள்ளது. துடியலூர் மயானத்துக்கு வரும்வரை நூற்றுக்கணக்கான

அம்மா போலீசின் ஆசியுடன் இந்துவெறி பயங்கரவாதிகள் கோவையில் நடத்திய வெறியாட்டம்.





இந்துவெறி பாசிச கும்பலின் நோக்கம் சிறுபான்மையினரான முஸ்லிம்களை அச்சுறுத்தி அடிபணிய வைப்பது மட்டுமல்ல. பயங்கரவாதத்தை ஏவி ஒட்டு மொத்த சமூகத்தையும் பீதியில் உறைய வைப்பதுதான் என்பதை இந்த வெறியாட்டங்கள் மூலம் நிரூபித்துக் காட்டியிருக்கின்றனர்.

கடைகளைத் தாக்கிச் சூறையாடி, வாகனங்களை அடித்து நொறுக்கி, கண்ணில்பட்ட பள்ளிவாசல்கள் அனைத்தின் மீதும் கல் எறிந்து வெறியாட்டம் போட்டது, இந்து முன்னணி. போலீசின் முன்னிலையிலேயே துடியலூரில் மட்டும் ஏறத்தாழ 20 கடைகளைச் சூறையாடி 6 கடைகளுக்கு தீ வைத்தது.

இருப்பினும், தங்களது தலைவர் கொல்லப்பட்டதற்கு ஊர்வலம் நடத்தி இப்படி தாக்குகிறார்கள் என்றால் அவர்களின் கோபத்தில் ஒரு நியாயம் இருப்பதாகக் கூறி, ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்களின் இந்த வன்முறை வெறியாட்டத்தைக் கண்டிக்கக்கூட முன்வராமல் ஊடகங்கள் பூசி மெழுகின. முஸ்லீம் ஒருவரின் செல்போன் கடையில் இந்துவெறி குண்டர் திருடிய காட்சி கண்காணிப்பு கேமராவில் சிக்கி வெளிவந்து நாறியபோதிலும், இதை மூடிமறைத்து இந்து முன்னணி போர்வையில் சமூகவிரோத கும்பல் என தலைப்பிட்டு நியாயப்படுத்துகிறது தமிழ் இந்து.

தமிழகத்தில் உள்ளாட்சித் தேர்தல் நெருங்குவதால், கவுன்சிலர் பதவிக்குப் போட்டியிடுவோர் தமது கட்சிக்குள்ளேயே வெட்டு குத்துகளில் இறங்குவது அன்றாடச் செய்தியாகியுள்ளது. ரியல் எஸ்டேட், கந்துவட்டி, சினிமா, கல்லூரிகள், காண்டிராக்ட், கட்டப் பஞ்சாயத்து போன்ற பணம் கொழிக்கும் தொழில்களைச் செய்வோராக அனைத்து ஓட்டுக் கட்சிப் பிரமுகர்களும் சீரழிந்துள்ள நிலையில், பல்லாயிரம் கோடி புழங்கும் இத்தகைய தொழில்களில் ஏற்படும் மோதல்கள் படுகொலைகள் மூலம் தீர்த்துக் கொள்ளப்படுகின்றன.

ஏற்கெனவே பா.ஜ.க. மாநில மருத்துவ அணிச் செயலாளரான டாக்டர்அரவிந்த் ரெட்டியின் கொலைக்குக் காரணம் பணம் மற்றும் பெண் விவகாரம் என்றும், பரமக்குடி நகர பா.ஜ.க. செயலாளர் தேங்காய்கடை முருகனின் கொலைக்குக் காரணம் நிலத் தகராறு என்றும் அம்பலமானது. சென்னை கோயம்பேட்டில் கந்துவட்டித் தொழில் நடத்திவந்த விட்டல் என்ற பா.ஜ.க. பிரமுகர், கடன் வாங்கியவரது வீட்டுப் பெண்களை வேசிகள் என்று ஆபாசமாகத் திட்டியதால் கடந்த 2013-இல் கொல்லப்பட்டார். ஓசூரில் கடந்த செப்.19 அன்று விசுவ இந்து பரிசத்தின் மாவட்டச் செயலாளர் சூரி வெட்டிக் கொல்லப்பட்டதற்கு கட்டப் பஞ்சாயத்து மற்றும் ரியல் எஸ்டேட் தகராறு என்று போலீசே கூறுகிறது.

கொல்லப்பட்ட சசிக்குமார் என்பவரும் ரியல் எஸ்டேட், கட்டப் பஞ்சாயத்து மற்றும் விநாயகர் ஊர்வலத்துக்கான களிமண் பொம்மைகளை வைத்து, அதற்கான வசூல்களை ஒழுங்குபடுத்துவது போன்ற 'தொழில்களை'யும் செய்து வந்தவர்தான். மற்றைய ஓட்டுக் கட்சிகளைச் சேர்ந்த கிரிமினல்கள் வெட்டிச் சாய்க்கப்படும்பொழுது, அவை வெறும் முன்விரோதக் கொலைச் சம்பவங்களாகப் பதிவாகி மறைந்து விடுகின்றன. ஆனால், இந்துத்துவ கும்பலைச் சேர்ந்த கிரிமினல்கள் கொல்லப்படும்போதெல்லாம், தமிழகத்தில் இந்துத்துவ தலைவர்களுக்குப் பாதுகாப்பற்ற சூழ்நிலை நிலவுவதாகவும், கொல்லப்பட்டவர்கள் நாட்டுக்காக உழைத்த மாபெரும் தியாகிகளைப் போலவும், இந்து சமூகத்தைப் பாதுகாக்க வந்த மாமனிதரைப் போலவும் சித்தரிப்பதைத் திட்டமிட்டே இந்துத்துவ பரிவாரங்கள் தொடர்ந்து செய்து வருகின்றன. இதன் மூலம் முஸ்லிம்கள் மீது அபாண்டமான சந்தேகம், பழிபோட்டு மதவெறிக் கலவரத்தை அரங்கேற்றி, இந்து முனைவாக்கத்தைத் தீவிரப்படுத்தி தமிழகத்தில் காலூன்றுவது என்ற திட்டத்துடன் இந்துவெறி கும்பல் இயங்கி வருகிறது.

தற்போதைய வன்முறை வெறியாட்டங்களில் முஸ்லிம் கடைகள் மட்டுமின்றி, ஏராளமான இந்து வியாபாரிகளின் கடைகளையும் தாக்கி இந்துவெறி குண்டர்கள் சூறையாடியுள்ளனர். இப்பாசிச கும்பலின் நோக்கம் சிறுபான்மையினரான முஸ்லிம்களை அச்சுறுத்தி அடிபணிய வைப்பது மட்டுமல்ல. பயங்கரவாதத்தை ஏவி ஒட்டு மொத்த சமூகத்தையும் பீதியில் உறைய வைப்பதுதான் என்பதை இந்த வெறியாட்டங்கள் மூலம் நிரூபித்துக் காட்டியிருக்கின்றனர்.

இந்நிலையில், எத்தகையதொரு அபாயத்தை தமிழகம் எதிர்கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்து, இந்துவெறி பாசிச கும்பலை முளையிலேய கிள்ளியெறியும் வகையிலான போராட்டங்களைக் களத்திலே தொடுப்பதும், இக்கும்பலின் கோயபல்சு பிரச்சாரத்துக்குப் பக்கமேளம் வாசிக்கும் ஊடகங்களையும், துணைநிற்கும் அம்மா போலீசையும் விழிப்புடனிருந்து அம்பலப்படுத்தி முறியடிப்பதுமே இன்று தமிழக மக்களின் முன்னுள்ள முக்கிய கடமையாக உள்ளது.

● குமார்

# கோவை தாக்குதல் : திருப்பியடிப்போம்!

கோவை இந்து முன்னணியைச் சேர்ந்த சசிகுமார் கொலை செய்யப்பட்டதையொட்டி, அந்நகரில் இந்து முன்னணிக் காலிகள் நடத்திய வெறியாட்டத்தைக் கண்டித்து, மக்கள் அதிகாரம் அமைப்பின் சார்பில் சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே அக்டோபர் 1-ஆம் தேதியன்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

மக்கள் அதிகாரத்தின் சென்னை மண்டல ஒருங்கிணைப்பாளர் வெற்றிவேல் செழியனின் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தைத் துவக்கி வைத்துப் பேசினார் தலைமைக்குழு உறுப்பினர் காளியப்பன். இந்து முன்னணியின் ரவுடித்தனத்துக்கும் மத வெறி தாக்குதல்களுக்கும் பாதுகாப்பு கொடுத்த தமிழக போலீசார், இதனைக் கண்டித்து சுவரொட்டி ஒட்டிய மக்கள் அதிகாரம் தோழர்கள் மீது மோதலைத் தூண்டியதாக பொய் வழக்கு போட்டு தமிழகம் முழுவதும் கைது செய்து சிறை வைத்திருப்பதை சுட்டிக்காட்டி, மத வெறி குற்றக்கும்பலின் காவலனாகவே போலீசு மாறிவிட்டது என்று குற்றம் சாட்டினார்.

கோவை துடியலூரில் இசுலாமிய மக்களுக்கு எதிராக இந்து முன்னணிக் காலிகள் தாக்குதல் நடத்த முயன்றபோது, 10, 15 இந்துப் பெண்கள் துணிவுடன் எதிர்த்து நின்றதையும், பிறகு நூற்றுக்கணக்கான மக்களைத் திரட்டி அவர்களை விரட்டியடித்ததையும் குறிப்பிட்ட மார்க்சிஸ்டு கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் கனகராஜ், மதவெறியர்களை எதிர்கொள்ள மக்களே களத்தில் இறங்குவது தான் தீர்வு என்றார்.






1998-இல் கோவையில் இந்து முன்னணியினர் இசுலாமிய மக்களைத் தாக்கியபோது, ஜனநாயக சக்திகள் விரைந்து எதிர்வினையாற்றத் தவறியதைக் குறிப்பிட்ட விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் ஷாநவாஸ், அதைப்போல் இல்லாமல் மறுநாளே கோவையில் ஆயிரக்கணக்கான முற்போக்கு சக்திகள் திரண்டு முற்றுகைப் போராட்டம் நடத்தியது ஆறுதலளிப்பதாக குறிப்பிட்டார்.

தி.க. மாணவரணி செயலர் பிரின்ஸ் என்னேரசு பெரியார், ஜனநாயக சக்திகளின் ஒற்றுமை சங்க பரிவாரக் கும்பலை முறியடிப்பதற்கு மிகவும் அவசியமானது என்று வலியுறுத்தினார். த.பெ. தி.க. மாவட்டச் செயலர் குமரன், பார்ப்பன பாசிசக் கும்பலால் காலாட்படையாகப் பயன்படுத்திக் கொள்ளப்படும் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களை அவர்களது பிடியிலிருந்து விடுவிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

“சிறையிலிருக்கும் தொழில் முறைக் குற்றவாளிகளைப் பிணையிலெடுத்து, அவர்களைத் தங்கள் அமைப்பில் சேர்த்து அவர்கள் மூலம்தான் இத்தகைய காலித்தனங்களை நடத்துகின்றனரேயன்றி, இந்து முன்னணியால் தமிழக மக்களின் ஆதரவைப் பெற முடியவில்லை” என்றார் திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொதுச்செயலர் விடுதலை இராசேந்திரன்.

பு.மா.இ.மு. மாநில ஒருங்கிணைப்பாளர் கணேசன், ஆர்.எஸ்.எஸ். கும்பல் போலீசுடன் வைத்திருக்கும் கள்ளக் கூட்டை விளக்கினார். டாஸ்மாக்கை எதிர்த்துப் போராடும் மக்களை வீடு புகுந்து தடுப்புக் காவலில் கைது செய்யும் போலீசு, கோவையில் இந்து முன்னணியினர் கும்பல் சேர்ப்பதற்கு அவகாசம் கொடுத்து, 18 கி.மீ. ஊர்வலம் போகவும் அனுமதி கொடுத்து, காலித்தனங்களுக்கு காவல் நின்றிருப்பதையும் எடுத்துக்கூறி, அதிகாரத்தை தம் கையில் எடுத்துக் கொள்வதைத் தவிர மக்களுக்கு வேறு வழியில்லை என்ற நிலை ஏற்பட்டு விட்டதை எடுத்துக் காட்டினார்.

அரசு அதிகாரத்தின் துணையுடன் ஆட்டம்போடும் ஆர்.எஸ்.எஸ். கும்பலை முறியடித்து, நாட்டுக்கே ஒரு முன்மாதிரியை தமிழக மக்கள் உருவாக்கிக் காட்டுவார்கள்.

- பு.ஜ. செய்தியாளர்கள்

# ராம்குமார் மரணம்: போலீசைத் தண்டிக்க என்ன வழி?

சுவாதி கொலையிலும், ராம்குமாரின் மர்மமான மரணத்திலும் போலீசும் நீதித்துறையுமே கூண்டிலேற்றி விசாரிக்கப்பட வேண்டிய முதன்மைக் குற்றவாளிகள்.

ராம்குமாரின் உடல் அடக்கம் செய்யப்பட்டு விட்டது. தேவைப் பட்டால், இன்னொரு உடற்கூராய்வுக்காக உடலை எடுப்பதற்கு ஏற்ற முறையில் உடலை அடக்கம் செய்திருப்பதாக அவரது வழக்கறிஞர் கூறியிருக்கிறார். மரணம் குறித்த உண்மையை வெளிக்கொண்டு வருவதற்கான 'கூராய்வு' அவரது உடலின் மீது மட்டும் நடத்தப்பட்டால் போதுமானதா என்பதே நம் கேள்வி.

"கூராய்வின்போது அதனை உடனிருந்து கண்காணிப்பதற்கு தங்கள் தரப்பு மருத்துவர் ஒருவரை அனுமதிக்க வேண்டும்" என்பது ராம்குமார் குடும்பத்தினரின் கோரிக்கை. "அது அரசு மருத்துவர்களின் நாணயத்தைச் சந்தேகத்துக்கு ஆளாக்குகின்ற தவறான முன்மாதிரி ஆகிவிடும்" என்று கூறி அக்கோரிக்கையை உச்சநீதி மன்றம் நிராகரித்துவிட்டது.

கண்காணிப்பை மறுப்பதன் மூலம்தான் நிறுவனங்களின் மீதான மக்களின் நம்பிக்கையைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்ற நீதிமன்றத்தின் கருத்து நகைப்புக்குரியது. மக்களின் கண்காணிப்புக்கு அப்பாற்பட்ட நிறுவனங்களில் தலையாயவையான போலீசின் மீதும் சிறைத்துறையின் மீதும் மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையைப் பாருங்கள்!

ராம்குமார் சிறையில் தற்கொலை செய்து கொண்டதாக செய்தி வந்தவுடனே, ஆகப் பெரும்பான்மையான மக்கள் அது கொலைதான் என்று ஆணித்தரமாகக் கருதினார்கள். இது போலீசைப் பற்றியும் சிறைத்துறை பற்றியும் இந்த ஒரு வழக்கின் மூலம் மக்கள் மனதில் உருவான கருத்தல்ல. விஷ்ணுப்பிரியா, கோகுல்ராஜ், ராமஜெயம் கொலை வழக்குகளிலும், எஸ்.ஆர்.எம். பச்சமுத்து, அன்புநாதன், கோவை கன்டெயினர், சேலம் ரயில் கொள்ளை போன்றவற்றிலும், சிவகாசி ஜெயலட்சுமி தொடங்கி கரூர் ஹவாலா திருட்டு வரையிலான எண்ணற்ற வழக்குகளின் வழியாகவும் தனது "திறமை, ஒழுக்கம், நேர்மை" பற்றி போலீசே மக்களிடம் உருவாக்கியுள்ள கருத்து.

சென்னை நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்தில் கொடூரமாகக் கொல்லப்பட்ட சுவாதியின் சடலம். (உள்படம்) சுவாதி.



ராம்குமாரின் தற்கொலை குறித்து போலீசு கூறிய கதை என்ன? "புழல் சிறையின் சமையல் அறைக்குச் சென்று, பத்தடி உயரத்தில் இருந்த சுவிட்சு பெட்டியை உடைத்து, மின் கம்பியைக் கடித்தும், தனது உடம்பில் சுற்றிக் கொண்டும் தற்கொலை செய்து கொண்டார்" என்பது முதல் கதை. "அறைக்கு வெளியே வைக்கப்பட்டிருந்த குடத்திலிருந்து தண்ணீர் அருந்துவதற்காகத் திறந்துவிடுமாறு கேட்டு, திறந்தவுடன், தடாலென சுவிட்சு பெட்டியை உடைத்து, மின் கம்பியைக் கடித்துத் தற்கொலை செய்து கொண்டார்" என்பது இரண்டாவது கதை.

"சமையல் அறை சி.சி.டி.வி. கேமரா பழுதடைந்து போனதால் தற்கொலை செய்து கொண்ட காட்சி பதிவாகவில்லை" என முதல் கதைக்குத் தோதாக துணைக்கதை சொன்ன சிறைத்துறை, இரண்டாவது கதைக்கு ஏற்ப, "உடைந்துபோன சுவிட்சு பெட்டி, சிறை அறையின் கதவுக்கு வெளியே உள்ள தண்ணீர்க்குடம்" ஆகியவற்றின் படத்தை வெளியிட்டிருக்கிறது. நிறுவனங்களின் கவுரவத்தைப் பாதுகாப்பதில் பேரார்வமிக்கவரான நீதிபதி சந்துருவாலேயே போலீசின் இந்தக் கதைகளைச் சகிக்க இயலவில்லை எனும்போது சாதாரண மக்களைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை.

"இது கொலையல்ல" என்று சந்தேகிப்பதற்கு நம் முன் உள்ள கேள்வி ஒன்றே ஒன்றுதான். சிறைத்துறையினரோ போலீசோ இதனைச் செய்திருக்கும் பட்சத்தில் இவ்வளவு முட்டாள்தனமாகவா செய்திருப்பார்கள் என்பதுதான் அந்தக் கேள்வி. "இவ்வளவு அலட்சியமாக செய்யப்பட்டிருக்கின்ற காரணத்தினால்தான் இதை போலீசு செய்திருக்கும்

என்று கருத வேண்டியிருக்கிறது'' என்பதுதான் இதற்கான பதில். எந்தக் குற்றத்துக்காகவும் தாங்கள் தண்டிக்கப்படமாட்டோம் என்ற திமிர் தான், அவர்களுடைய இந்த அலட்சியத்துக்கான அடிப்படை.


ராம்குமார்

ஒரு கொலைக்குற்ற வழக்கில் புலனாய்வு நடத்திக் குற்றவாளியை அடையாளம் காட்டுவதென்பது நமக்குச் சாத்தியமற்றது. சுவாதி கொலையையே எடுத்துக் கொள்வோம். தன்னுடைய காதலை நிராகரிக்கும் பெண்ணைக் கொலையும் செய்யலாம் என்ற அளவுக்கு ஆணாதிக்க வெறித்தனம் பரவியிருக்கின்ற பண்பாட்டுச் சூழலில், ராம்குமாரோ அல்லது வேறொரு இளைஞனோ சுவாதியைக் கொலை செய்திருக்கலாம்.

ஒரு முஸ்லிம் இளைஞனைக் காதலித்த காரணத்தினாலோ, அல்லது கருவுற்ற காரணத்தினாலோ அவளுடைய உற்றார் மூலமாகவே அவள் ஆணவக் கொலை செய்யப்பட்டிருக்கலாம். கொலை நடந்தவுடனே அதனை பிலால் என்ற இசுலாமிய இளைஞனுடன் தொடர்புபடுத்திய சங்கப் பரிவாரத்தினர், உ.பி.யில் லவ் ஜிகாத் என்றொரு பொய்க் காரணத்தை ஜோடித்து முஸ்லிம்களுக்கு எதிராகக் கலவரம் நடத்தியதைப் போல, இந்தக் கொலையின் பின்னணியிலும் ஒரு திட்டத்துடன் இருந்திருக்கலாம். இந்தக் காரணங்களுக்கு அப்பாற்பட்ட, நம்மால் ஊகிக்க முடியாத, வேறு ஏதோவொரு காரணத்துக்காக, கூலிப்படையினரால் சுவாதி கொலை செய்யப்பட்டிருக்கலாம்.

சுவாதி கொலை ஒரு கொடூரமான சம்பவம் என்பதைத் தாண்டி, அக்கொலையைப் பயன்படுத்தி கலவரத்தைத் தூண்டுவதற்கு பார்ப்பன இந்து மத வெறிக் கும்பல் தீவிரமாக முயன்றதை யாராலும் மறுக்க வியலாது. இருப்பினும், அந்தக் கொலை நடந்தவுடனே சமூக வலைத்தளங்களில் மதவெறி, சாதி வெறியைத் தூண்டி கருத்துப் பரப்பிய ஒய்.ஜி.மகேந்திரன், எஸ்.வி.சேகர் உள்ளிட்ட பார்ப்பன வெறியர்களை போலீசு விசாரிக்கக்கூட இல்லை. அதே போல, ராம்குமார் கைது செய்யப்பட்டவுடன் அவருக்கே தெரியாமல் அவரைப் பிணயில் எடுக்க முயன்ற ஆர்.எஸ்.எஸ். சார்பு வழக்கறிஞரின் பாத்திரமும் விசாரிக்கப்படவில்லை.

கொலை செய்யப்படுவதற்கு ஓரிரு நாட்கள் முன் யாரோ ஒரு இளைஞன் சுவாதியைக் கன்னத்தில் அறைந்ததாகவும், அதற்கு அவள் எதிர்ப்பு காட்டாதது ஆச்சரியமாக இருந்தது என்றும், அந்த இளைஞன் ராம்குமார் அல்ல என்றும் பேராசிரியர் தமிழ்ச்செல்வன் என்பவர் கூறியிருக்கும் சாட்சியத்தின் திசையில் எந்த விசாரணையும் நடத்தப்பட்டதாகத் தெரியவில்லை.

''சுவாதியின் பெற்றோர் விசாரணைக்கு பெரிதும் ஒத்துழைத்தார்கள்'' என்று வலிந்து அறிவித்தார் காவல் துறை ஆணையர். கைது செய்யப்பட்ட ராம்குமாரிடம் விசாரணை தொடங்குவதற்கு முன்னரே, ''இந்த வழக்கில் வேறு யாருக்கும் தொடர்பில்லை'' என்று பத்திரிகையாளர்களிடம் கூறினார். அடையாள அணிவகுப்பு நடத்தப்படுவதற்கு முன்னரே ராம்குமாரின் படம் வெளியிடப்பட்டது. இவையனைத்தும் ஒரு குற்ற வழக்கை விசாரிக்கும் முறைக்கு எதிரானவை.

கைது செய்யப்பட்டபோது ராம்குமார் தற்கொலைக்கு முயன்ற காரணத்தினால், சிறையில் அவருக்கு மனநல மருத்துவ சிகிச்சை தரப்பட்டதாக போலீசு கூறியது. ''தற்கொலைக்கு முயன்ற ஒரு கைதியைப் பாதுகாப்பாக வைப்பதற்கு சிறையில் என்ன ஏற்பாடு செய்யப்பட்டது?'' என்று கேள்விக்கு போலீசிடமிருந்து பதில் இல்லை.

''ஒரு மாதத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வோம்'' என்று சவடால் பேசிய போலீசு 3 மாதங்களுக்குப் பின்னரும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவில்லை. இந்த நிலையில் ராம்குமார் பிணையில் வெளியே வந்து பேசத்தொடங்கினால் ஏற்படக்கூடிய சிக்கல்களைத் தவிர்க்கும் பொருட்டுத்தான், அவர் மீது மின்சாரம் பாய்ச்சப்பட்டிருக்கிறது என்று சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரங்கள் போலீசின் நடவடிக்கைகளில் உள்ளன.

தன் மீதான குற்றச்சாட்டு குறித்து விளக்கமளிப்பதற்கோ, மறுப்பதற்கோ ராம்குமார் உயிருடன் இல்லை. குற்றவாளிக் கூண்டில் நிற்கும் போலீசுதான் இரண்டு கொலைகளுக்கும் பதில் சொல்ல வேண்டும். ''ராம்குமார் மரணத்தின் பின்னுள்ள உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டுமென்றால், உயர்நீதி மன்ற நீதிபதி தலைமையில் நீதி விசாரணை நடத்த வேண்டும்'' என்கிறார், ஓய்வு பெற்ற நீதிபதி சந்துரு. இந்த வழக்கில் சி.பி.ஐ. விசாரணை கோரி போடப்பட்ட மனுவை நிராகரித்ததுடன், தமிழக போலீசின் விசாரணை சரியான திசையில் செல்வதாகப் பாராட்டும் தெரிவித்திருக்கிறார் ஒரு உயர் நீதிமன்ற நீதிபதி. இதை அவர் கவனிக்கவில்லை போலும்!

அப்படியானால், வேறு எந்த நீதிபதியைக் கொண்டு விசாரணை நடத்தச் சொல்வது? ''இன்ன நீதிபதி விசாரணையைக் கண்காணிக்க வேண்டும்'' என்று கேட்பதும், ''இன்ன மருத்துவர் கூராய்வை பார்வையிட வேண்டும்'' என்று கேட்பதும், அந்நிறுவனங்களின் மீதான நம்பிக்கையைக் குலைப்பதாகிவிடாதா?

ராம்குமார், சுவாதி போன்றோரின் உயிரைக் காட்டிலும் நிறுவனங்களின் மாண்பல்லவோ ஜனநாயகத்துக்கு முக்கியம்!

● திப்பு

# ரிலையன்ஸ் ஜியோ: அம்பானி - மோடி இணைந்து வழங்கும் பாசிசக் கொடுங்கனவு!

**ரிலையன்ஸ் ஜியோவின் மூலம் அம்பானி என்ற முதலாளி இந்தியாவின் தகவல் தொழில்நுட்பத்துறையையே கட்டுப்படுத்த முடியும், நாட்டு மக்கள் அனைவரையும் வேவு பார்க்க முடியும்.**

"ஜியோ என்பது இளைஞர்களால், இளைஞர்களுக்காக நடத்தப்படும் புதிய தலைமுறைக்கான சேவை" என்று முகேஷ் அம்பானி செப்டெம்பர் 1-ஆம் தேதி அறிவித்தபோது, பங்குச் சந்தையில் ஒரு சூறாவளி வீசியது. அம்பானியின் வாயில் கிளம்பிய வார்த்தைகள் அவரது காதைச் சென்றடையும் முன்னரே முதலாளித்துவ ஊடகங்கள் தங்களது வாசகர்களிடம் காதில் அதைக் கொண்டு சேர்த்தன. அம்பானி உதிர்த்த ஒவ்வொரு சொல்லுக்கும் ஏழெட்டு விதமான பொருள் விளக்கங்களையும் கடைவிரித்தன. சமூக வலைத்தளங்களில் அனல் பறந்தது. இலவசங்களுக்கு எதிராகக் குடுமி அவிழச் சாமியாடும் நடுத்தர வர்க்கத்தினர் அம்பானி வழங்கும் இலவசங்களைப் பெறுவதற்காக, பாய் - தலையணையுடன் ஜியோ அலுவலக வாசலில் இடம் பிடித்துக் கொண்டிருந்தனர்.

முதலில் "அனைத்தும் இலவசம்" என்றனர் அம்பானி கம்பெனியினர். பின்னர் "குரல் அழைப்புகள் இலவசம், இணைய டேட்டாவுக்கு மட்டும் காசு" என்றனர், பின்னர் "டேட்டா இரவில் மட்டும்தான் இலவசம்" என்றனர், பின்னர் "இரவு எனப்படுவது அதிகாலை 2 மணிக்குத் துவங்கி காலை ஐந்து மணிக்கு முடியும்" என்றனர். மெல்ல மெல்ல சுருதி இறங்கியது. "கூட்டிக் கழித்துப் பார்த்தால் குரல் அழைப்புகள் இலவசம் என்று சொல்லி விட்டு, அதை டேட்டாவுக்கு வசூலிக்கும் தொகையில் ஈடுகட்டிக் கொள்கிறான்" என்றும், "செல்போன் சேவையை இலவசமாக கொடுத்து விட்டு பெட்ரோல் விலையைக் கூட்டி விட்டான்" என்றும் சமூக வலைத்தளங்களின் "140 எழுத்து" விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர். இந்த உண்மை உலகுக்குத் தெரியவருவதற்குள் பங்குச்சந்தையில் ஏர்டெல் ரூ.13,000 கோடிகளையும், ஐடியா 3000 கோடிகளையும் இழந்திருந்தன.

இந்தி நடிகர் ஷாருக்கான், இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான், முகேஷ் அம்பானியின் குடும்பம் பங்கேற்க, பிரம்மாண்டமாகவும் ஆடம்பரமாகவும் நடத்தப்பட்ட ரிலையன்ஸ் ஜியோவின் அறிமுக விழா.



**அம்பானி தொடுக்கும் இலவச யுத்தம்!**

ஜியோவின் வருகை, செல்பேசித் துறையில் ஒரு மாபெரும் கழுத்தறுப்புப் போட்டியைத் துவங்கி வைத்துள்ளது. முகேஷ் அம்பானியின் 'இலவசப் போரை'ச் சமாளிக்க, அவரது தம்பி அனில் அம்பானியின் ரிலையன்ஸ் இன்ஃபோகாம் நிறுவனம் ஏர்செல் நிறுவனத்தைக் கையகப்படுத்தி இருக்கிறது. விலைக் குறைப்பால் போட்டி நிறுவனங்களை அழித்தொழித்துவிட்டு மொத்தச் சந்தையையும் தனியாளாக தின்று தீர்த்து விடவேண்டும் என்கிற வெறியில், "இன்னும் ஒரே ஆண்டுக்குள் பத்து கோடி இணைப்புகளை வழங்கவும், அடுத்த சில ஆண்டுகளில் தொண்ணூறு சதவீத சந்தையைக் கைப்பற்றவும்" ஜியோவின் உயரதிகாரிகளுக்கு இலக்கு நிர்ணயித்துள்ளதாக அறிவித்துள்ளார் முகேஷ் அம்பானி.

தனது மொத்தநிதிக் கையிருப்பான 24,000 கோடியில் நாலில் மூன்று பங்கை (18,000 கோடி) முதலீடாக இறக்கியுள்ளார் முகேஷ் அம்பானி. மிகக் குறுகிய காலகட்டத்தில் மிக அதிக முதலீட்டுடன் துவங்கப்பட்ட தொழில் இதுதான் என்கிறது முதலாளித்துவ உலகம். நாடு முழுவதும் தொழில்நுட்ப மற்றும் அலைக்கற்றை உட்கட்டமைப்புடன் துவங்கப்பட்ட முதல் நிறுவனம் ஜியோ. கடந்த ஆறு ஆண்டுகளில் கிட்டத்தட்ட ஒரு லட்சம் கிலோமீட்டர் தொலைவுக்கான கண்ணாடி இழைக் கம்பிகளை (Fibre Optic Cables) பதித்துள்ள ரிலையன்ஸ், சுமார் 30,000 கோபுரங்களையும் நிர்மாணித்துள்ளது.

இந்த வேகத்தைத் தொழில்முனைவு சாகசம் என வர்ணிக்கும் ஊடகங்கள், இதற்கு பின் உள்ள சட்டவிதி மீறல்களையும், ஊழல் முறைகேடுகளை

யும், அரசின் கள்ளத்தனமான ஆதரவையும் மொத்த மாக மூடி மறைக்கின்றன. உஜ்ஜயினி, நாசிக், நாக்பூர், கொச்சி உள்ளிட்டுப் பல நகரங்களில் ரிலையன்ஸின் செல்பேசி கோபுரங்களுக்கு மக்களிடையே கடுமை யான எதிர்ப்புகள் எழுந்தன. இது தொடர்பான வழக்கு ஒன்றில் தீர்ப்பளித்த ராஜஸ்தான் மாநில உயர்நீதி மன் றம், ரிலையன்சின் செல்பேசி கோபுரங்களை அகற்று மாறு உத்தரவிட்டது. இவையனைத்தையும் விதிகளுக் குப் புறம்பாக முறியடித்துள்ளார் முகேஷ் அம்பானி.

இந்திய தொலைதொடர்புத் துறையைக் கைப்பற்ற முகேஷ் அம்பானி செய்து வரும் முயற்சிகளின் முழு பரிமாணத்தை நாம் அறிந்து கொள்ள வேண்டுமென் றால், 2010-ஆம் ஆண்டு அரசு நடத்திய மூன்றாவது மற்றும் நான்காவது அலைக்கற்றை ஏலம் என்கிற கண் ணாமூச்சி ஆட்டத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

2ஜி = 1,76,000,00,00,000 என்றால்,
4ஜி = 000000000000000?

‘‘ஒரு இலட்சத்து எழுபத்தாறாயிரம் கோடியை’’ நாம் மறந்திருக்க மாட்டோம். 2ஜி அலைக்கற்றை ஏலத் தில் நடந்த முறைகேடுகளால் அரசுக்கு ஏற்பட்ட இழப் பாக சி.ஏ.ஜி. அறிக்கை மேற்படித் தொகையை முன் வைத்த போது, வடக்கே அண்ணா ஹசாரே, ஆர்.எஸ். எஸ்., பாபா ராம்தேவ் தொடங்கி தெற்கே ஜெயலலிதா வரையிலான உத்தமர்கள் சத்தியாவேசம் கொண்டு சாமியாடினர். ‘‘திராவிட இயக்கம் என்றால் ஊழல், ஏலம்தான் ஊழலை ஒழிக்கும் வழி’’ என்ற இரண்டு தத்துவங்கள் 2ஜி ஊழலின் வழியாக கண்டுபிடிக்கப் பட்டன.

பின்னர், இந்த ஒரு இலட்சத்து எழுபத்தாறாயிரம் கோடி என்பது சி.பி.ஐ.-யின் குற்றப்பத்திரிகையில் 22,000 கோடியாகவும், 30,000 கோடியாகவும் மாற்றி மாற்றி எழுதப்பட்டதெல்லாம் தனிக்கதை. யோக்கிய மான முறை எனச் சொல்லப்பட்ட ஏல முறை எப்படி நடந்தது என்பதற்கு வருவோம்.

2010-ஆம் ஆண்டு மே மற்றும் ஜூன் மாதங்க ளில் மன்மோகன் அரசின் கீழ் மூன்று மற்றும் நான் காம் தலைமுறை அலைக்கற்றை ஏலங்கள் ஒன்றன் பின் ஒன்றாக குறுகிய இடைவெளியில் நடந்தன. நான் காம் தலைமுறை அலைக்கற்றையை ஏலம் எடுப்ப வர்கள், அதனை இணைய இணைப்பு (data) வழங்கு வதற்கு மட்டுமே பயன்படுத்திக் கொள்ள வேண்டும்; செல்பேசி இணைப்புகள் வழங்க (voice) பயன்படுத் தக் கூடாது என்று ஏல அறிவிப்பில் கறாராகக் குறிப் பிடப்பட்டிருந்தது.

3ஜி அலைக்கற்றையை ஏலமெடுப்பதற்கு ஏர் டெல், வோடாஃபோன், ஐடியா, ஏர்செல் போன்ற நிறு வனங்கள் தம் நிதிக் கையிருப்பில் பெரும்பகுதியைச் செலவிட்டன. 4ஜி என்பது இணைய சேவைக்கு மட் டுமானது என்று கூறப்பட்டிருந்த காரணத்தால், இந் நிறுவனங்கள் அந்த ஏலத்தில் பெரிய ஆர்வம் காட்ட வில்லை. எனவே, மொத்தமுள்ள 22 சேவை பிராந்தி யங்களில் (Service Circles) ஏர்டெல் 15 பிராந்தியங்களி லும், வோடாஃபோன் 5 பிராந்தியங்களிலும் 4ஜி உரி மத்தை ஏலம் எடுத்தன.

இந்நிலையில், முன்பின் கேள்விப்பட்டிராத இன் ஃபோடெல் ப்ராட்பேண்ட் சர்வீசஸ் லிமிடெட் (IBSPL) என்கிற தனியார் நிறுவனம், இந்தியாவின் அனைத்து சேவைப் பிராந்தியங்களிலும் 4ஜி அலைக் கற்றைக்கான உரிமம் கோரி விண்ணப்பித்தது. செல் பேசி சேவை வழங்கிய முன் அனுபவமோ, அதற் கான உட்கட்டமைப்பு வசதிகளோ இல்லாத இந்த நிறு வனத்தைச் சுருக்கமாக ‘‘உப்புமா கம்பெனி’’ என்றும் அழைக்கலாம்.

4ஜி ஏலத்தில் பங்குபெறும் நிறுவனங்களுக்கான குறைந்தபட்ச தகுதி மிகவும் தளர்வாக நிர்ணயிக்கப் பட்டிருந்ததால், வெறும் 2.5 கோடி ரொக்க மதிப்பும், 14 லட்ச ரூபாய் ஆண்டு வருமானமும் கொண்ட மேற் படி உப்புமா கம்பெனி, சுமார் 12,847 கோடி ரூபாய் மதிப்புள்ள அலைக்கற்றையை ஏலத்தில் வென்றது.

இங்கே 2ஜி வழக்கை சற்று நினைவு படுத்திக் கொள்வோம். அதில் சி.பி.ஐ. வைத்துள்ள குற்றச் சாட்டுகளில் முக்கியமானது ‘‘தகுதியற்ற உப்புமா கம் பெனிகளுக்கு ஆ.ராசா அலைக்கற்றைகளை ஒதுக்கிக் கொடுத்தார்’’ என்பதாகும். ஐ.பி.எஸ்.பி.எல். என்பது ஒரு உப்புமா கம்பெனி மட்டுமல்ல, அதன் புரமோட் டரான ஹிமாச்சல் ப்யூச்சரிஸ்டிக் கம்யூனிகேசன்ஸ் என் கிற நிறுவனம், தொண்ணூறுகளில் சுக்ராம் தொலைத் தொடர்பு அமைச்சராக இருந்த போது நடந்த முதற் பெரும் தொலைத்தொடர்புத் துறை ஊழலில் கையும் களவுமாக பிடிபட்ட நிறுவனமாகும்.

4ஜி ஏலம் முடிந்த மறுநாளே ஐ.பி.எஸ்.பி.எல் நிறுவனத்தை முகேஷ் அம்பானி கையகப்படுத் தினார். அலைக்கற்றையை ஏலம் எடுத்த கம் பெனியை வேறொரு கம்பெனி விலைக்கு வாங்குவது என்ற உத்தி 2ஜி-யிலும் கையாளப்பட்டது. அங்கே அது ஊழல் என்று அழைக்கப்பட்டது என்பதையும் இங்கே நினைவில் கொள்க. தான் நேரடியாக களத்தில் இறங்காமல், தனது பினாமியை இறக்கிவிட்டதன் மூலம், அலைக்கற்றை ஏலத்தில் போட்டி ஏற்பட்டிருந்

இந்தியப் பிரதமரையே தனது விளம்பரத் தூதராகப் பயன்படுத்திக் கொண்டு வெளிவந்த ரிலையன்ஸ் ஜியோவின் விளம்பரம்.





ரிலையன்ஸ் ஜியோவின் சிம் கார்டை வாங்குவதற்காக ஒடிசா மாநிலத் தலைநகர் புவனேஷ்வரில் நீண்ட வரிசையில் காத்திருக்கும் கூட்டம்.

தால் அரசுக்கு கிடைத்திருக்கக்கூடிய பல்லாயிரம் கோடிகளைச் சுருட்டினார் அம்பானி. இந்த 4ஜி ஊழலுக்கு எத்தனை சைபர் போடலாம் என்பதை குருமூர்த்திஜி அல்லது சு.சாமிஜி என்ற இரண்டு உத்தமர்கள் மட்டும்தான் சொல்ல முடியும்.

இந்த ஏலத்தில் பங்கேற்பதற்கு ஐ.பி.எஸ்.பி.எல். நிறுவனம் கொடுத்த வங்கி உத்திரவாதப் பத்திரமே போர்ஜரி செய்யப்பட்டது என்று தனது 2014-ஆம் ஆண்டு வரைவறிக்கையில் சி.ஏ.ஜி. குற்றம் சாட்டியிருக்கிறது. வங்கி வேறொரு நிறுவனத்துக்கு வழங்கியிருந்த உத்திரவாதப் பத்திரத்தில் அந்நிறுவனத்தின் பெயரை வெள்ளை மை வைத்து அழித்து விட்டு, அதன்மீது ஐ.பி.எஸ்.பி.எல். நிறுவனத்தின் பெயர் கையால் எழுதப்பட்டிருந்தது. அதாவது கொஞ்சமும் அச்சமின்றி போர்ஜரி வேலை வெளிப்படையாக செய்யப்பட்டிருந்தது.

**4ஜி ஏலத்தில் 40,000 கோடி ரூபாய் ஊழல் நடந்திருப்பதாகக் குற்றம் சாட்டி பொதுநல வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தார் பிரசாந்த் பூஷன். 2014 தேர்தலில் காங்கிரசைத் தோற்கடிப்பதற்கு 2ஜி ஊழலைப் பயன்படுத்திக் கொண்ட பாரதிய ஜனதா, இந்த 4ஜி ஊழலில் காங்கிரசுக்கு ஆதரவாக வரிந்து கட்டிக் கொண்டு உச்சநீதி மன்றத்தில் வாதாடியது.**

2ஜி வழக்கில் சி.பி.ஐ. முன்வைக்கும் இன்னொரு வாதம், ஒதுக்கப்படும் அலைக்கற்றையை இரட்டைப் பயன்பாட்டுக்கு அனுமதிப்பதில் ஆ.ராசா பாரபட்சமாக நடந்து கொண்டதன் மூலம் சாகித் பல்வாவுக்குச் சாதகமாக செயல்பட்டார் என்பதாகும். ஆனால், 4ஜி அலைக்கற்றையை இணைய சேவைக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என 2010-இல் ஏலம் விட்டு, பின்னர் 2013-இல் அதை இணையம் மற்றும் செல்பேசி சேவை இரண்டுக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று மன்மோகன் அரசு மாற்றியது. இவ்வாறு மாற்றியதன் மூலம் அரசுக்கு ரூ.22,842 கோடி இழப்பு ஏற்பட்டதாக 2014-ஆம் ஆண்டின் சி.ஏ.ஜி. வரைவறிக்கை குறிப்பிடு கிறது.

“முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை என்கிற முறையில் எல்லோருக்குமான சமமான போட்டி வாய்ப்பு (*Level playing Ground*) மறுக்கப்பட்டது” என்பது 2ஜி வழக்கின் இன்னொரு குற்றச்சாட்டு. 2010-இல் நடந்த 4ஜி ஏல விதிகளின்படி செல்பேசி இணைப்புகளுக்கான உரிமத்தை ஏலம் எடுத்த மற்ற நிறுவனங்கள் அரசுக்கு 4 சதவீதக் கட்டணம் செலுத்தின. ஏல விதிகளை 2013-இல் மாற்றியதன் மூலம், டேட்டாவுக்கான அலைக்கற்றை பயன்பாட்டுக் கட்டணமான, ஒரு சத வீதத்தைக் கட்டி விட்டு அதையே செல்பேசி அழைப்புகளுக்கும் பயன்படுத்திக் கொண்டார் அம்பானி.

### காங்கிரசின் ஊழலுக்கு மோடி வழங்கிய ஆதரவு!

சி.ஏ.ஜி.-யின் வரைவு அறிக்கையின் அடிப்படையில் அலைக்கற்றை ஏலத்தில் 40,000 கோடி ரூபாய் ஊழல் நடந்திருப்பதாக குற்றம் சாட்டி, ரிலையன்ஸ் செய்த முறைகேடுகளை விசாரிக்கக் கோரி உச்சநீதி மன்றத்தில் பொதுநல வழக்கு ஒன்றை தாக்கல் செய்தார் பிரசாந்த் பூஷன். 2014 தேர்தலில் காங்கிரசைத் தோற்கடிப்பதற்கு 2ஜி ஊழலைப் பயன்படுத்திக் கொண்ட பாரதிய ஜனதா, இந்த 4ஜி ஊழலில் காங்கிரசுக்கு ஆதரவாக வரிந்து கட்டிக் கொண்டு உச்ச நீதிமன்றத்தில் வாதாடியது.

கடந்த ஏப்ரல் 8-ஆம் தேதியன்று தீர்ப்பளித்த நீதிபதிகள், பினாமி நிறுவனத்தைப் பயன்படுத்தி அலைக்கற்றையை அபகரித்தது, வங்கி உத்தரவாதப் பத்திரங்களில் மோசடி செய்தது உள்ளிட்ட அனைத்து குற்றச்சாட்டுகளையும் தள்ளுபடி செய்தனர். பாரபட்சம் என்ற காரணத்தை சொல்லி, 122 உரிமங்களை 2ஜி வழக்கில் ரத்து செய்து, மறு ஏலம் நடத்தச் சொன்ன உச்சநீதி மன்றம், அம்பானிக்கு கட்டணத்தில் பாரபட்சமாக சலுகை காட்டப்பட்டிருப்பது பற்றி தான் முடிவெடுக்க முடியாதென்றும், அதை விசாரிக்க வேண்டியது மத்திய தொலைத்தொடர்பு அமைச்சகம் தான் என்றும் தீர்ப்பு கூறியது. அதுமட்டுமல்ல, வங்கி உத்தரவாதப் பத்திரத்தில் செய்யப்பட்டிருக்கும் போர்ஜரி பற்றி மத்திய நிதியமைச்சகம்தான் முடிவு செய்யவேண்டும் என்றும் கூறி பிரசாந்த் பூசணின் வழக்கை மொத்தமாகத் தள்ளுபடி செய்தது.

இதுதான் ரிலையன்ஸ் ஜியோவின் சுருக்கமான ஊழல் வரலாறு. இருப்பினும் அம்பானியின் கடைமுன் காத்திருக்கும் நடுத்தர வர்க்க கனவான்களைக் கேட்டால், ‘‘அம்பானி அயோக்கியன் என்பது எங்களுக்கும் தெரியும். திருடிய காசுதானே, இலவசமாக கொடுக்கும்போது அதை நாம் பயன்படுத்திக் கொள்வதில் என்ன தவறு இருக்கிறது?’’ என்று பதில் சொல்வார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் அன்னா ஹசாரேவின் ஆதரவாளர்களாக இருப்பார்கள் என்பதை விசாரித்துப் பார்த்தால் தெரிந்து கொள்ளலாம்.

> ரிலையன்சைப் பொருத்தமட்டில் டேட்டாதான் புதிய எண்ணெய். கச்சா எண்ணெயைச் சுத்திகரிக்கும்போது அதிலிருந்து பல்வேறு பயன்பாட்டுக்கான பொருட்கள் கிடைப்பதைப் போல, ஒரு வாடிக்கையாளரின் பல்வேறு டிஜிட்டல் தரவுகளை விற்பதன் மூலம் அதனைப் பணம் காய்ச்சி மரமாகப் பயன்படுத்த முடியும் என்பதே இதன் பொருள்.

**எலி ஏன் அம்மணமாக ஓட வேண்டும்?**

‘‘இலவசம் என எதுவும் இருக்கக் கூடாது குடி தண்ணீர் உள்ளிட்ட அனைத்துக்கும் ஒரு விலை இருக்க வேண்டும்’’ என்பது தனியார்மய சகாப்தத்தில் முதலாளித்துவத்தின் தத்துவம். அவ்வாறிருக்க மொபைல் சேவையை இலவசமாக அளிக்கும் தரும சிந்தனை முகேஷ் அம்பானிக்கு ஏன் வர வேண்டும்?

பெருநகரங்களில் ஷாப்பிங் மால்களில் உள்ள வைஃபை (கம்பியில்லா) இணைய இணைப்பு இலவசமாக வழங்கப்படுகிறது. இப்படி இலவசமாக வழங்கும் நிறுவனம், தனது இணைய இணைப்பை பயன்படுத்தும் வாடிக்கையாளர், என்ன பொருளைத் தேடுகிறார், என்னென்ன பொருட்களின் விலைகளை ஒப்பிட்டுப் பார்க்கிறார் என்பன போன்ற விவரங்களை வடிகட்டி, அந்த மாலில் உள்ள கடைகளுக்கு உடனுக்குடன் விற்பனை செய்கிறது. இதன் மூலம் மாலில் உள்ள கடைக்காரர்கள், குறிப்பிட்ட வாடிக்கையாளர் தங்கள் கடைக்குள் நுழைவதற்கு முன்பாகவே அவரது பர்சைக் காலி செய்வதற்கான திட்டத்துடன் தயாராக இருக்கின்றனர்.

ஒரு ஷாப்பிங் மாலில் நடக்கும் விவர (data) ஜேப்படியை நாடு முழுக்க விரிவுபடுத்தினால், அதற்குப் பெயர்தான் ரிலையன்ஸ் ஜியோ!

ரிலையன்ஸ் ஜியோ தனது செல்பேசி சேவையை 4ஜி அலைக்கற்றையில் செயல்படும் VoLTE (வோல்ட்) தொழில்நுட்பத்தின் அடிப்படையில் செயல்படும் வகையில் அறிமுகம் செய்துள்ளது. இந்த முறையில் இணையம் மற்றும் தொலைபேசி அலைப்புகள் அனைத்துமே இணைய நெறிமுறையின் (Internet protocol IP) அடிப்படையிலேயே செயல்படும். சுருக்கமாகச் சொன்னால், ஜியோவின் செல்பேசி சேவை மூலம் நீங்கள் பேசுவது, குறுஞ்செய்தி அல்லது மின்னஞ்சல் அனுப்புவது, முகநூல் உள்ளிட்ட சமூக வலைத்தள செயல்பாடுகள் அனைத்தும் மின் தரவுகளாக (data packets) மாற்றப்பட்ட பின்னரே கடத்தப்படுகின்றது. இவற்றைப் பதிவு செய்து சேமிப்பது எளிது. மேலும், பரிமாறிக் கொள்ளப்படும் செய்திகளை இடைமறிப்பதும், ஆய்வு செய்வதும் சேவை வழங்கும் ரிலையன்ஸ் நிறுவனத்துக்கு மிகவும் எளிது.

**‘டேட்டா’தான் புதிய எண்ணெய் !**

‘‘ரிலையன்சைப் பொருத்த மட்டில் டேட்டாதான் புதிய எண்ணெய்’’ என்றார் முகேஷ் அம்பானி. இந்த வாசகம் அம்பானியின் கண்டுபிடிப்பல்ல. சுமார் பத்தாண்டுகளுக்கு முன் பிரிட்டிஷ் கணித வல்லுநர் கிளைவ் ஹம்பி வெளியிட்ட கருத்து. தகவல் தொழில்நுட்ப யுகத்தின் தாரக மந்திரமே இந்த வாசகம். கச்சா எண்ணெயைச் சுத்திகரிக்கும்போது அதிலிருந்து பல்வேறு பயன்பாட்டுக்கான பொருட்கள் கிடைப்பதைப் போல, ஒரு வாடிக்கையாளரின் டிஜிட்டல் தரவுகளைச் சலித்துப் பிரித்து வகைப்படுத்தி விற்பதன் மூலம் அதனைப் பணம் காய்ச்சி மரமாகப் பயன்படுத்த முடியும் என்பதே இதன் பொருள்.



தம்மிடம் குவியும் டிஜிட்டல் டேட்டாக்களைக் கொண்டு ரிலையன்சால் என்ன செய்து விட முடியும்? ஆழ்தரவுப் பொட்டல ஆய்வு முறை (*Deep packet inspection*) ஒன்றைத் தங்கள் நிறுவனம் பின்பற்றுவதாக பத்திரிகை ஒன்றிடம் பீற்றிக் கொண்ட ரிலையன்ஸ் ஜியோவின் உயரதிகாரி ஒருவர், அதன் தொழில்நுட்ப சாத்தியங்கள் மலைக்கச் செய்வதாக உள்ளன என்று குறிப்பிட்டுள்ளார். இந்த ஆய்வின் மூலம் ஜியோ செல்பேசி சேவையைப் பயன்படுத்துபவர்களின் பேச்சு, செயல் உள்ளிட்ட நடவடிக்கைகள் அனைத்தையும் பதிவு செய்து, சேமித்து, பிரித்து ஆராய முடியும்.

ஏர்டெல், வோடஃபோன் உள்ளிட்ட நிறுவனங்கள் பயன்படுத்தும் பழைய தொழில்நுட்பத்திலும் உரையாடல்களை ஒட்டுக் கேட்கும் வசதி உள்ளது. எதிர்க்கட்சியினரையோ, 'பிரச்சினைக்குரியவர்களாக' அரசால் கருதப்படும் நபர்களையோ ஒட்டுக் கேட்பது தான் தற்போதுள்ள நடைமுறை. ஆனால், ஜியோவின் மூலம் கைபேசியை அல்லது இணையத்தை ஒருவர் பயன்படுத்தினால், அவரது எல்லாவிதமான நடவடிக்கைகளையும் பேச்சுகளையும் டிஜிட்டல் தரவுகளாக பதிவு செய்து வைத்துக் கொள்ளும்.

"வைத்துக் கொள்ளட்டுமே, நாம் என்ன பாராளுமன்றத்திற்கு குண்டு வைப்பது பற்றியா பேசப்போகிறோம்? எதற்குப் பயப்பட வேண்டும்?" என்று சிந்திக்கும் அளவுக்கு நீங்கள் அப்பாவியாக இருப்பீர்களேயானால், கேளுங்கள். உங்கள் வருமானம், கடன், சொத்து, உங்கள் வர்த்தக இரகசியங்கள், நீங்கள் வாங்கும் பொருட்கள் பற்றிய விபரம், உங்கள் மாதாந்திர மளிகை சாமான் பட்டியல், உங்கள் காதல், உங்கள் பிள்ளைகளின் கல்வி, உங்கள் குடும்பத்தினரின் நோய்கள், உங்கள் அரசியல் கருத்து, உங்களுக்கு விருப்பமான இசை, சினிமாக்கள் என அனைத்து தரவுகளும் அம்பானியின் கையில் இருக்கும். மொத்தத்தில் "நான்-எனது" என்று ஒரு மனிதன் சொல்லிக் கொள்ளத்தக்க அனைத்தும், உங்களுக்கு மட்டுமே சொந்தமான உங்கள் தரவுகள் அனைத்தும் அம்பானிக்கு சொந்தமாகி இருக்கும். வேறு வார்த்தைகளில் சொன்னால் உங்களுக்குத் தெரியாமலேயே நீங்கள் அம்பானியின் உடைமையாகியிருப்பீர்கள்.

"செயலி சார்ந்த பயன்பாட்டுச் சூழல்" (*App based ecosystem*) ஒன்றைப் படைக்கவுள்ளதாக அறிவித்துள்ளார் அம்பானி. அதன் பொருள், நமது அனைத்துப் பயன்பாடுகளும், செயல்களும், அன்றாட நடவடிக்கைகளும் அம்பானி வழங்கியுள்ள சில செயலிகளின் மூலமே நடக்கும் வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், செயலிகளே நமது தேவைகளையும் அவற்றைப் பூர்த்தி செய்யும் வழிவகைகளையும் நமக்கு வழங்கும். செயலிக்கு அப்பாற்பட்ட சொந்தத் தேர்வுகள் என எதுவும் இருக்க முடியாது இருக்கக் கூடாது என்பது அம்பானியின் திட்டம். அதாவது, இந்தியாவின் மொத்த நுகர்வுச் சந்தையையும் அம்பானி தனது பிடிக்குள் கொண்டு வர முடியும்.

**விளம்பரத் தூதர் மோடியின் கனவை நனவாக்குகிறார், விளம்பரதாரர் அம்பானி!**

இதனை வெறும் வணிகச் சந்தைக்கான ஆயுதம் என்று மட்டும் நினைக்க வேண்டாம். இன்னின்ன நபர்கள் இன்னின்ன கொள்கை உள்ளவர்கள், அதிலும் இவர்களெல்லாம் தீவிரமானவர்கள் என்று தரம் பிரித்து அவர்களை அரசுக்கு அடையாளம் காட்ட முடியும். அரசியல் எதிரிகளின் பலவீனங்களை அறிந்து அவர்களை முடக்கவும், அழிக்கவும் முடியும். உங்களது விருப்பங்கள், தெரிவுகள், ஆசைகள், எதிர்காலத் திட்டங்கள், உங்கள் நண்பர்கள் மற்றும் எதிரிகள் என சகலத்தையும் ரிலையன்ஸ் ஜியோ அறிய முடியும். மீப்பெரும் மின்தரவு ஆய்வு (*Big Data Analysis*) எனச் சொல்லப்படும் இந்த ஆய்வின் மூலம், நீங்கள் குறிப்பான ஒரு தருணத்தில் எடுக்கவிருக்கும் முடிவு என்னவாக இருக்கும் என்பதையும் ஏறத்தாழ கணிக்க (*Artificial Inteligence*) முடியும்.

அம்பானி என்ற முதலாளி இந்தியாவின் தகவல் தொழில்நுட்பத் துறையையே கட்டுப்படுத்த முடியும், நாட்டு மக்கள் அனைவரையும் வேவு பார்க்க முடியும் என்பது மோடிக்குத் தெரியாததல்ல.




உங்கள் வருமானம், கடன், சொத்து, காதல், அரசியல் கருத்து, இசை, சினிமாக்கள் என உங்களுக்கு மட்டுமே சொந்தமான உங்கள் தரவுகள் அனைத்தும் அம்பானிக்கு சொந்தமாகி இருக்கும். வேறு வார்த்தைகளில் சொன்னால், உங்களுக்குத் தெரியாமலேயே நீங்கள் அம்பானியின் உடைமையாகியிருப்பீர்கள்.

நாட்டு மக்களை தனது அடிமைகளாக மாற்றுவதற்கு முன், மோடியே தனது அடிமைதான் என்பதை நாட்டு மக்களுக்கு அறிவித்தார் அம்பானி. செப்டம்பர் 2-ஆம் தேதி ஆங்கில நாளேடுகளின் ஜியோ விளம்பரத்தில் பிரதமர் மோடி இடம் பெற்றிருந்ததை அனைவரும் காறி உமிழ்ந்தனர். ஆனால், மோடி கவலைப்படவில்லை.



ரிலையன்ஸ் ஜியோ உருவாக்கியிருக்கும் கழுத்தறுப்புப் போட்டியால் ஆடிப் போயுள்ள தரகு முதலாளிகள் (இடமிருந்து) ரிலையன்ஸ் இன்ஃபோகாம் நிறுவனத் தலைவர் அனில் அம்பானி, ஏர்டெல் நிறுவனத் தலைவர் சுனில் பாரதி மிட்டல்.

மோடியின் "டிஜிட்டல் இந்தியா" என்ற கனவை நனவாக்குவதே தனது லட்சியம் என்று அந்த விளம்பரத்தில் அறிவித்திருந்தார் அம்பானி. விளம்பரதாரர்கள்தான் தமது கனவை நனவாக்கிக் கொள்ள விளம்பரத் தூதர்களைப் பயன்படுத்துவார்கள். தன்னுடைய விளம்பரத்தூதரின் கனவை நனவாக்கும் பொறுப்பை அம்பானி எதற்காக ஏற்க வேண்டும்?

**"படுக்கையறையைத் தாளிடுவது அடிப்படை உரிமையல்ல"**
**– மோடியின் அட்டார்னி ஜெனரல்!**

ஏனென்றால், "டிஜிட்டல் இந்தியா" என்பது மோடி-அம்பானியின் கூட்டுக்கனவு. சமூக வலைத்தளங்களைக் கண்காணிக்கும் நோக்கத்தில், தேசிய ஊடக ஆய்வு மையம் (National Media Analytics Centre) அமைப்பது, இந்திய மக்கள் அனைவரிடமிருந்தும் கட்டாயமாக மரபணு மாதிரிகளைத் திரட்டுவது (DNA profiling) என்பன போன்ற திட்டங்களை உள்ளடக்கிய மோடியின் டிஜிட்டல் இந்தியா கனவின்படி, ஒவ்வொரு இந்தியனும் ஒரு எண் (டிஜிட்). அந்த எண்ணின் (அதாவது குடிமகனின்) நடவடிக்கைகள் குறித்த அத்தனை தரவுகளையும் கண்காணிப்பில் வைக்கும் ஏற்பாடுதான் டிஜிட்டல் இந்தியா.

ஆதார் அட்டைக்கு எதிரான வழக்கில், குடிமக்களின் கருவிழி மற்றும் ரேகைகளைப் பதிவு செய்வதென்பது அவர்களுடைய தனியுரிமையில் (Right to Privacy) தலையிடுவதாகும் என்று அரசுக்கு எதிரான வாதம் உச்ச நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட போது, "இந்திய அரசமைப்பு சட்டத்தின்படி குடிமக்களுக்கு தனியுரிமை கிடையாது" என்றார் மோடி அரசின் அட்டார்னி ஜெனரல். அதாவது, அரசாங்கம் குடிமக்கள் அனைவரையும் குற்றப் பரம்பரையாக நடத்தலாம், உங்கள் முகநூலை வேவு பார்க்கலாம், படுக்கையறையை எட்டிப் பார்க்கலாம்; அதுமட்டுமல்ல, அம்பானியும் உங்கள் தனிப்பட்ட தரவுகளை யாருக்கும் விற்கலாம் என்பதே இதன் பொருள். இவற்றையெல்லாம் தடுப்பதற்குரிய சட்டப் பாதுகாப்புகள்கூட இல்லாத நிலையில், மோடியின் டிஜிட்டல் இந்தியா என்ற கனவு, இந்தியர்களின் கொடுங்கனவாக மாறிவிடும் என்று பல அறிவுத்துறையினரும், டிஜிட்டல் தொழில்நுட்ப வல்லுநர்களும் ஏற்கனவே எச்சரித்திருக்கின்றனர்.

> உங்கள் தனிப்பட்ட தரவுகளை அம்பானி யாருக்கும் விற்கலாம். இதனைத் தடுப்பதற்குரிய சட்டப் பாதுகாப்புகள் இல்லாத நிலையில், மோடியின் டிஜிட்டல் இந்தியா என்ற கனவு, இந்தியர்களின் கொடுங்கனவாக மாறிவிடும் என்று பல அறிவுத்துறையினரும், டிஜிட்டல் தொழில்நுட்ப வல்லுநர்களும் எச்சரிக்கின்றனர்.

**பாசிசக் கொடுங்கனவு!**

கேளுங்கள்! இணையப் பயன்பாட்டில் சீனாவுக்கு அடுத்து உலகின் இரண்டாவது இடத்தில் இந்தியா இருக்கிறது. ஸ்மார்ட் போன் பயன்பாட்டில் அமெரிக்காவை விஞ்சி உலகின் முதல் இடத்தை அடுத்த ஆண்டில் பிடிக்கப்போகிறது. இந்தச் சூழலில்தான் இந்தியச் சந்தையை ஏகபோகமாகப் பிடிக்கப் பார்க்கிறது ரிலையன்ஸ் ஜியோ. பாசிசம் என்பதற்கு முசோலினி அளித்த விளக்கத்தை இங்கே நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். "பாசிசம் என்பதை கார்ப்பரேட்டிசம் என்ற சொல்லால் அழைப்பதே மிகவும் பொருத்தமானது. ஏனென்றால், பாசிசம் என்பது தனியார் குழும முதலாளித்துவத்தின் அதிகாரம், அரசு அதிகாரம் ஆகியவற்றின் ஒன்றிணைவைக் குறிக்கிறது" என்றான் முசோலினி.

இது பனியாவின் ஏகபோகமும் பார்ப்பன பாசிசமும் இணைந்த கொடுங்கனவு. ஜியோ என்ற இந்திச் சொல்லுக்கு வாழ்ந்துகொள் என்று பொருள். அடிமை வாழ்க்கையை இந்தியர்களுக்கு வழங்குகிறார் அம்பானி இலவசமாக!

• • •

**பின்குறிப்பு:**

அனானிமஸ் ஹேக்கர்ஸ் எனும் இணையதளம் ரிலையன்ஸ் ஜியோ வழங்கும் செயலிகளின் மூலம் களவாடப்படும் நமது தனிப்பட்ட தகவல்கள் சிங்கப்பூர் மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த விளம்பர நிறுவனங்களுக்கு விற்கப்படுவதை சமீபத்தில் அம்பலப்படுத்தியிருக்கிறது. மோடி-அம்பானியின் கூட்டுக்கனவு மெய்ப்படத் தொடங்கிவிட்டது.

● **சாக்கியன்**

# ஆர்.எஸ்.எஸ்.-இன் பார்ப்பனக் குசும்பு!

**மாவலி மன்னன் நினைவாகக் கொண்டாடப்பட்டு வரும் ஓணம் பண்டிகையை, அந்த அசுர குல அரசனைச் சதி செய்து கொன்ற வாமன அவதாரத்தின் நினைவாகக் கொண்டாடக் கூறுகிறது, ஆர்.எஸ்.எஸ்.**

கடந்த மாதம் கேரள மக்களால் கொண்டாடப்பட்ட ஓணம் பண்டிகைக்கு வாழ்த்துத் தெரிவித்த பா.ஜ.க.வின் தலைவர் அமித் ஷா, ‘‘கேரள மக்களுக்கு இனிய வாமன ஜெயந்தி நல்வாழ்த்துக்கள்’’ என்று தனது முகநூல் மற்றும் ட்விட்டர் பக்கங்களில் பதிவிட்டிருந்தார். ஆர்.எஸ்.எஸ்.-இன் அதிகாரப்பூர்வ மலையாள இதழான கேசரியும் தனது ‘‘ஓணம் சிறப்பித’’ழில் இதே கருத்தைப் பதிவு செய்திருந்தது. மாவலி மன்னனின் மறுவருகையை வரவேற்கும் ஓணம் பண்டிகையை, வாமனன் அவதரித்த நாளாக மடை மாற்ற முயலும் ஆர்.எஸ்.எஸ். கும்பலின் இப்பார்ப்பனக் குசும்புத்தனத்தைப் பெரும்பான்மையான கேரள மக்களும் ஓட்டுக் கட்சிகள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளும் உடனடியாகக் கண்டித்துக் கருத்துக்களை வெளியிட்டன.

ஓணம் பண்டிகை மற்ற இந்து மதப் பண்டிகைகளிலிருந்து மாறுபட்ட தொன்மத்தைக் கொண்டதாகும். ‘‘கேரளத்தை ஆண்டு வந்த மாவலி என்னும் அசுரகுல மன்னரின் ஆட்சியின்கீழ் மக்கள் பேதமின்றியும் மகிழ்ச்சியாகவும் வாழ்ந்து வந்தனர். ஒரு அசுரகுல மன்னனின் ஆட்சியில் மக்கள் மகிழ்ச்சியோடு இருப்பதைக் கண்டும்,

பா.ஜ.க. தலைவர் அமித் ஷா, மாவலியின் நினைவாகக் கொண்டாடப்படும் ஓணம் பண்டிகையை வாமன ஜெயந்தி எனக் குறிப்பிட்டுத் தெரிவித்த வாழ்த்துச் செய்தி.




மாவலிக்கு மக்கள் மத்தியில் இருந்த அன்பையும் ஆதரவையும் கண்டும் கொதித்துப் போன தேவர்கள், மாவலியை வீழ்த்த விஷ்ணுவிடம் சென்று வேண்டினர். மாவலி தனது யாகத்திற்காகத் தானம் செய்து கொண்டிருந்த சமயத்தில் அங்கு வாமன அவதாரம் எடுத்து வந்த விஷ்ணு தமக்கு மூன்றடி நிலம் வேண்டும் என யாசகம் கேட்டார். மாவலியின் ராஜகுருவான சுக்கிராச்சாரியார், வந்திருப்பது விஷ்ணு என்றும் அவரது சதித் திட்டத்திற்கு பலியாக வேண்டாம் என்றும் மாவலியிடம் எச்சரித்தார். ஆனால், யாசகம் கேட்டு வந்தவற்கு இல்லை என்று தம்மால் சொல்ல முடியாது என்று கூறி, சுக்ராச்சாரியரின் எச்சரிக்கையை மறுதலித்த மாவலி மன்னன், மூன்றடி நிலத்தைக் கொடுக்கச் சம்மதித்தார். குள்ளமாக வாமன வடிவத்தில் வந்த விஷ்ணு விஸ்வரூபம் எடுத்து, ஒரு அடியில் பூமியையும், இரண்டாவது அடியில் வானத்தையும் அளந்து மூன்றாவது அடிக்கு இடம் கேட்டார். மூன்றாவது அடியைத் தனது தலை மேல் வைக்குமாறு மாவலி கூறினார். இதற்காகவே காத்திருந்த விஷ்ணு மாவலியின் தலையில் கால் வைத்து அழுத்தி, அவரைப் பாதாளத்திற்குள் தள்ளினார். அப்போது மாவலி விஷ்ணுவிடம், தாம் ஆண்டுக்கொருமுறை தமது குடிமக்களைக் காண பூமிக்கு வந்து செல்ல அனுமதித்து வரமளிக்க வேண்டினார். விஷ்ணுவும் அவ்வரத்தை மாவலிக்கு அளித்தார்’’ என்பதுதான் ஓணம் பண்டிகையின் பின்னுள்ள புராணக் கதை.

இப்புராணக்கதையின்படி, ஒவ்வொரு ஆண்டும் ஆவணி மாதத்தில், திருவோண நட்சத்திர நாளன்று மாவலி மன்னன் தனது குடிமக்களைக் காண வருவது ஓணம் பண்டிகையாகக் கொண்டாடப்படுகிறது. அன்றைய தினத்தில் கேரள மக்கள் மாவலி மன்னனை வரவேற்க, தங்களின் வீட்டின் முன்பு அத்தப்பூக் கோலமிட்டு, பல்வேறு வகை

யான உணவு வகைகளைச் செய்து படையல் இடுகின்றனர்.

விஷ்ணுவின் அவதாரங்கள் அசுரர்களை வதம் செய்ய எடுக்கப்பட்டவை என்றாலும், அந்த அவதாரங்களிலேயே அயோக்கியத்தனமானது வாமன அவதாரம் தான். ஏனெனில், மற்ற அவதாரங்களில் எல்லாம் தேவர்களுக்கு ‘கொடுமை’ செய்த அசுரர்களைத்தான் விஷ்ணு வதம் செய்வதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், பார்ப்பனப் புராணப்படியே மக்கள் நலம் பேணும் மன்னனாகச் சித்தரிக்கப்பட்ட அசுர குலத்தைச் சேர்ந்த மாவலியை விட்டு வைப்பது தமக்கு ஆபத்து எனக் கருதிய தேவர்கள், விஷ்ணுவோடு கூட்டணி வைத்துக்கொண்டு, தந்திரமாக அம்மன்னனை வீழ்த்திய அயோக்கியத்தனம் தான் வாமன அவதாரம்.

நரகாசுரன், மகிசாசுரன் போன்ற அசுரர்களைப் பார்ப்பனக் கடவுளர்கள் கொலை செய்ததைப் போற்றி தீபாவளி, துர்கா பூஜை உள்ளிட்ட இந்துமதப் பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன. வெற்றி பெற்ற பார்ப்பனக் கடவுளர்கள்தான் அந்தப் பண்டிகையின் நாயகர்கள். ஆனால் ஓணம் பண்டிகையோ, பார்ப்பனக் கடவுளின் சதியால் கொல்லப்பட்ட அசுர குலத்தைச் சேர்ந்த மாவலியை நினைவுகூர்ந்து வரவேற்கும் நாளாகக் கொண்டாடப்படுகிறது. ஓணம் பண்டிகையின் நாயகனாக அசுரகுல மன்னன் இருப்பதை உறுத்தலாகக் கருதும் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனக் கும்பல், அதன் காரணமாகவே ஓணம் பண்டிகைக்கு வாமன ஜெயந்தி என வாழ்த்துத் தெரிவித்து, அப்பண்டிகையின் குறிபொருளையே மாற்றிவிடச் சூழ்ச்சி செய்கிறது.

இந்துமதப் புராணங்களால் கொடுங்கோலர்களாக சித்தரிக்கப்படும் அசுரர்களை, இந்தியாவின் பல்வேறு பகுதியைச் சேர்ந்த மக்கள் தங்களின் குல தெய்வங்களாக வழிபடுகின்றனர். அவ்வகையில், இராமனால் கொல்லப்பட்ட இராவணனை ஜார்கண்டைச் சேர்ந்த பழங்குடி இன மக்களும், துர்க்கையால் நைச்சியமாகக் கொல்லப்பட்ட மகிசாசுரனை சந்தால் பழங்குடி இன மக்களும் குல தெய்வமாகப் போற்றி வருகின்றனர். கேரளத்திலோ பார்ப்பனர் உள்ளிட்ட எல்லாச் சாதியினரும் மாவலியை கொண்டாடுகிறார்களேயன்றி, வாமனனைக் கொண்டாடுவதில்லை.

தனது கருத்துக்குக் கேரள மக்களிடமிருந்து எதிர்ப்புக் கிளம்பியதும், தன்னைத் தற்காத்துக் கொள்ளும் சாக்கில், ‘‘கேரளாவில் உள்ள வாமன கோவிலில் மக்கள் அன்றாடம் வழிபடுவதால், வாமன ஜெயந்தி வாழ்த்துக்கள் கூறியதில் தவறு ஏதும் இல்லை’’ என்று பா.ஜ.க. கேரள மாநிலத் தலைவர் கும்மனம் ராஜசேகரன் தந்திரமான அறிக்கை அளித்தார். மேலும், மாவலியை நினைவுகூரும்போது வாமன அவதாரத்தை நினைவுகூராமல் இருக்க முடியுமா என்ற அடிமுட்டாள்தனமாகவும் சமாளிக்க முயன்றது ஆர்.எஸ்.எஸ்.



வாமனனின் சூழ்ச்சி தெரிந்தும் அவனுக்கு வரம் கொடுத்த மாவலியை நேர்மையாளன் என்றோ, ஏமாளி என்றோ சொல்லலாம். ஆனால், ஆரிய-பார்ப்பன கருத்துத் திணிப்பைப் பட்டும் படாமலும் விமர்சித்து, அமித் ஷாவுக்குச் சலுகை வழங்கும் ஓட்டுக் கட்சிகளை என்னவென்று அழைப்பது?

இரண்டாம் உலகப் போர் என்றால் ஹிட்லர் நினைவு வரத்தான் செய்யும். இந்திய சுதந்திரப் போராட்டத்தை எடுத்துக்கொண்டால், ஆங்கிலேயர்களைப் பற்றியும் சொல்லத்தான் நேரிடும். ஆர்.எஸ்.எஸ். கும்பலின் வாதப்படிப் பார்த்தால், இந்த வில்லன்களைத்தான் கொண்டாட வேண்டும். அதனுடைய வாதம் எவ்வளவு அபத்தமானது என்பதைக் கூட காணவியலாத அளவிற்கு ஆரிய - பார்ப்பன வெறி ஆர்.எஸ்.எஸ். கும்பலின் கண்களை மறைக்கிறது.

இது மட்டுமின்றி, கேரளாவில் இசுலாமியர்கள், கிறிஸ்தவர்கள், தலித்துகள், சாதி இந்துக்கள் - எனப் பெரும்பாலான மக்களின் பொதுவான உணவாக மாட்டுக்கறி இருந்துவரும்வேளையில், மாட்டுக் கறிக்குத் தடை கோரி கேரளாவில் பரப்புரை செய்து வருகிறது, பா.ஜ.க. கேரள மக்களின் பாரம்பரியம், பண்பாடு இதனையெல்லாம் கருத்தில் கொள்ளாமல், தனது ஆரிய-பார்ப்பன கருத்தியலையும், பண்பாண்டையும் திணிப்பதிலே ஆர்.எஸ்.எஸ். கும்பல் குறியாக இருப்பதைத்தான் இந்த நிகழ்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.

தன்னுடைய ஆரிய-பார்ப்பன வெறியைப் புரிந்து கொள்ள ஆர்.எஸ்.எஸ் கும்பலே கேரள மக்களுக்கு ஒரு வாய்ப்பை வழங்கியிருக்கிறது. இருந்த போதிலும், காங்கிரசு முதல் மார்க்சிஸ்டுகள் வரையிலான யாரும் இதனைப் பயன்படுத்திக் கொள்ளாமல், ‘‘அமித் ஷாவின் கருத்து கேரள மக்களிடையே நிலவும் நல்லிணக்கத்துக்கு ஊறு விளைவிப்பதாக’’ மொன்னையாக கருத்து தெரிவித்திருக்கின்றனர். வாமனனின் சூழ்ச்சி தெரிந்தும் அவனுக்கு வரம் கொடுத்த மாவலியை நேர்மையாளன் என்றோ, ஏமாளி என்றோ சொல்லலாம். அமித் ஷாவுக்குச் சலுகை வழங்கும் இவர்களை என்னவென்று அழைப்பது?

● அழகு

# “பசுத்தோல்” போர்த்திய காவி கிரிமினல்கள்!

**பசுப் பாதுகாப்பு என்ற பெயரில் கொலை, கொள்ளை, வன்புணர்ச்சி உள்ளிட்ட எல்லாக் குற்றங்களையும் இழைப்பதற்கு ஆர்.எஸ்.எஸ். காலிகளுக்கு லைசென்சு வழங்கியிருக்கிறது, மோடி அரசு.**

அரியானா மாநிலம் மேவாத் மாவட்டத்தின் தின்கர்ஹெரி கிராமத்தில் ஒரு முசுலீமின் வீட்டிற்குள் நள்ளிரவு நேரத்தில் அத்துமீறி நுழைந்த பசு பாதுகாப்பு இந்து மதவெறிக் கும்பலொன்று அவர்களிடம், “ஈத் பண்டிகைக்கு மாட்டுக் கறி சாப்பிடுவியா?” - என வக்கிரமாகவும் வன்மத்தோடும் கேட்டு, அக்குடும்பத்தைச் சேர்ந்த இருவரைக் கொலை செய்து, இருவரைக் கொடுங்காயம் ஏற்படும் வண்ணம் அடித்துத் துன்புறுத்தி, சிறுமி உட்பட இரண்டு பெண்களைக் கும்பல் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கி, மிகக் கொடூரமான வெறியாட்டத்தை நடத்தி முடித்திருக்கிறது.

கடந்த ஆகஸ்ட் 24 அன்று நள்ளிரவில் நடந்த இத்தாக்குதலில் விவசாயக் கூலி வேலை செய்து வரும் ஏழை முசுலீமான இப்ராஹிம் மற்றும் அவரது மனைவி ரஷீதா இருவரும் இந்து மதவெறிக் கும்பலால் இரும்புக் கம்பிகள் மற்றும் மரக்கட்டைகளால் துடிக்க துடிக்க அடித்துக் கொல்லப்பட்டனர். வீட்டினுள் உறங்கிக் கொண்டிருந்த இப்ராஹிமின் உறவினர்களான ஆயிஷாவும் மற்றும் அவரது கணவர் ஜாஃப்ருதீனும் கொடூரமாகத் தாக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து, ஜாஃப்ருதினின் பதினான்கே வயதான சிறுமி சாஃபியா (பெயர் மாற்றப்பட்டுள்ளது) மற்றும் மற்றொரு உறவுக்கார பெண் சமீனா (பெயர் மாற்றப்பட்டுள்ளது) இக்கும்பலால் பாலியல் வல்லுறவுக்குள்ளாப்பட்டுள்ளனர். ஆயிஷாவும் ஜாஃப்ருதீனும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதில், ஜாப்ருதீன் கோமா நிலையில் இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்து மதவெறிக் கும்பலால் கொலை, பாலியல் வல்லுறவு உள்ளிட்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதலுக்கு ஆளான முசுலீம் பெண்கள்.



“ஐந்து பேர் எங்கள் அறைக்குள் நுழைந்தார்கள். என் துப்பட்டாவை கொண்டு வெளியில் இருப்பவர்களைக் கட்டினார்கள். நாங்கள் மாட்டுக்கறி சாப்பிட்டதாகவும் அதற்காகத் தண்டிக்கப் படவிருப்பதாகவும் கூறி மிரட்டினார்கள். நான் தப்பித்து ஓட முயன்றேன். ஆனால், என் குழந்தையின் கழுத்தில் கத்தியை வைத்துக் கொலை செய்துவிடுவதாக மிரட்டி, என்னைப் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கினர். என் அறையில் இருந்த என் மாமாவின் 14 வயதான மகளையும் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கினர்” என இக்கொடூரத்தை நாதழுதழுக்க விவரிக்கிறார், சமீனா.

“இப்பெண்கள் போலீசில் புகார் அளித்த பின்னரும் கூட கொலை மற்றும் பாலியல் வன்முறை பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யவில்லை. மாறாக, அத்துமீறி நுழைதல், திருட்டு ஆகிய பிரிவுகளில் மட்டுமே வழக்கு பதிவு செய்யப்பட்டது. வழக்குரைஞர்களும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைச் சமூக ஆர்வலர்களும் கொடுத்த அழுத்தத்திற்கு பிறகுதான் சம்பந்தப்பட்ட பிரிவுகளில் வழக்கு பதிவு செய்தனர்” என்கிறார் ஜனதா தளம் கட்சியின் எம்.பி. அன்வர் அலி.

சமூக செயற்பாட்டாளர்களான சப்னம் ஹஷ்மி மற்றும் அன்வர் அலி ஆகியோர் பாதிக்கப்பட்ட பெண்களை டெல்லிக்கு அழைத்து வந்து பத்திரிகையாளர் சந்திப்பு நடத்திய பிறகே இக்கொடூரம் ஊடகங்களில் வெளியானது.

பத்திரிகையாளர் சந்திப்பில் குற்றவாளிகளின் முகநூல் பதிவுகளை வெளியிட்ட சப்னம் ஹஸ்மி, குற்றவாளிகளின் அரசியல் பின்புலம் காரணமாக அவர்கள் பாதுகாக்கப்பட சாத்தியம் இருக்கிறது என எச்சரித்தார். அவர் வெளியிட்ட முகநூல் பதிவுகளில் குற்றவாளிகளில் ஒருவனான ராகுல் வர்மா, “தான் கடந்த ஏப்ரல் முதல் ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் வேலை

செய்துவருவதாக''க் குறிப்பிட்டுள்ளான். மற்றொரு குற்றவாளி ராவ், மோடியின் புகைப்படத்துடன், ''முஸ்லீம்கள் போய் விட்டார்கள்'' எனப் பதிவிட்டுள்ளான்.

இச்சம்பவம் குறித்து அரியானாவின் பா.ஜ.க. முதல்வர் கட்டாரிடம் கேட்கப்பட்ட போது, ''இது போன்ற அற்ப விசயங்களில் நான் அதிக கவனம் கொடுப்பதில்லை'' என்று திமிராகப் பேசி, இத்தாக்குதலை மறைமுகமாக நியாயப்படுத்தினார்.



ஏழை முசுலீம் குடும்பத்தினர் மீது நடத்தப்பட்ட இந்து மதவெறித் தாக்குதலை அற்ப விசயமாக ஒதுக்கித் தள்ளிய அம்மாநில முதல்வர் மனோகர் லால் கட்டாரைக் கண்டித்து ஆல்வார் நெடுஞ்சாலையில் நடந்த சாலை மறியல்.

போலீசாகவும் நீதிமன்றமாகவும் நியமித்துக்கொண்டிருக்கிறார்கள். மைய அரசு, அதன் அமைச்சர்களின் வேலையே இத்தாக்குதலை நியாயப்படுத்துவது, குற்றவாளிகளைப் பாதுகாப்பதாக உள்ளன. குறிப்பாக, அரியானா அரசின் அமைச்சர் ராம் பிலாஸ் ஷர்மா, பசு பாதுகாப்பு என்ற முகாந்திரத்தில் நடத்தப்படும் தாக்குதல்களை இந்து சமுதாயம் விழிப்படைந்து வருவதற்கான உதாரணங்களாகக் கூறுகிறார்.

கடந்த ஆண்டு அரியானாவில் பா.ஜ.க. ஆட்சி பொறுப்பேற்றதும் அம்மாநிலத்தில் அதுவரை அமலில் இருந்த பசுவதை தடைச் சட்டத்தை மேலும் கடுமையாக்கி, 10 ஆண்டு சிறைத் தண்டனையும் 1 லட்ச ரூபாய் அபராதமும் விதிக்கக் கூடியதாக அச்சட்டத்தை மாற்றியமைத்தது. அது முதல் அம்மாநிலத்தில் பசுப் பாதுகாப்பு குழுக்கள் என்ற பெயரில் இந்து மதவெறி குற்றக் கும்பல்களின் எண்ணிக்கை பல்கிப் பெருகி, அக்கும்பல் நடத்தும் தாக்குதல்களும் அதிகரித்து வருகின்றன.

அரியானாவில் கடந்த ஜூலை மாதம் மாட்டுக் கறியை கடத்தியதாகக் கூறி இரண்டு முஸ்லீம்கள் வாயில் மாட்டுச்சாணியைத் திணித்து, வீடியோவில் பதிவு செய்து, அதனைச் சமூக வலைத்தளங்களில் பரப்பினார்கள். பசுப் பாதுகாப்பு என்ற பெயரில் வாகனங்களைச் சோதனையிடுவது, தாழ்த்தப்பட்டோரையும் முஸ்லீம்களையும் தாக்குவது, பணம் பறிப்பது, பாலியல் வன்முறை செய்வது உள்ளிட்டு நகர்புறத்து சல்வாஜூடுமாகச் செயல்பட்டு வருகின்றன, இக்குற்றக் கும்பல்கள்.

அரியானா அரசும் பசு பாதுகாப்பு கும்பலும் கூட்டுச் சேர்ந்துகொண்டு பக்ரீத் பண்டிகையையொட்டித் தெருவோர பிரியாணி கடைகளில் பசு மாமிசம் இருப்பதாகக் கூறிச் சோதனைகளை நடத்தி மக்களிடம் பீதியை ஏற்படுத்தின. இவற்றின் நீட்சியாகத்தான் இப்ராஹிம் குடும்பத்தினர் மீது கொலை மற்றும் கும்பல் பாலியல் வல்லுறவு தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

மாட்டுக்கறி முகாந்திரத்தை வைத்து எந்தக் குற்றத்தையும் செய்யலாம் என்ற நிலைமையை நாடெங்கும் ஆர்.எஸ்.எஸ்.-இன் ஆசி பெற்ற மோடி அரசு உருவாக்கியிருக்கிறது. பசு பாதுக்காப்பு என்பதை வைத்துக் கொண்டு பல்வேறு பெயர்களில் உருவாக்கப்பட்டு, நடமாடவிடப்பட்டிருக்கும் இந்து மதவெறி அமைப்புகள், சட்டத்தின் ஆட்சி என்று அவர்களே சொல்லிக்கொள்ளும் மாண்புகள் அனைத்தையும் தூக்கி கடாசிவிட்டு, தங்களைத் தாங்களே சட்டமாகவும் போலீசும், நீதிமன்றமும் இக்குற்றக் கும்பல்களுக்குப் பாதுகாப்பாகச் செயல்படுவதோடு, பாதிக்கப்பட்டவகளையே குற்றவாளியாக்குகிறது. குறிப்பாக, உ.பி. யில் தாத்ரி பகுதியில் பசுவைக் கொன்று அதன் மாமிசத்தைச் சாப்பிட்டதாகக் குற்றஞ்சுமத்தப்பட்டு, தாக்கிக் கொல்லப்பட்ட அக்லக் குடும்பத்தினர் மீது பசுவதைத் தடைச் சட்டத்தின்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. உ.பி. மாநில நீதிமன்றத்தாலும், போலீசாலும் அக்லக் குடும்பத்திற்கு இழைக்கப்பட்டுள்ள அநீதியை உச்சநீதி மன்ற நீதிபதிகளின் கவனத்திற்குக் கொண்டு சென்றுள்ள முன்னாள் உச்சநீதி மன்ற நீதிபதி மார்க்கண்டேய கட்ஜு, ''இந்த உண்மை உங்களுக்கு எட்டவில்லையா? இப்படி நடப்பது குறித்து நீங்கள் வெட்கப்படவில்லையா? நீங்கள் அனைவரும் நம்பிக்கை துரோகிகளா? இரண்டாம் உலகப் போர் முடிந்த பிறகு நாஜிக்களுக்கு ஆதரவாகச் செயல்பட்ட நீதிபதிகள் விசாரிக்கப்பட்டதை நீங்கள் மறந்துவிடாதீர்கள்'' எனக் கடுமையாகச் சாடியும் எச்சரித்தும் மின்னஞ்சல் அனுப்பியிருக்கிறார்.

சென்னை ஐ.ஐ.டி.யில் பெரியார்-அம்பேத்கர் படிப்பு வட்டத்தின் மீது விதிக்கப்பட்ட தடை, ஹைதராபாத் பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவர் ரோஹித் வெமுலா தற்கொலை தொடங்கி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர்கள் மீது ராஜதுரோக வழக்கு பாய்ச்சப்பட்டது வரை; சமஸ்கிருத வாரம் தொடங்கி புதிய கல்விக் கொள்கை வரை; தாத்ரியில் அக்லக் படுகொலை செய்யப்பட்டது தொடங்கி ஊனாவில் தாழ்த்தப்பட்டோர் மீது நடத்தப்பட்ட தாக்குதல், மேவாட்டில் விவசாயக் கூலியான இப்ராஹிம் குடும்பத்தினர் மீது நடத்தப்பட்ட கொலை, பாலியல் வல்லுறவு ஈறாக - இவையாவும் அரசின் உறுப்புகள் அனைத்தும் மிகமிக வேகமாக பார்ப்பன பாசிசமயமாகிவருவதை எடுத்துக்காட்டுகின்றன. இந்த அபாயத்தைத் தடுத்து நிறுத்தவும், வீழ்த்தி முறியடிக்கவும் நாம் தேர்ந்தெடுக்க வேண்டிய பாதை என்ன என்பதுதான் நம் முன்னுள்ள சவால்.

● அமலன்

# இரோம் சர்மிளா: கோபுரத்தைத் தாங்குவதாகக் கருதிக்கொண்ட பொம்மை!

**தன்னை முதல்வராக்கவில்லையென்றால், ஆயுதப் படைகள் சிறப்பு அதிகாரச் சட்டத்திலிருந்து விடுதலை பெற மக்கள் விரும்பவில்லை என்றே பொருள் எனப் பேசியிருக்கிறார் சர்மிளா. இது தன்னுடைய வீழ்ச்சிக்கு அவரே அளித்துள்ள ஒப்புதல் வாக்குமூலம்.**

கேஜ்ரிவாலைச் சந்தித்திருக்கிறார் இரோம் சர்மிளா. ஆகஸ்டு 9-ஆம் தேதியன்று தனது 16 ஆண்டு கால உண்ணாநிலைப் போராட்டத்தை முடித்துக் கொண்டபோது, தனது போராட்டம் தோல்வியடைந்து விட்டதாகவும், போராட்ட முறையை மாற்றி, தேர்தலில் போட்டியிட்டு மணிப்பூர் முதல்வராகி, அதன் மூலம் தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளப் போவதாகவும் பத்திரிகையாளர்களிடம் அவர் அறிவித்தார். அதன் தொடர்ச்சியே கேஜ்ரிவாலுடனான இந்தச் சந்திப்பு.

அதாவது, டில்லி போலீசு கான்ஸ்டபிளின் மீது கூட நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரமில்லாத நிலையில் உள்ள கேஜ்ரிவாலிடம், இராணுவத்தின் மீது நடவடிக்கை எடுப்பதற்கான வழியை சர்மிளா கேட்டறியப் போகிறார் என்றும் இந்த சந்திப்புக்குப் பொருள் கொள்ளலாம்.

குறிப்பிட்ட அரசியல் - சமூக சூழ்நிலையைப் புரிந்து கொள்ளாத போராட்ட முறைகளும், தீர்வுகளும் அவற்றை முன்னெடுக்கின்ற நல்லெண்ணம் கொண்ட மனிதர்களை எங்ஙனம் பரிதாபத்துக்குரிய வகையில் ஒரு சுழலில் சிக்க வைத்து விடுகின்றன என்பதற்கு இரோம் சர்மிளா ஒரு எடுத்துக்காட்டு.

நாசித்துவாரமே உணவுக்குழலாக மாற்றப்பட்ட நிலையில், நாவில் ஒரு சொட்டுத் தண்ணீர்கூடப் படாமலும் மருத்துவமனையின் நிரந்தரத் தனிமையிலும் 16 ஆண்டு காலம் தாக்குப்பிடித்து நின்ற அந்தப் பெண்ணின் உறுதி மணிப்பூர் மக்களுக்குப் பெருமை சேர்த்தது. சர்மிளாவின் 16 ஆண்டு கால உண்ணாநிலைப் போராட்டம், ஆயுதப்படைகள் சிறப்பு அதிகாரச் சட்டம் என்ற கருப்புச் சட்டத்தையும், அந்த சட்டத்தை நியாயப்படுத்துகின்ற அதிகார வர்க்கம், ஓட்டுக் கட்சிகள், நீதிமன்றம் உள்ளிட்ட இந்த அரசமைப்பையும் கேள்விக்குள்ளாக்கும் போராட்டமாக அது இருந்தது.

இன்னொருபுறம், அந்தப் போராட்டம் நிறுவனமயமாகிக் கொண்டும் இருந்தது. மணிப்பூர் அரசின் அங்கமாகவே இந்திய இராணுவம் மாற்றப்பட்டிருப்பதைப் போலவே, இராணுவச் சட்டத்துக்கு எதிரான சர்மிளாவின் போராட்டத்தையும் இந்திய அரசு நிறுவனமயமாக்கியது. ஆண்டுக்கு ஒரு முறை சர்மிளா விடுவிக்கப்படுவதும், மீண்டும் கைது செய்யப்படுவதும், அன்றைக்கு மட்டும் தொலைக்காட்சி காமெராக்கள் அவரை மொய்ப்பதும், காலப்போக்கில் ஒரு சடங்கிற்குரிய உணர்ச்சியற்ற நிலையை எய்தி விட்டன.

இந்த நிலையில்தான், சர்மிளா போராட்டத்தைக் கைவிடுவது என்ற முடிவை எடுத்திருக்கிறார்.

### சர்மிளாவின் உயிரைப் பாதுகாப்பதற்கா? மக்களின் உயிர்வாழும் உரிமையைப் பறிப்பதற்கா?

மணிப்பூரில் ஒரு இலட்சம் இராணுவத் துருப்புகள் - பல பத்து ஆயுதக் குழுக்கள் - 80 விழுக்காடு வாக்குகள் பதிவாகும் சட்டமன்றத் தேர்தல் - அரசு அதிகாரத்திலமர்ந்து கொண்டே, ஆயுதக்குழுக்களுடன் இரகசிய உறவு வைத்துக் கொள்ளும் கட்சிகள் என முரண்பட்டவை போலத் தோற்றம் தரும் பல போக்குகள், தமக்குள் ஒரு ஒத்திசைவை எய்தியிருந்த பின்புலத்தில், இரோம் சர்மிளாவின் போராட்டத்தை நாம் பார்க்கவேண்டும்.

ஐந்து மருத்துவர்கள், 12 செவிலியர்கள், 2 சிறைத்துறை மருத்துவ அதிகாரிகள் மற்றும் போலீசார் அடங்கிய சுமார் 40 பேர் அடங்கிய குழு சர்மிளாவைப் பராமரித்து வந்தது. அவரது மூக்கு வழியாக உட்செலுத்தப்பட்ட ஊட்டச்சத்து உணவுக்காக மட்டும் மணிப்பூர் அரசு மாதம் 10,000 ரூபாய் செலவிட்டிருக்கிறது. இத்துடன் மேற்கூறிய 40 அலுவலர்களின் ஊதியத்தையும் சேர்த்துக் கணக்கிடுவோமேயானால், இரோம் சர்மிளாவைப் பராமரிக்கும் பொருட்டு அரசு ஆண்டுதோறும் சில கோடிகளைச்

நாவில் தேனைத் தடவித் தனது உண்ணாவிரதப் போராட்டத்தை முடித்துக் கொள்ளும் இரோம் சர்மிளா.



செலவிட்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இந்தச் செலவு மணிப்பூர் மக்களின் உயிர்வாழும் உரிமைக்காகப் போராடிய சர்மிளாவின் உயிரைப் பாதுகாப்பதற்கான செலவு அல்ல; மணிப்பூர் மக்களின் உயிர்வாழும் உரிமையைப் பறிப்பதற்கு இந்திய அரசு பெற்றிருக்கும் அதிகாரத்தின் தார்மீக நியாயத்தை நிலை நிறுத்திக் கொள்வதற்கானது. இது சர்மிளாவின் போராட்டத்திற்கு அரசு அளித்த மதிப்பு அல்ல, அவமதிப்பு.


டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கேஜ்ரிவாலைச் சந்தித்து உரையாடும் இரோம் சர்மிளா

இந்த உண்மை இரோம் சர்மிளாவுக்கு 16 ஆண்டுகளுக்குப் பின்னர் இப்போதுதான் புரிந்திருக்கிறது என்று கூறவியலாது. 16 ஆண்டுகளுக்கு முன் மைலோம் படுகொலையின் கொடூரத்திற்கு எதிர்வினையாக சர்மிளா தொடங்கிய போராட்டம் என்பது ஒரு இளம்பெண்ணின் உணர்ச்சிபூர்வமான எதிர்வினை. தான் நடத்தும் போராட்டம் ஆயுதப்படைகள் சிறப்பு அதிகாரச் சட்டத்தை அகற்றும் வல்லமை பெற்றதா என்று யோசித்து தொடங்கப்பட்டதல்ல அந்தப் போராட்டம். ஆனால் இன்று அவர் எடுத்திருப்பது நன்கு யோசித்து எடுக்கப்பட்டிருக்கும் முடிவு.

**போகாத ஊருக்கு வழி என்பது**
**போராட்ட வடிவம் குறித்த பிரச்சினை அல்ல!**

ஒரு போராட்ட வடிவம் பயனற்றது என்றோ, நிறுவனமயமாகிவிட்டது என்றோ புரிந்து கொண்டவுடனே பொருத்தமான மாற்று வடிவம் தெரிவு செய்யப்பட்டு விடுவதில்லை. உண்ணாநிலைப் போராட்டம் தோற்றுவிட்டதால், தேர்தலில் நிற்கப் போவதாகவும், போராட்ட வடிவத்தை மாற்றியிருப்பதாகவும் கூறியிருக்கிறார் சர்மிளா. முதல்வர் பதவியையே கைப்பற்றினாலும், அந்த சட்டத்தை இம்மியளவும் அசைக்க முடியாது என்பது சர்மிளாவுக்குத் தெரியாது என்று யாரும் சொல்ல முடியாது.

இருந்தபோதிலும், ஒரு நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு என்ன செய்ய வேண்டும் என்று சிந்திப்பதற்கு பதிலாக, ''என்னுடைய வரம்பு இதுதான்'' என்று தீர்மானித்துக் கொண்டு, அந்த வரம்புக்குட்பட்ட நடவடிக்கைகள் மூலமாகவே நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்று நம்பும் தலைவர்கள், அதே நம்பிக்கையை மக்களுக்கும் ஏற்படுத்த முனைகிறார்கள்.

தனது கோரிக்கைக்குப் பொருத்தமான போராட்ட முறையைத் தெரிவு செய்து கொள்ளத் தெரியாத அல்லது அதற்குத் தயாராக இல்லாத சமூகமும், ''இது போகாத ஊருக்கு வழி'' என்று ஒருபுறம் சொல்லிக் கொண்டே, இன்னொருபுறம் அதன் மீதே நம்பிக்கையும் வைக்கிறது. வேறு வழியென்ன இருக்கிறது என்று கூறி தனது முரண்பட்ட நிலையை நியாயப்படுத்தவும் முனைகிறது.

ஆயுதக் குழுக்களுக்கு ஆதரவு, இரோம் சர்மிளாவின் காந்திய போராட்டத்துக்கும் ஆதரவு, சட்டமன்றத் தேர்தலில் 80% வாக்குப்பதிவு இதுதான் மணிப்பூர் சமூகத்தின் நிலை. மணிப்பூர் மக்களின் இந்த நிலை விமரிசனத்துக்கு உள்ளாக்கப்படாத வரை, தமது சொந்த நடைமுறையின் வழியாக அம்மக்கள் தங்களது முரண்பட்ட நிலையைப் புரிந்து கொள்ளாதவரை இதற்கு முடிவில்லை. இது போராட்ட வடிவங்களுக்கிடையிலான முரண்பாடு குறித்த பிரச்சினை அல்ல, மக்களுடைய அரசியல் புரிதலில் நிலவும் முரண்பாடு குறித்த பிரச்சினை.

**ஏமாற்றம் மக்களுக்கா, சர்மிளாவுக்கா?**

உண்ணாநிலையைக் கைவிட்டு தேர்தலில் நிற்கப்போவதாக அறிவித்த இரோம் சர்மிளா மீது அதிருப்தி கொண்ட மணிப்பூர் சமூகத்தைப் பற்றி, எழுத்தாளர் ஷிவ் விசுவநாதன் கூறும் கருத்து நம் கவனத்துக்குரியது. ''ஊழல் அரசியல்வாதிகளை மீண்டும் மீண்டும் தேர்ந்தெடுக்கும் ஒரு சமூகம், தியாகம் செய்யும் உண்மையான நாயகர்களிடம் மட்டும் வாழ்க்கையின் உயிர்த்துடிப்புகள் அனைத்தையும் துறந்த ஒரு நேர்மையை எதிர்பார்க்கிறது'' என்று மக்களின் போலித்தனத்தை அவர் சாடுகிறார். இதனை போலித்தனம் என்பதா, அல்லது இலட்சியத் தலைவர்களிடம் மக்கள் கொண்டிருக்கும் வழிபாட்டுணர்வு கலந்த நியாயமான எதிர்பார்ப்பு என்பதா?

நாயகர்கள் எனப்படுவோரும் மக்களும் எதிரெதிராக நிறுத்தப்படும் இந்த நிலையில், யார் விமரிசனத்துக்குரியவர்கள்? இத்தனை காலம் எந்த மக்களுக்காக உடலை உருக்கிப் போராடினாரோ, அந்த மக்களே தன்னைக் கைவிட்டு விட்டதாகக் கருதுகிறார் சர்மிளா. தேர்தல் அரசியல் சபலங்களுக்கு ஆட்படாத இரும்புப் பெண்மணியாக தங்களால் கொண்டாடப்பட்ட சர்மிளா, தன்னிச்சையாக போராட்டத்தை முடித்துக் கொண்டதுடன், முதல்வராக விரும்புவதாகவும் கூறிய

தன் மூலம் தாங்கள் அவர் மீது கொண்டிருந்த நம்பிக்கையிலும் மதிப்பிலும் மண்ணள்ளிப் போட்டுவிட்டதாக எண்ணுகிறார்கள் மணிப்பூர் மக்கள்.

**காந்திய சாகசம்!**

இரோம் சர்மிளாவைப் பொருத்தவரை, அவரே சொல்லிக் கொள்வது போல அவர் ஒரு காந்தியவாதி. ''பதினாறு ஆண்டுகள் உண்ணாநிலை'' என்ற காந்தியவாதியின் தனிநபர் சாகசம், எதிர்முனையில் மணிப்பூரில் இயங்கும் சுமார் 40 ஆயுதக்குழுக்களின் சாகசம் இவை இரண்டுக்கும் நடுவில் இருக்கிறது மணிப்பூர். காஷ்மீரோடு ஒப்பிடத்தக்க போர்க்குணமிக்க மக்கள் திரள் போராட்டங்கள் எதுவும் மணிப்பூரில் இல்லை. சர்மிளா என்ற தனிப்பட்ட பெண்ணின் போராட்டத்தையே தங்களது போராட்டமாக எண்ணி அம்மக்கள் இறுமாந்து இருக்கக்கூடும். சர்மிளாவை இரும்புப் பெண்மணியாகவும் தெய்வமாகவும் ஆக்கிய சூழல் இதுதான்.

''நான் தெய்வப் பெண் அல்ல, சாதாரணப் பெண்'' என்று அவர் கூறிக்கொண்ட போதிலும், தன்னுடைய தியாகத்தின் காரணமாக மணிப்பூர் மக்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் அதிகாரம் தனக்கிருப்பதாக அவர் கருதிக் கொண்டு விட்டார். பட்டினி கிடந்தது அவராக இருக்கலாம். அவர் எதற்காகப் பட்டினி கிடந்தாரோ அந்தக் கோரிக்கை மணிப்பூர் மக்களுடையது.

''யாரும் சொல்லி நான் இந்தப் போராட்டத்தை தொடங்கவில்லை. நானாகத் தொடங்கினேன்; நானே முடிக்கிறேன்'' என்று தனது விமரிசகர்களுக்கு சர்மிளா கூறியிருக்கும் பதில் அவரது உளப்பாங்கை காட்டுகிறது. ''நான் தொடங்கினேன், நான் மூடுகிறேன்'' என்பதற்கு இது அவருக்குச் சொந்தமான பெட்டிக்கடை அல்ல, மக்களின் கோரிக்கை. ''தொடங்கியவர்களுக்கு முடிக்கும் உரிமை உண்டு'' என்று சர்மிளாவின் சார்பில் வாதிடுபவர்கள், ''ஆதரித்த மக்களுக்கு எதிர்க்கும் உரிமை உண்டு'' என்பதையும் அங்கீகரிக்க வேண்டும்.

''பதினாறு ஆண்டுக்காலம் நாவில் தண்ணீர் கூடப் படாமல் உறுதிமிக்கதொரு போராட்டத்தை நடத்திய ஒரு பெண்ணுக்கு தனது போராட்டத்தை முடித்துக்கொள்ளும் உரிமை கிடையாதா?'' என்று யாரேனும் கேள்வி எழுப்பினால், ''ஆம், உரிமை கிடையாது'' என்று பதில் கூறும் தார்மீக பலம் மணிப்பூர் மக்களுக்கு இல்லை. அதே நேரத்தில், ''என் போராட்டத்தை என் விருப்பப்படி நான் முடிக்கிறேன்'' என்கிற சர்மிளாவின் 'ஆணவத்தை' ஏற்றுக்கொள்ளும் சுயமரியாதையற்ற நிலையிலும் அவர்கள் இல்லை.

**மணிப்பூரின் புதல்வியா,**
**சர்மிளாவின் மணிப்பூரா?**

தனது போராட்டம் ஊடகங்களில் பிரபலமாகி, ''மணிப்பூரின் புதல்வி சர்மிளா'' என்பதற்கு பதிலாக ''சர்மிளாவின் ஊர் மணிப்பூர்'' என்று உலகத்தார் பேசும் நிலை வந்துவிட்டதன் காரணமாக, போராட்டத்தை முடித்துக் கொள்வது பற்றிக் கருத்து கூறும் தகுதி மற்றவர்களுக்கு இல்லை என்று அவர் கருதியிருக்கக் கூடும்.

''தங்களது லட்சியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர், தங்களால் இயலாததைச் சாதிப்பவர், தங்களைக் காட்டிலும் நேர்மையானவர்'' என்பன போன்ற பல மதிப்பீடுகளின் அடிப்படையில் தலைவர்களுக்கு மக்கள் வழங்கும் அங்கீகாரம்தான் - புகழ். அது ஒரு எழுதப்படாத ஒப்பந்தம். எந்தக் கணத்திலும் ரத்து செய்யப்படும் நிபந்தனையை முதல் சரத்தாக கொண்ட ஒப்பந்தம். ''தங்களை விட மேலானவர் தலைவர்'' என்று மக்கள் கொண்டிருக்கும் இந்தக் கருத்தை, ''தன்னைக் காட்டிலும் கீழானவர்கள் மக்கள்'' என்று ஒரு தலைவர் மொழிபெயர்த்துக் கொள்வாரானால், அந்த ஒப்பந்தம் மக்களால் ரத்து செய்யப்பட்டு விடும். ரத்து செய்யப்பட்ட பிறகுதான் தலைவர்கள் அதை தெரிந்து கொள்ளவே முடியும்.

ஆகஸ்டு 9-ஆம் தேதியன்று தனது போராட்டத்தை முடித்துக் கொண்ட இரோம் சர்மிளா, நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டு

ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டத்தைத் திரும்பப் பெறக் கோரி மணிப்பூர் தாய்மார்கள், அம்மாநிலத் தலைநகர் இம்பாலில் உள்ள துணை இராணுவப் படை முகாம் முன்பு நடத்திய நிர்வாணப் போராட்டம். (கோப்புப் படம்)




தேர்தலில் நிற்கப்போவதாகவும், போராட்ட வடிவத்தை மாற்றியிருப்பதாகவும் கூறியிருக்கிறார் சர்மிளா. முதல்வர் பதவியையே கைப்பற்றினாலும், ஆயுதப் படைச் சட்டத்தை இம்மியளவும் அசைக்க முடியாது என்பது சர்மிளாவுக்குத் தெரியாது என்று யாரும் சொல்ல முடியாது.



வாக்களிக்கக் காத்திருக்கும் மணிப்பூர் மக்கள் மணிப்பூரின் முரண்பட்ட முகம். (கோப்புப் படம்)

மருத்துவமனையை விட்டு வெளியே வந்தார். ஆனால் அவருக்கு குடியிருக்க வீடு கொடுப்பதற்கு யாரும் விரும்பவில்லை. ‘‘தலைமறைவு ஆயுதக் குழுக்களுக்கு அஞ்சித்தான் மக்கள் இடம் தரத் தயங்கினார்கள்; வெளிமாநிலத்தவர் ஒருவரை சர்மிளா திருமணம் செய்து கொள்வதை மணிப்பூர் மக்கள் ஏற்கவில்லை’’ என்றெல்லாம் சிலர் இதற்கு விளக்கம் கூறுகிறார்கள். ஆனால், தேர்தலில் போட்டியிடுவது என்ற சர்மிளாவின் அரசியல் முடிவு காரணமாக மணிப்பூர் மக்களிடையே அவர் மீது பரவிவிட்ட கசப்புணர்வுதான் இதற்குக் காரணம் என்பதை யாராலும் மறுக்க முடியவில்லை. தங்குவதற்கு வீடு கிடைக்காமல், 16 ஆண்டுகளாகச் சிறை வைக்கப்பட்டிருந்த மருத்துவமனைக்கே அவர் மீண்டும் திரும்ப நேர்ந்தது.

**சாவியைத் தேடிய முல்லா!**

‘‘தேர்தலில் தனக்கு வாக்களித்து முதல்வராக்கவில்லையென்றால், ஆயுதப் படைகள் சிறப்பு அதிகாரச் சட்டத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு மணிப்பூர் மக்களுக்கு விருப்பம் இல்லை என்று பொருள்’’ என்று கூறினார் சர்மிளா. ‘‘மாநில முதல்வர் என்ற பொம்மைப் பதவியில் அமர்ந்து கொண்டு இராணுவத்தின் நிழலைக்கூட தண்டிக்க இயலாது என்பது கூடவா சர்மிளாவுக்குத் தெரியவில்லை?’’ என்று அவரது ஆதரவாளர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

தொலைத்த இடம் இருட்டு என்பதால் அங்கே சாவியைத் தேடாமல், ‘‘விளக்கு கம்பத்தின் கீழே சாவியைத் தேடிய’’ முல்லாவின் நிலைக்கு வந்து விட்டார் சர்மிளா. மோசடியும் சுயமோசடியும் இரண்டறக் கலந்த நிலை இது.

பதினாறு ஆண்டுகளாகப் போராட்டத்திலேயே வாழ்ந்த அனுபவத்தின் காரணமாக, மற்றவர்களைக் காட்டிலும் தன்னுடைய புரிதல் மேம்பட்டதாக இருக்கும் என்றுகூட அவர் நினைத்திருக்கக் கூடும். ‘‘தாங்கள் நடைமுறையில் இருப்பவர்கள்’’ என்று அகம்பாவம் கொள்வோர் பலரையும் பீடிக்கும் நோயே இத்தகைய சிந்தனை.

கிணற்றுக்குள்ளேயே வாழ்வதனால் கிணறு பற்றிய தவளையின் ஞானம் மேம்பட்டதாகிவிடாது. அனுபவம் என்பது அறிவியலுக்கு மாற்றல்ல. ‘‘ஞானம்’’ கிணற்றுக்கு வெளியே இருக்கிறது. 1991-இல் ஆயுதப்படைகள் சிறப்பு அதிகாரச் சட்டம், இந்திய அரசமைப்புச் சட்டத்துக்கும், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த சர்வதேச விதிகளுக்கும் எதிராக இருப்பது பற்றி ஐ.நா.வின் மனித உரிமைகள் குழு கேள்வி எழுப்பியபோது, ‘‘வடகிழக்கிந்திய மாநிலங்கள் இந்தியாவிலிருந்து பிரிந்து சென்று விடாமல் தடுப்பதற்கு இது அவசியம்’’ என்று விளக்கமளித்தார் இந்தியாவின் அட்டார்னி ஜெனரல்.

இந்தக் கருத்தை வழிமொழிபவர்தான் கேஜ்ரிவால். காஷ்மீர் மக்கள் முதல் வடகிழக்கிந்திய மக்கள் வரையிலான யாருடைய பிரிந்து போகும் உரிமையையும் அங்கீகரிக்காத கேஜ்ரிவாலை, தனது வழிகாட்டியாகத் தேடிக் கண்டடைந்திருக்கிறார் இரோம் சர்மிளா. கிணற்றுக்கு வெளியே வந்து அவர் தேடிக் கண்டடைந்திருக்கும் ‘‘ஞானம்’’ இது.

பதினாறு ஆண்டுகளுக்கு முன் இரோம் சர்மிளா தொடங்கிய உண்ணாநிலைப் போராட்டம் என்பது மைலோம் படுகொலையின் உணர்ச்சி பூர்வமான எதிர்வினை. அது ‘‘சிந்திக்காமல் எடுக்கப்பட்ட முடிவு’’ என்ற போதிலும், அந்த நடவடிக்கை இந்திய அரசமைப்பை வெளியிலிருந்து அம்பலப்படுத்தியது. தற்போது சர்மிளா ‘‘சிந்தித்து எடுத்திருக்கும் முடிவு’’, மணிப்பூரை ஒடுக்குகின்ற இந்த அரசமைப்பின் அங்கமாக அவரை மாற்றுகிறது. இன்றைய ‘சிந்திக்கும்’ சர்மிளாவைக் காட்டிலும், அன்றைய ‘சிந்திக்காத’ சர்மிளாதான் ‘தெளிவாக சிந்தித்திருக்கிறார்’ என்று எண்ணுகிறார்கள் மணிப்பூர் மக்கள்.

‘‘தன்னுடைய கதை, தன்னுடைய முடிவு’’ என்று கருதுகிறார் சர்மிளா. ‘‘கதை தங்களுடையது’’ என்று நினைக்கிறார்கள் மக்கள். மணிப்பூரில் ஒரு நம்பிக்கை இருக்கிறதாம். ‘‘யாராவது ஒரு கதையைச் சொல்லத் தொடங்கி, முறையாக அதனை முடிக்கத் தவறினால், மதம் பிடித்த யானையொன்று கனவிலும் அவரைத் துரத்தும்’’ என்பது அந்நம்பிக்கை. சர்மிளாவை யானை துரத்திக் கொண்டிருக்கிறது.

யானையால் துரத்தப்படும் அபாயம், முன்னோடிகள் - நாயகர்கள் எனப்படுவோர் அனைவருக்கும் உண்டு.

● மருதையன்

# ஏழைகளைச் சூறையாடும் நுண்கடன் நிறுவனங்கள்

ஆதார் கார்டுக்கும், ரேசன் கார்டுக்கும் அப்பாவிகளைத் தெருநாயாக அலையவிடும் நாட்டில், நுண்கடன் நிறுவனங்கள் ஏழைகளின் வீடு தேடிவந்து, அவர்களுக்கு ஆயிரக்கணக்கில் கடன் கொடுப்பது ஏன்?

சுமார் 1,500 பேர் வசிக்கும் அந்த கிராமத்தின் டீக்கடையில் நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தோம். தற்செயலாக மகளிர் குழு பற்றி பேச்சு திரும்பியது. 20 பேர் ஒரு குழு வீதம் 25 குழுக்கள் இருப்பதாகவும், சராசரியாக ஒவ்வொருவரும் 25,000 ரூபாய் கடன் வாங்கியிருப்பதாகவும் ஒருவர் கூறினார். கணக்கிட்டுப் பார்த்தால் ஒரு கோடியே 25 லட்சம் ரூபாய்! இவ்வளவு ரூபாயா நம்ம ஊருக்குள்ள புழங்குது? என்று நண்பர்கள் ஆச்சரியப்பட்டுப் போனார்கள்!

நம்மில் யாரும் குடும்பத்தோடு சென்று இவர்களிடம் கையேந்திக் கடன் கேட்காமலே வீடு தேடிவந்து கடன் கொடுக்கிறானே, யார் இவன்? ஏன் கொடுக்கிறான்?

**கடன் கொடுப்பவர்கள் யார்?**

**சுயஉதவிக் குழுக்கள் (SHG):**

குறிப்பாக பெண்கள் மட்டும், 10,15,20 பேர்கள் கொண்ட ஒரு குழுவாக இணைந்து சுயஉதவிக் குழுக்கள் என்ற பெயரில் இயங்குபவர்கள். பெரும்பாலும் தன்னார்வக் குழுக்கள் தலைமையில் செயல்படும் இவர்கள், நேரடியாகப் பொதுத்துறை மற்றும் வணிக வங்கிகளில் சேமிப்புக் கணக்குத் தொடங்கி, அதில் தங்களின் மாத சந்தா பணத்தைச் சேமித்து, அதனைத் தங்களுக்குள் வட்டிக்கு விட்டு, பிறகு அதனை முறையாக வசூலித்து வங்கிக் கணக்கில் திருப்பிச் செலுத்த வேண்டும். இதே காலத்தில், குழு உறுப்பினர்களுக்குக் கூடை பின்னுதல், மண்புழு உரம் தயாரிப்பு, தையல், கம்ப்யூட்டர் பயிற்சி போன்ற சுயதொழில் பயிற்சிகள் வழங்கப்படும். இவ்வாறு 6 மாத கால நடைமுறைக்குப் பின் சம்பந்தப்பட்ட வங்கியில் குழுவின் பெயரில் கடன் பெற்று, கற்றுக்கொண்ட சுய தொழில்கள் மூலம் சம்பாதித்து, கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும். வாங்கும் கடனுக்கும், தவணை செலுத்தாதவர்களுக்கும் மொத்தக் குழுவும் பொறுப்பு ஏற்க வேண்டும். இப்படி நாடு முழுவதும் சுமார் 3 லட்சம் சுயஉதவிக் குழுக்கள் இயங்குகின்றன!

மகளிர் சுய உதவிக் குழுவொன்றின் கூட்டம். (கோப்புப் படம்)



**வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள் (NBFC):**

இவர்கள் "பொதுமக்களிடமிருந்து சேமிப்பு நிதி திரட்டக்கூடாது. பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய ஏழை மக்களுக்கு மட்டுமே கடன் வழங்க வேண்டும்" என்ற நிபந்தனையுடன் இந்திய ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிதி நிறுவனங்கள்!

'மைக்ரோ பைனான்ஸ் நிறுவனங்கள்' என்று அழைக்கப்படும் 500-க்கும் மேற்பட்ட இத்தகைய நிறுவனங்கள் நாடு முழுவதும் இயங்கி வருகின்றன. சமீபகாலமாக, அரசு வங்கிகளுடன் இணைந்து செயல்படும் சுயஉதவிக் குழுக்களின் எண்ணிக்கையை விட, இந்தத் தனியார் நிறுவனங்களின் குழுக்களின் எண்ணிக்கை மிக வேகமாக அதிகரித்து வருகிறது!

இவ்விரு பிரிவினரும் சேர்ந்து "கடந்த ஆண்டில் மட்டும் (2015) நாடு முழுவதும் வழங்கிய மொத்த கடன் தொகை சுமார் 48,882 கோடி ரூபாய். இதில், வங்கி அல்லாத தனியார் நிதி நிறுவனங்கள் வழங்கியது மட்டும் 34,298 கோடி ரூபாய்" என்று வங்கியல்லாத நிதி நிறுவனங்களின் கூட்டமைப்பான சன்-தன் (San-Dhan) கூறுகிறது!

100 ரூபாய் முதியோர் பென்சனுக்கும், ஆதார் கார்டுக்கும், ரேசன் கார்டுக்கும், அப்பாவிகளைத் தெருநாயாக அலையவிடும் நாட்டில், இவ்வளவு

பெரிய தொகையை ஏழைகளின் வீடு தேடி வந்து கடனாகக் கொடுக்கக் காரணம் என்ன?

**கடன் கொடுப்பது எதற்காக?**

“கிராமப்புற ஏழை மக்களை வறுமையிலிருந்து மீட்டு, நிரந்தரமான வாழ்வாதாரத்தை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் வறுமையை ஒழிக்கப் போகிறோம்!” என்கின்றன மத்திய -மாநில அரசுகள். “கிராமப்புற ஏழைகளைச் சிறுதொழிலில் ஈடுபடுத்தி, உற்பத்தியைச் சந்தைப்படுத்த உதவுவதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது” என விளக்கமளிக்கிறது மதுரை கருமுத்து தியாகராஜன் செட்டியார் குடும்பத்தின் மதுரா மைக்ரோ பைனான்ஸ் நிறுவனம்.



மதுரை மைக்ரோ ஃபைனான்ஸ் நிறுவனத்தின் சார்பில் மதுரையில் நடத்தப்பட்ட கிராமப்புற மகளிர் சுய உதவிக் குழுக்களால் தயாரிக்கப்பட்ட பொருட்களின் விற்பனைக் கண்காட்சி. (கோப்புப் படம்)

இவர்களிடம் பல ஆண்டுகளாக கடன்பெறும் பெண்கள் என்ன சொல்கிறார்கள்?

**கடனாளிகளின் அனுபவம்**

*“நான் மூணுமுறை கடன் வாங்கியிருக்கேன். முதல்முறையா 5,000, அடுத்து ஒரு வருசம் கழிச்சு 15,000, அடுத்து ஒரு வருசம் கழிச்சு இப்போ 25,000 ரூபாய் வாங்கியிருக்கேன். இதுல என்ன தொழில் பண்ணச் சொல்றீங்க? ஆடு, மாடு வளர்க்கணும்னா அதை மேய்க்கிறதுக்கும், பராமரிக்கிறதுக்கும் ஒரு ஆளு தனியா வேணும். ஆறு மாசம் கழிச்சுதான் அதை விக்க முடியும். மாடுன்னா வருமானம் பார்க்க ஒரு வருசமாவது ஆகும். அதுவரைக்கும் எப்படி தவணை கட்டுறது?”*என்று எதார்த்தமாக கேட்கிறார் ஒரு பெண் பயனாளி!

> **கிராமப்புறங்களில் சொத்து ஏதுமற்ற ஏழைகள் 40% பேர் உள்ளனர். இவர்களுக்குக் கடன் வழங்குவதன் மூலம் இவர்களை நவீன பொருளாதார அமைப்பு முறைக்குள் கொண்டு வருவதும்; கடன்பெறுவதை ஒழுங்குபடுத்தி, அதனைக் கண்காணிக்கும் அமைப்புகளை உருவாக்குவதும்தான் நுண்கடன் நிறுவனங்களின் தலையாய பணி.**

மக்களின் அன்றாட வாழ்க்கை செலவுகளுக்குத் தான் கடன் பயன்படுகிறது என்ற உண்மை, கடன் வழங்கும் நுண்கடன் நிறுவனங்களுக்கும், அரசுக்கும் தெரியாத விசயமில்லை.

“கிராமங்களில் கடன் பெறுபவர்களில் 7 முதல் 15% பேர்தான் தொழில் செய்கின்றனர். அவர்களில் பெரும்பான்மையினர் நட்டத்தில்தான் உள்ளனர். எனவே, நுண்கடனால் எவ்வித சமூகப்பயனும் ஏற்படுவதில்லை” என்று தனது வாடிக்கையாளர்களிடம் நடத்திய மதுரா நிறுவனத்தின் ஆய்வின் முடிவு கூறுகிறது.

ஆக, நுண்கடன் திட்டங்கள் மூலம் ஏழ்மை ஒழிப்பு, வறுமை ஒழிப்பு, பெண்களின் சுய முன்னேற்றம் என்பதெல்லாம் நடைமுறைக்கு உதவாத நடவடிக்கைதான் என்பதை ‘வளர்ச்சித் திட்ட அறிவாளிகளே’ ஒத்துக்கொள்கிறார்கள். எனில், இத்திட்டத்தின் உண்மையான நோக்கம் தான் என்ன?

**நுண்கடன் என்றால் என்ன?**

“பொருள்கள் மற்றும் சேவைத்துறையின் சங்கிலித்தொடர் சந்தையில் பொதுமக்களை இணைக்காவிட்டால், நவீனப் பொருளாதார முறையே நொறுங்கிவிடும் என்பதிலிருந்துதான் மைக்ரோ பைனான்ஸ் நிறுவனங்கள் என்ற தத்துவம் தொடங்கு கிறது” என்று நுண்கடன் தத்துவத்தின் ஆணிவேரை அடையாளம் காட்டுகிறார் மதுரா மைக்ரோ பைனான்ஸ் நிறுவனத்தின் முன்னாள் இயக்குனர் கே.எம்.தியாகராஜன்.

மேலும், *“கிராமப்புறங்களில் சொத்து ஏதுமற்ற ஏழைகள் (Undocumented Communities) 40% பேர் உள்ளனர். இவர்களுக்குக் கடன் வழங்குவதன் மூலம் இவர்களை நவீன பொருளாதார அமைப்பு முறைக்குள் கொண்டு வருவதுதான் முதல்படி. அடுத்து, பயனாளிகளின் (கடனாளிகள்!) அடையாள ஆவணங்களை (ரேசன், வாக்காளர், ஆதார் அட்டைகள்) சேகரிப்பது மூலம், கடன் பெறுவதை ஒழுங்குபடுத்தி, அதனைக் கண்காணிக்கும் அமைப்புகளையும் உருவாக்குவது இதன் இரண்டாவது படி”* என்று விவரிக்கிறார் கே.எம்.தியாகராஜன்.

**வறுமை ஒழிப்பின் பின்னணியில் அமெரிக்க ‘ஞானப்பால்’**

*நாட்டில் செயல்படும் 500 நுண்கடன் நிறுவனங்களில் முதல் 100 பெரிய நிறுவனங்களின் தலைமை நிர்வாகிகள் மற்றும் இயக்குனர்களில் பெரும்பான்மையினர் இந்தியாவில் பிறந்திருந்தாலும், அமெரிக்காவின் “ஞானப்பால்” குடித்து வளர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள்.* மதுரா நிறுவனத்தின் தலைவர் கே.எம்.தியாகராஜன், கிராம விடியலின் வினோத் கோஸ்லா, பி.எஸ்.எஸ். நிறுவனர் டாக்டர் ரமேஷ் பெல்லம்கொண்டா, உஜ்ஜிவன் நிறுவனர் சமித்கோஷ், பந்தன் நிறுவனர்

சந்திரசேகர் கோஷ் ஆகிய அனைவரும் அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் எம்.பி.ஏ. பட்டம் பெற்றவர்கள்!

ரிசர்வ் வங்கியின் உத்தரவுப்படி, வெறும் ஒரு கோடி ரூபாய் முதலீட்டில் துவங்கும் இந்த நுண்கடன் நிறுவனங்கள், பல்லாயிரம் கோடிகளைக் கடனாக வழங்குவதற்குத் தேவையான பெருமளவு நிதியை வெளிநாடுகளின் நிதி முதலீட்டு வங்கிகள் மற்றும் நிறுவனங்கள் மூலமாகவே திரட்டுகின்றன. உதாரணமாக, சென்னையில் செயல்பட்டுவரும் ஆசீர்வாத் மைக்ரோ பைனான்ஸ் நிறுவனத்தில், (மணப்புரம் கோல்டு பைனான்சுக்கு சொந்தமானது) அமெரிக்காவின் ராக் பெல்லர் அறக்கட்டளையின் உதவியுடன் இயங்கும் லோக்-கேப்பிட்டல் (Lok-Capital) என்ற நுண்கடன் முதலீட்டு நிறுவனம் முதல்கட்டமாக ரூ.7 கோடியை முதலீடு செய்துள்ளது.

உஜ்ஜிவன் நிறுவனத்தில், உலக வங்கியின் முன்னாள் தலைவர் வொல்ஃபென்சோன் (Wolfensohn) மற்றும் மொரீசியஸ் யுனைடெட் கார்ப்பரேசன், நெதர்லாந்து டெவலப்மென்ட் ஃபைனான்ஸ் ஆகியவை முதலீடு செய்துள்ளன. திருச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் கிராம விடியல் நிறுவனம், உலகளவில் இயங்கிவரும் மைக்ரோ வெஸ்ட் (Microvest) என்ற அமெரிக்க நிதி முதலீட்டு நிறுவனத்திடமிருந்து நிதி பெறுகிறது. தென்னிந்தியாவின் முன்னணி நிறுவனமான ஸ்மைல் மைக்ரோ பைனான்ஸ் நிறுவனத்தில், *Developing World Marketes-DWM* என்ற அமெரிக்க நிறுவனம் முதல் கட்டமாக 50 கோடி ரூபாயை முதலீடு செய்துள்ளது.

**ஏழ்மையும் ஒரு சந்தைதான்!**

“இந்தியாவில் மைக்ரோ பைனான்ஸ் நிறுவனங்களின் தேவை” (The demand for MFI in India) என்ற உலக வங்கியின் 1994, 1998-ஆம் ஆண்டுகளின் ஆய்வறிக்கை, இந்தியாவில் உள்ள “ஏழைகளின் சந்தையை” எவ்வளவு துல்லியமாக கணக்கிடுகிறது பாருங்கள்: “இந்தியாவில் 7.5 கோடி குடும்பங்களில் உள்ள 4 கோடிபேர் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ளனர். இவர்களின் ஒரு வருடக் கடன் தேவை 79.2 கோடி ரூபாய்.” இதன் தற்போதைய மதிப்பீடு 2 லட்சம் கோடி ரூபாய் என்கிறது நபார்டு வங்கி.

**மல்லையாவுக்கு 5%, ஈஸ்வரிக்கு 40%!**

அரசின் பொதுத்துறை வங்கிகளின் சராசரி வட்டி விகிதம் 9% தான்.

சுயஉதவிக் குழுக்களுக்கு இவ்வங்கிகள் 7 முதல் 9.65% வட்டிக்குத்தான் கொடுக்கின்றன. செய்முறைக் கட்டணம், அபராதம், கட்டாய இன்சூரன்ஸ் ஏதும் அரசு வங்கிகளில் பிடிப்பதில்லை. ஆனால், நுண்கடன் நிறுவனங்களை மட்டும் 26% வரை வட்டி வசூலித்துக் கொள்ள இந்திய ரிசர்வ் வங்கி அனுமதியளித்துள்ளது. ஆனால், நடைமுறையில் பல நிறுவனங்கள் 40% அளவுக்கு வட்டி வாங்குகின்றன.

உஜ்ஜீவன் நிறுவனம், 10,000 ரூபாய் கடன் பெறும் தனது பயனாளியிடம் ஒரு வருட வட்டியாக 2,117 ரூபாய் வசூலிக்கிறது. இதில் 70% வட்டியை முதல் 5 மாத தவணையிலேயே பிடித்துக் கொள்கிறது. இந் நிறுவனத்திற்கு 22 லட்சம் பயனாளிகள் இருப்பதைக் கணக்கிட்டால், தோராயமாக, வட்டியாக மட்டும் ஆண்டுக்கு 93 கோடி ரூபாய் வருமானம் வருகிறது. சிறுகடன் மட்டுமே கொடுக்க வேண்டும் என்ற ரிசர்வ் வங்கியின் விதிமுறைக்கு மாறாக, செல்ஃபோன், லேப்டாப், மளிகை சாமான்கள் விற்பனையிலும் ஈடுபட்டுக் கொள்ளையடிக்கின்றன இந்நிறுவனங்கள்.

**அரசின் பொதுத்துறை வங்கிகளின் சராசரி வட்டி விகிதம் 9% தான். சுயஉதவிக் குழுக்களுக்கு இவ்வங்கிகள் 7 முதல் 9.65% வட்டிக்குக் கடன் கொடுக்கின்றன! ஆனால், நுண்கடன் நிறுவனங்களை மட்டும் தமது கடன்களுக்கு 26% வரை வட்டி வசூலித்துக்கொள்ள இந்திய ரிசர்வ் வங்கி அனுமதியளித்துள்ளது.**

“கந்துவட்டிக்காரனிடம்கூட இன்னைக்கு இல்லைனா, நாளைக்கு தர்றேன்னு சொல்லலாம். ஆனால், இவர்களிடம் அது நடக்காது. அவமானத்திற்குப் பயந்தே நகையை அடகுவைத்து ஒருமுறை தவணை கட்டினேன்” என்கிறார் கூலிவேலை செய்யும் ஈஸ்வரி. ஈஸ்வரிகளின் தன்மானமும், வாங்கிய கடனை திருப்பிக் கட்ட வேண்டும் என்ற நேர்மையும்தான் நுண்கடன் நிறுவனங்கள் மற்றும், சர்வதேச நிதி முதலீட்டாளர்களின் வளர்ச்சிக்கு உரமாக இருக்கிறது.

நுண்கடன் நிறுவனமொன்றில் வாங்கிய கடனைக் கட்ட முடியாத அவமானத்தால் தற்கொலை செய்து கொண்ட ஆந்திர மாநிலம், அனந்தபூர் மாவட்டம், கதிரி என்ற ஊரைச் சேர்ந்த ஹரிபிரசாத் புகைப்படத்துடன் அவரது மனைவி சுனிதா மற்றும் மகள் சுவேதா. (கோப்புப் படம்)



**கந்துவட்டி கார்ப்பரேட்டுகள்!**

இதுநாள் வரை, பொதுத்துறை மற்றும் தனியார்துறை நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்து கொள்ளையடித்த சர்வதேச நிதிநிறுவன முதலாளிகள், நுண்கடன் நிறுவனங்களிலும் முதலீடு செய்வதைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

ஆசியாவின் இரண்டாவது பெரிய நுண்கடன் நிறு




நுண் கடன் நிறுவனங்களின் கடன் மற்றும் வட்டிக் கொள்ளையைக் கண்டித்து அன்றைய ஆந்திர மாநிலத் தலைநகர் ஹைதராபாத்திலுள்ள ரிசர்வ் வங்கிக் கிளை முன்பாக அகில இந்திய மாதர் சங்கத்தின் தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)

வனமான எஸ்.கே.எஸ். என்ற இந்திய நுண்கடன் நிறுவனத்தில், சர்வதேச முதலீட்டு நிறுவனமான குவாண்டம் குரூப் ஆஃப் ஃபண்ட் (Quantam Group Of Fund) 26% பங்கு முதலீடு செய்துள்ளது. மேலும் இன்ஃபோசிஸ் நாராயணமூர்த்தி ரூ.28.12 கோடியும், ஜே.பி. மோர்கன், மோர்கன் ஸ்டான்லி, ரிலையன்ஸ், பிர்லா சன் போன்ற பங்குச்சந்தை சூதாட்டக் கம்பெனிகள் மட்டும் இதில் 300 கோடி ரூபாயும் முதலீடு செய்துள்ளன. இதனால் இந்த நிறுவனம் ஒரு இலட்சம் கிராமங்களில், 46 இலட்சம் பயனாளிகளுக்கு சுமார் 11,000 கோடிக்கு மேல் கடன் வழங்கும் பெரும் நிறுவனமாக வளர்ந்திருக்கிறது.

உலகில் நுண்கடன் நிறுவனங்களின் சராசரி கடன் திருப்புதல் திறன் அல்லது கடன்வசூல் திறன் என்பது 95 சதவீதமாக உள்ளது. உலகளவில் சுமார் 1,000 நிறுவனங்கள் செயல்படுகின்றன. இவற்றின் இலாபவிகிதம் ஆப்பிரிக்க நாடுகளில் 30.9 சதவீதம்! ஆசிய நாடுகளில் 30.2 சதவீதம். இது தவிர, செய்முறைக் கட்டணம், சேவை வரி, தவணை தவறிய கடனுக்கு அபராதம், இடைக்காலக் கடன் எனப் பல வழிகளில் 30 முதல் 60 சதவீதம்வரை வட்டி வசூலிக்கின்றன.

நுண்கடன் நிறுவனங்களின் இத்தகைய அதிவேக வளர்ச்சியால் ஈர்க்கப்பட்டுத்தான் சர்வதேச நிறுவனங்கள் இதில் முதலீடு செய்வதில் ஆர்வம் காட்டுகின்றன. இந்த உண்மையை மறைப்பதற்காக, பாசிச ஜெயலலிதாவை 'புரட்சித்தலைவி' என்பதைப் போல, ஏழைகளைச் சுரண்டும் கொள்ளைத் திட்டங்களுக்கு ''வறுமை ஒழிப்பு'', ''பெண்களின் சுயமுன்னேற்றம்'' என்று பெயரிட்டு ஏய்க்கிறார்கள்

அந்த வகையில் கிராமப்புற ஏழைகளைச் சுயவேலைவாய்ப்பு உள்ளவர்களாக மாற்றப்போவதாக சொல்லிக் கொள்ளும் உலக வங்கியின் உதவி பெற்ற, தேசிய கிராமப்புற வாழ்வாதார மேம்பாட்டு இயக்கத்துக்கு ''தீனதயாள் அந்த்யோதயா யோஜ்னா'' என்று பெயர் மாற்றம் செய்திருக்கிறது மோடி அரசு. நுண்கடன் நிறுவனங்கள் செய்த அதே வேலையை தன்னார்வ நிறுவனங்கள் மூலம் செய்வதுதான் இந்த திட்டம்.

### ஏழையின் மாமிசம் தின்று உயிர் வாழும் அரசு!

நுண்கடன் நிறுவனங்களின் செயல்பாடுகள் வெகு கவனமாகத் திட்டமிட்டுக் கட்டியமைக்கப்பட்டவை. இதனை ஒரு சித்திரமாக வரையத் தொடங்கினால், கிராமத்திற்குக் கடன் வசூலிக்க வரும் நிறுவன ஊழியரில் ஆரம்பித்து, நிறுவனத் தலைவர் - அமெரிக்க படிப்பு - வங்கி நிர்வாகப் பயிற்சி - சர்வதேச நிதி நிறுவனங்கள் - உலகவங்கி என்று படிப்படியாக மேலே சென்று, பிறகு மத்திய அரசு - ரிசர்வ் வங்கி - சிட்பி, நபார்டு வங்கிகள் - 26% வட்டி - நுண்கடன் நிறுவனக் கிளைகள் என்று படிப்படியாக கீழிறங்கி நம் கிராமத்திற்கே வந்து நிற்கிறது.

புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாக, விவசாயமும் சிறுதொழில்களும் நாசமாக்கப்பட்டு வாழ்விழந்த மக்கள், திருப்பூர், கோவை, கேரளா, ஆந்திரா, மும்பை என்று ஓடிச்சென்று இரவு பகலாக குடும்பத்தோடு உழைத்தும் சமாளிக்க முடியாமல், கடன் வாங்கும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். இப்படி விழிபிதுங்கி நிற்கும் ஏழைகளைக் கொள்ளையடித்து வந்த கந்து வட்டிக் கும்பல்களின் வேலையை கார்ப்பரேட் பாணியில், சட்டபூர்வமாகச் செய்கின்றன நுண்கடன் நிறுவனங்கள். பரிதாபத்துக்குரிய ஏழை மக்களை வறுமையிலிருந்து மீட்க வக்கற்றுப் போனது மட்டுமல்ல, அவர்களிடம் எஞ்சியிருக்கும் ஒரே சொத்தான உழைப்பை வட்டி என்ற பெயரில் சுரண்டித்தின்னும் நுண்கடன் நிறுவனங்கள், இந்த அரசுக் கட்டமைப்பின் யோக்கியதையைப் பறைசாற்றும் அவமானச் சின்னங்கள்.

இக்கட்டுரையின் தொடக்கத்தில் நடந்த டீக்கடைப் பேச்சுவார்த்தையின் முடிவில் ஒருவர், ''திடீர்னு எல்லாப் பயலும் ஒன்னாவந்து எங்க கடனையெல்லாம் இப்பவே திருப்பிக் கொடுங்கடான்னு கேட்டா என்னா செய்யுறது?'' என்று கிண்டலாகக் கேட்டார். அதற்கு ஒரு பெரியவர் ''ஒன்னு கடன் வாங்குனவய்ங்க எல்லாம் மருந்தக் குடிச்சு சாகணும். அல்லது, நாம எல்லாம் ஒண்ணா சேர்ந்து அவய்ங்களை சுட்டுக் கொன்னு புடனும். இதான் ஒரேவழி!'' என்று பதில் கூறினார்.

● மாறன், வி.வி.மு; கம்பம்.

கட்டுரையின் விரிவான வடிவத்திற்கு பார்க்க : vinavu.com

# மாஃபியா கும்பலாகத் தமிழக போலீசு!



ஹவாலா திருடர்களையே ரூட் போட்டுத் திருடும் தமிழக போலீசை என்ன பெயரிட்டு அழைக்கலாம்? சரியான பெயரைத் திருடர்கள்தான் சொல்ல வேண்டும்.

கொடூரமான சித்திரவதைகள், கொட்டடிக் கொலைகள், பாலியல் வன்முறைகள் - என பயங்கரவாத அட்டூழியங்களைத் தொடர்ந்து செய்துவரும் வன்முறைக் கும்பலாக ஏற்கெனவே தமிழக போலீசு அம்பலப்பட்டுப் போயுள்ளது. போதை, விபச்சாரம், ஆற்றுமணல், தாதுமணல் கடத்தலுக்குத் துணைபோகும் கிரிமினல் கும்பலாகவும் சீரழிந்து கிடக்கிறது. இவையெல்லாம் போதாதென்று, இப்போது ஹவாலா கொள்ளைக் கூட்டமாக வளர்ந்து புதிய பரிமாணத்தை எட்டியிருக்கிறது, தமிழக போலீசு.

கடந்த ஆகஸ்டு மாதம் 25 ம் தேதியன்று கேரளாநோக்கி சென்ற காரை போலீஸ் உடையில் இருந்த சிலர் கோவை - மதுக்கரை செக் போஸ்ட் அருகே வழிமறித்து, காரில் இருந்தவர்களை மிரட்டி கீழே இறக்கிவிட்டுவிட்டு காரை கடத்திச் சென்றனர். அந்தக் காரில் வந்த கேரளத்தின் மலப்புரம் தங்க நகைக்கடை அதிபர் அன்வர் சதா என்பவர், தனது கார் கடத்தப்பட்டதாக கோவை மதுக்கரை போலீசிடம் புகார் கொடுத்தார். பின்னர் இதற்கென ஒரு தனிப்படை அமைத்து, ஆகஸ்டு 27-ஆம் தேதியன்று அந்தக் காரை பாலக்காடு அருகே போலீசார் கண்டறிந்து மீட்டுள்ளனர்.

இது தொடர்பாக மலப்புரத்தைச் சேர்ந்த சுதீர், சுபாஷ், ஜாகீர் ஆகியோரைப் பிடித்து தனிப்படை போலீசார் விசாரணை நடத்தியதில், காரையும் அதிலிருந்த ரூ.3.93 கோடி பணத்தையும் கொள்ளையடித்து, அதில் ரூ.1.90 கோடியை தாங்கள் எடுத்துக் கொண்டு மீதியுள்ள ரூ.2 கோடியை தங்களுக்கு வழிகாட்டி உதவி செய்த கரூர் - பரமத்தி போலீசு ஆய்வாளர் முத்துக்குமார், குளித்தலை போலீசு ஆய்வாளர் சரவணன், வேலாயுதம்பாளையம் ஏட்டு தர்மேந்திரன் ஆகியோரிடம் கொடுத்துவிட்டதாகத் தெரிவித்தனர்.

கடந்த ஆகஸ்டு 2-ஆம் தேதியன்று கரூரில் ஒரு பால்பண்ணை அதிபர் வீட்டில் நடந்த கொள்ளையைத் துப்பறிய நியமிக்கப்பட்ட தனிப்படையைச் சேர்ந்தவர்கள்தான் மேற்குறிப்பிட்ட மூன்று போலீசாரும். இந்த தனிப்படையினர் கோவைக்குச் சென்றபோது, ஆகஸ்டு 25 அன்று ஹவாலா பணத்துடன் நகைக்கடை அதிபர் அன்வர் சதா செல்வதை கோடாலி சிறீதர் என்ற ஹவாலா ஏஜெண்டு மூலம் அறிந்துள்ளனர். அதன்படியே, தமது விசுவாச கூலிப்படையினரான மலப்புரத்தைச் சேர்ந்த சுதீர், சுபாஷ், ஜாகீர் ஆகியோருக்கு போலீசு சீருடையை அணிவித்து, காரில் கடத்தி வரப்பட்ட ரூ.3.93 கோடியைத் திட்டமிட்டு சுருட்டியிருக்கின்றனர். அந்தக் காரில் இருந்த பணம் ஹவாலா பணம் என்பதாலேயே, கார் உரிமையாளர் அது பற்றி போலீசிடம் புகார் தெரிவிக்கவில்லை.

கடத்தப்பட்ட காரைத் தேடிச் சென்ற போலீசுக்கு, கார் கடத்தல் மட்டுமின்றி ஹவாலா பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது என்பதும், தமது துறை சார்ந்த போலீசே இந்தக் கொள்ளையை நடத்தியுள்ள விவகாரமும் தெரிய வந்துள்ளது. இருப்பினும், காரில் இருந்த ஹவாலா பணம் பற்றி இத்தொழிலில் தொடர்புடைய பெரும் புள்ளிகளுக்கும் போலீசு உயரதிகாரிகளுக்கும் தெரியும் என்பதாலும், இந்த வலைப்பின்னலில் உள்ள பல போலீசு உயரதிகாரிகளின் தொடர்புகள் அம்பலத்துக்கு வந்துவிடும் என்பதாலும், வேறு வழியின்றி ஆய்வாளர் முத்துக்குமார் தலைமையிலான தனிப்படையைச் சிக்க வைத்துவிட்டு, தாங்கள் கடமை தவறாமல் பணியாற்றுவதாகக் காட்டிக் கொண்டு போலீசு உயரதிகாரிகள் தப்பிக்க முயற்சிக்கின்றனர்.

ஹவாலா கொள்ளையர்கள்: கரூர் பரமத்தி போலீசு ஆய்வாளர் முத்துக்குமார், குளித்தலை போலீசு ஆய்வாளர் சரவணன், வேலாயுதம்பாளையம் ஏட்டு தர்மேந்திரன்.





ஹவாலா என்ற அரபிச் சொல்லுக்கு பரிமாற்றம் என்ற பொருள். சட்டபூர்வமான வரியைத் தவிர்த்து, வங்கிகள் - நிதி நிறுவனங்களுக்கு இணையான கட்டமைப்புடன் கிரிமினல் மாஃபியாக்களின் மூலம் சர்வதேச வலைப்பின்னலைக் கொண்டு ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு பல்லாயிரம் கோடி கருப்புப் பணத்தை தரகர்கள் மூலம் விரைவாகப் பரிமாற்றம் செய்வதுதான் ஹவாலா தொழில். இத்தகையதொரு மிகப் பெரிய மாஃபியா வலைப்பின்னலில் ஒரு சாதாரண போலீசு ஆய்வாளர் தொடர்பு கொண்டிருந்தாகவும், தனது அதிகாரத்தைக் கொண்டு அவர் இக்கொள்ளையை நடத்தியதாகவும் நம்பச் சொல்கிறது தமிழக போலீசு. ஆனால், இந்த ஹவாலா கொள்ளைக்கு தென்மாவட்ட போலீஸ் உயர் அதிகாரி ஒருவர் உறுதுணையாக இருந்துள்ளதாகச் செய்திகள் கசிந்துள்ளன. ஆய்வாளர் முத்துக்குமார் ஏற்கெனவே நாகர்கோவிலில் இதே பாணியில் ரூ.63 லட்சம் ஹவாலா பணத்தைக் கொள்ளையடித்ததாகவும், இத்தகவல் கிடைத்ததும் அமலாக்கத் துறை அதிகாரிகள் வந்து பார்வையிடுவதற்குள் அதில் ரூ. 23 லட்சத்தை மேலதிகாரிகளுக்காக மறைத்துவைத்துவிட்டு, கைப்பற்றியது ரூ.40 லட்சம்தான் என்று சாதித்ததாகவும் செய்திகள் வருகின்றன.

**கிரிமினல் மாஃபியா கும்பலைவிட மோசமான கொள்ளைக் கூட்டமாகத் தமிழகப் போலீசுத்துறை வளர்ந்து நிற்கிறது. போலீசு உயரதிகாரிகள் தனிப்படை என்ற பெயரில் போலீசு குழுக்களை அமைத்து நேரடியாகவே கொள்ளையில் ஈடுபடுபடுமளவுக்கு இத்தொழில் புதிய பரிமாணத்தை எட்டியுள்ளது.**

கேரள மாநிலமானது இத்தகைய ஹவாலா பணப் பரிமாற்றங்களுக்கான முக்கிய மையமாக உள்ளது. அங்கிருந்து வெளிநாடுகளுக்குக் கருப்புப்பணத்தை அனுப்புவது சுலபமாக இருப்பதால், தமிழகத்திலிருந்து கேரளாவுக்கு இத்தகைய ஹவாலா பணக் கடத்தல் தொடர்ந்து நடந்து வருகிறது. எந்தெந்த செக் போஸ்ட்டின் வழியாக ஹவாலா பணம் கடத்திச் செல்லப்படுகிறது என்பது தமிழக போலீசு உயரதிகாரிகளுக்குத் தெரிந்தேதான் நடக்கிறது. பணக்கடத்தலுக்கு குறிப்பிட்ட செக்போஸ்ட் வழியாகச் செல்வதற்கு ஏற்பாடு செய்து கொடுத்து அதற்கு கமிசன் பெறுவதோடு, ஹவாலா புள்ளிகளின் செல்வாக்கையும் அதிகார பலத்தையும் பொறுத்து சில நேரங்களில் கடத்தப்படும் ஹவாலா பணத்தை போலீசே கொள்ளையடிப்பதும் நடந்து கொண்டிருக்கிறது.

இதற்காகவே போலீசு உயரதிகாரிகள் தனிப்படை என்ற பெயரில் போலீசு குழுக்களை அமைத்து நேரடியாகவே கொள்ளையில் ஈடுபடுபடுவதோடு, வருமான வரித்துறை, அமலாக்கத் துறையுடன் கூட்டணி கட்டிக் கொண்டு கொள்ளையடிக்கப்பட்ட பணத்தைப் பங்குபோட்டுக் கொள்வதாக இத்தொழில் புதிய பரிமாணத்தை எட்டியுள்ளது. இத்தகைய தனிப்படை போலீசாருக்கு விடுதிகளில் சிறப்பு அறைகள் ஏற்பாடு செய்யப்படுவதும், திட்டமிட்டுக் கொடுத்து வழிகாட்டி உதவிய போலீசு உயரதிகாரிகளுக்குக் கீழ்நிலை போலீசார் கப்பம் கட்டி விருந்துகள் வைத்து குளிப்பாட்டுவதும் நடக்கின்றன. இதனாலேயே தற்போதைய ஹவாலா கொள்ளையில் சிக்கிய இந்த மூன்று போலீசாரும் கைதாகி பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ள போதிலும், அவர்கள் மீது எந்த வழக்கும் பதிவு செய்யப்படவில்லை.

ஒரு கொலையோ, கொள்ளையோ நடந்தால் அதுபற்றி போலீசுக்குக் குடிமக்கள் தெரிவிக்க வேண்டும்; போலீசார்தான் புலனாய்வு செய்து குற்றவாளிகளைக் கைது செய்ய வேண்டும்; மற்றவர்கள் இதில் தலையிடுவதோ, விமர்சிப்பதோ கூடாது; மீறினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற வரம்பற்ற அதிகாரத்துடன் போலீசு துறை இயங்குவதால், அதன் சட்டவிரோத - சமூகவிரோதக் குற்றங்களைப் பற்றி யாரும் வாய் திறக்க முடியவதில்லை. இதைப் பயன்படுத்திக் கொண்டு, கிரிமினல் மாஃபியா கும்பலைவிட மோசமான கொள்ளைக் கூட்டமாகத் தமிழகப் போலீசுத்துறை வளர்ந்து நிற்கிறது.

இதர கிரிமினல் குற்றங்களை ஒப்பிடும்போது ஹவாலா பரிமாற்றம் என்பது மிகக் கொடிய கிரிமினல் குற்றம். ஒரு நாட்டின் பொருளாதாரத்தையே அரித்துச் சிதைக்கக் கூடியதாக உள்ளதால் இது தேசவிரோத, மக்கள் விரோத கொடிய குற்றம். அந்தக் குற்றக் கும்பலிலே ஒரு அங்கமாகத் திகழும் அளவுக்கு தமிழக போலீசு கிரிமினல்தனத்தில் புதிய எல்லையைத் தொட்டிருக்கிறது. நமது வரிப்பணத்தில் வயிறு வளர்க்கும் இந்தச் சட்டவிரோத - சமூகவிரோத கும்பல்தான், குற்றங்களைத் தடுத்து நாட்டையும் மக்களையும் காத்து வருவதாகச் சொல்லப்படுவதை இனியும் நம்பி ஏமாற முடியுமா?

● குமார்

# தேனை எடுத்த ஜெயாவும் புறங்கையை நக்கிய நத்தமும்

**நத்தம் விசுவநாதன், சைதை துரைசாமியின் சட்டவிரோதமான சொத்துக் குவிப்புக்கும் அ.தி.மு.க. ஆட்சிக்கும் உள்ள தொடர்பு குறித்து ஊடகங்களும் கேள்வி எழுப்பவில்லை; சோதனை நடத்திய வருமான வரித் துறையும் கண்டுகொள்ளவில்லை.**

நத்தம் விசுவநாதன், சைதை துரைசாமியின் பங்களாக்களிலும் பண்ணை வீடுகளிலும் நடந்த வருமான வரிச் சோதனை ஒரு பரபரப்புச் செய்தி என்பதைத் தாண்டி, எவ்வித அரசியல் முக்கியத்துவமும் இன்றி அமுங்கிப் போனது தற்செயலானது அல்ல. இத்துணைக்கும் அவர்கள் இருவரும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாங்கிக் குவித்துள்ள சொத்துக்கள், தொழில்களில் போட்டுள்ள முதலீடுகள் பற்றிச் சில புலனாய்வு பத்திரிகைகளில் கசிந்துள்ள செய்திகள், இந்த விவகாரம் சாதாரணமான ஊழல், கமிசன் கொள்ளை அல்ல என எடுத்துக்காட்டுகிறது. ஆனாலும், இந்த வருமான வரிச் சோதனை தமிழக, தேசிய ஊடகங்களிலோ, அரசியல் வெளியிலோ காத்திரமான விவாதத்திற்கு உட்படுத்தப்படாமல், தாலுகா ஆபிஸ், டிராபிக் போலீசு லஞ்ச விவகாரம் போல ஒதுக்கித் தள்ளப்பட்டு விட்டது.

ஜெயா-சசி கும்பலுக்கு அனைத்துமாக விளங்கிய ஐவரணியில் ஒருவராக இருந்தவரும், கடந்த ஆட்சியில் மின்சாரத் துறை மற்றும் மது விலக்கு ஆயத்தீர்வை அமைச்சராக இருந்தவருமான நத்தம் விசுவநாதன் மலை முழுங்கி மகாதேவன் என்பதைச் சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பிருந்தே தி.மு.க., பா.ம.க., உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தொடர்ச்சியாக அம்பலப்படுத்தி வந்தன. அவை அனைத்தும் உண்மை என்பதைக் கடந்த செப்டம்பர் மாதம் நடந்த வருமான வரிச் சோதனை நிரூபித்திருக்கிறது.

கடந்த சட்டமன்றத் தேர்தலின்பொழுது கரூரைச் சேர்ந்த அன்புநாதன் என்பவரது குடோனிலிருந்து கைப்பற்றப்பட்ட ஐந்து கோடி ரூபாயும் நத்தம் விசுவநாதனுக்குச் சொந்தமானது என்பதோடு, நத்தம் விசுவநாதன் - அவரது மகன் அமர்நாத்; சைதை துரைசாமி- அவரது மகன் வெற்றி துரைசாமி; ஓ.பன்னீர் செல்வம் -அவரது மகன் ரவீந்திரநாத்குமார் உள்ளிட்ட அ.தி.மு.க.வைச் சேர்ந்த முக்கிய புள்ளிகளின் பினாமியாக அன்புநாதன் இருந்து வருவதும் இந்தச் சோதனையின் வழியாக அம்பலமாகியிருக்கிறது.

நத்தம் விசுவநாதன், ஓ.பி.எஸ்., உள்ளிட்ட அ.தி.மு.க.வின் மந்திரிகளும், சைதை துரைசாமி உள்ளிட்ட அ.தி.மு.க.வின் முக்கியப் புள்ளிகளும் இலஞ்சம், கமிசன், அதிகாரமுறைகேடுகளின் வழியாகக் குவித்த பல்லாயிரம் கோடி ரூபாய்களை உள்நாட்டில் மட்டுமின்றி, வெளிநாடுகளுக்கு ஹவாலா முறையில் கடத்திச் சென்று, அங்கு சொத்துக்களை வாங்கிக் குவிப் பதற்கு அன்புநாதன் தான் ஏஜெண்டாகச் செயல்பட்டிருக்கிறார். கடந்த நான்கு ஆண்டுகளில் அன்புநாதன் 90 நாடுகளுக்குச் சென்று திரும்பியிருப்பதை அவரது கடவுச்சீட்டு உறுதி செய்கிறது. இந்த 90 நாடுகளுள், தாய்லாந்து, துபாய், மலேசியா, சிங்கப்பூர், ஹாங்காங்(சீனா) ஆகிய நாடுகளில் அ.தி.மு.க.வின் அமைச்சர்களுக்காக அன்புநாதன் பினாமி பெயர் களில் சொத்துக்களை வாங்கிக் குவித்திருப்பதை தினகரன், நக்கீரன், ஜூனியர் விகடன் ஆகிய ஊடகங்கள் அம்பலப் படுத்தியுள்ளன.

★ துபாயில் உள்ள டய்ரா சிட்டியில் 1,900 கோடி ரூபாய் மதிப்பு கொண்ட வணிக வளாகம் நத்தம் விசுவநாதன், சைதை துரைசாமியின் வாரிசுகளுக்

கொள்ளைக்கூட்டத் தலைவியுடன் ..... சைதை துரைசாமி மற்றும் அவரது மகன் வெற்றி துரைசாமி. (கோப்புப் படம்)



காக மனோஜ்குமார் கார்க் என்பவரின் பெயரில் அன்புநாதன் மூலம் வாங்கப்பட்டிருக்கிறது. மத்திய நிதி அமைச்சகம் விசாரித்து வரும் நிலக்கரி இறக்குமதி ஊழல் வழக்கில் தற்பொழுது கைது செய்யப்பட்டு, கம்பி எண்ணிக்கொண்டிருப்பவன்தான் இந்த மனோஜ் குமார் கார்க்.

★ இந்தோனேஷியாவிலிருந்து அதிக விலை கொடுத்து நிலக்கரியை இறக்குமதி செய்த ஊழல் வழக்கில் தமிழக மின்சார வாரியமும் சம்பந்தப்பட்டிருக்கிறது. இந்த ஊழலால் தமிழக மின்சார வாரியத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டம் 1,500 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழக மின்சார வாரியத்திற்குச் செயற்கையாக அதிகரிக்கப்பட்ட விலையில் நிலக்கரியை ஏற்றுமதி செய்த அந்த திவ்ய தேசத்தில் நத்தம் விசுவநாதனுக்குப் பத்துக்கும் மேற்பட்ட நிலக்கரி வயல்கள் சொந்தமாக உள்ளதோடு, அதே எண்ணிக்கையில் நிலக்கரியை ஏற்றிவரும் சரக்குக் கப்பல்களும் சொந்தமாக இருப்பதாகக் குற்றஞ்சுமத்தியிருக்கிறார், பா.ம.க. நிறுவனர் ராமதாசு.

★ துபாயின் டய்ரா சிட்டிக்கு அருகிலேயே 10,000 கோடி ரூபாய் முதலீடு கொண்ட சூரிய ஒளி மின்சக்தி சாதனங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை, துபாயைச் சேர்ந்த ஒருவரின் பெயரில் நத்தம் விசுவநாதன் நடத்தி வருவதாகக் கூறப்படுகிறது. இந்த ஆலைக்கும் தமிழகத்தைச் சூரிய ஒளி மின்சாரப் பூங்காவாக மாற்றும் ஜெயாவின் திட்டத்திற்கும் இடையேயான தொடர்பு குறித்துத் தோண்டினால், பூதம்கூட வெளியே வரலாம்.

★ தாய்லாந்தைச் சேர்ந்த காசி கோர்ன் வங்கி, சிங்கப்பூரைச் சேர்ந்த கிட் ஹுவாத் டிரேடிங் கம்பெனி, சீனாவைச் சேர்ந்த லோக்ஸ்லே ஹோல்டிங்கஸ், சீன கம்யூனிகேஷன் வங்கி ஆகிய நிறுவனங்களில் நத்தம் விசுவநாதன், ஓ.பி.எஸ்., ஆகியோரின் பணம் அன்புநாதன் மூலம் முதலீடு செய்யப்பட்டிப்பதாகக் குறிப்பிடுகிறது, நக்கீரன்.

★ பெங்களூரிலுள்ள மடிவாலா பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள நிலத்தை அன்புநாதன் மூலம் 50 கோடி ரூபாய்க்கு விற்றுவிட்டு, அதற்குரிய வருமான வரியைக் கட்டாமல் சைதை துரைசாமி ஏய்த்திருப்பதாக வருமான வரித்துறையே குறிப்பிடுகிறது.

★ நத்தம் விசுவநாதனின் மகன் அமர்நாத் பங்குதாரராக உள்ள பிரிமியர் இன்டியா இன்ஃப்ரா பிரைவேட் லிமிடெட், சைதை துரைசாமியின் மகன் வெற்றி துரைசாமிக்குச் சொந்தமான வி.எம்.டி. நிறுவனம், எடிசன் எண்டர்பிரைசஸ் நிறுவனம் ஆகியவை மிகப் பெரும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு நிலம் வாங்கித் தரும் தரகு வேலையில் ஈடுபட்டுள்ளன. அமர்நாத்தும், வெற்றி துரைசாமியும் தங்களின் தகப்பனார்களின் அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தியே இந்தத் தொழிலில் கொடி கட்டிப் பறந்துள்ளனர். குறிப்பாக, தமிழகத்தின் தென் மாவட்டங்களில் சூரிய ஒளி மின்சார நிலையத்தை அமைத்துவரும் அதானி குழுமத்திற்காக விவசாயிகளிடமிருந்து அடிமாட்டு விலைக்கு நிலங்களை வாங்கி, அதனைப் பலமடங்கு இலாபத்திற்கு அக்குழுமத்திற்கு விற்றுக் கோடிக்கணக்கில் கொள்ளையடித்துள்ளனர்.

இந்த நிலக் கொள்ளைக்கு அப்பால், சைதை துரைசாமியின் பேரன் சித்தார்த் நடத்தி வரும் சித்தார்த் எனர்ஜி என்ற சூரிய ஒளி மின்சார நிறுவனம், கிரெசண்டோ இன்ஃபோ டெக் என்ற தகவல் தொழில்நுட்ப நிறுவனம்; கோவையைத் தலைமையகமாகக் கொண்டு வைர வியாபாரம் நடத்திவரும் கீர்த்திலால் ஜூவல்லரியில் நத்தம் விசுவநாதன், சைதை துரைசாமி குடும்பத்தின் முதலீடு; இலண்டனில் ஒக்லி பிராப்பர்டி சர்வீஸ், நியூயார்க்கில் ஒரு ஹோட்டல், மலேசியாவில் ரியல் எஸ்டேட் துறை ஆகியவற்றில் நத்தம் விசுவநாதனின் முதலீடுகள் - என இந்த இருவரும் தனியாகவும் கூட்டாகவும், சொந்தமாகவும் பினாமிகளின் பெயரிலும் நடத்திவரும் தொழில் சாம்ராஜ்ஜியம் மலைப்பு ஏற்படுத்தும் அளவிற்கு உள்ளது.

வருமானவரித் துறையின் சோதனைக்கு ஆளாகியுள்ள இந்த இருவரின் சொத்துக் குவிப்பு மட்டும் கேள்விக்குரியது அல்ல. இவர்களின் இந்தச் சட்டவிரோதமான சொத்துக் குவிப்பில் ஜெயா-சசி கும்பலின் பங்கு, பாத்திரம் என்ன, அதாவது சைதை துரைசாமியும், நத்தம் விசுவநாதனும் எந்தெந்த தொழில் முதலீடுகளில் ஜெயா-சசி கும்பலின் பினாமிகளாக இருக்கிறார்கள் என்பதுதான் மற்ற எல்லாவற்றையும்விட விசாரணைக்கு உட்படுத்த வேண்டிய முக்கியமான விடயமாகும்.

2011-16 அம்மாவின் பொற்கால ஆட்சியில், கமிசன் அடிப்பதற்காகவே அரசு மின்சார நிலையங்களும், திட்டங்களும் முடக்கப்பட்டு, தனியார் மின்சார நிலையங்களிலிருந்து அதிக விலை கொடுத்து மின்சாரம் கொள்முதல் செய்யப்பட்டது. குறிப்பாக, யூனிட் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் கொடுத்து வாங்க வேண்டிய சூரிய ஒளி மின்சாரத்தை, ஏழு ரூபாய்க்கு அதானி குழுமத்திடமிருந்து வாங்குவதற்கு போடப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் மட்டும் 525 கோடி ரூபாய் அளவிற்கு ஊழல் நடந்திருப்பதை விசாரிக்கக் கோரி சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டிருக்கிறது.

தலைவிக்கே தண்ணி காட்டிய முன்னாள் மின்துறை அமைச்சர் நத்தம் விசுவநாதன் மற்றும் அவரது மகன் அமர்நாத்.





25 கோடி ரூபாய் செலவில் மத்திய அரசிடமிருந்து வாங்க வேண்டிய எல்.ஈ.டி. விளக்குகளை வாங்காமல் புறக்கணித்துவிட்டு, அதே விளக்குகளை 145 கோடி ரூபாய் செலவில் தனியாரிடமிருந்து வாங்குவதற்கு ஒப்புதல் அளித்தார், சென்னை நகர மேயரான சைதை துரைசாமி.

இப்படி பல்வேறு ஊழல்கள், அதிகார முறைகேடுகள் மூலம்தான் அவர்கள் இருவரும் சொத்துக்களைக் குவித்திருப்பதாகக் கூறப்படுகிறது. எனினும், நகராட்சி கக்கூசுகள்கூட அம்மாவின் ஆணைக்கிணங்கவே திறக்கப்படும் தமிழகச் சூழலில், சூரிய ஒளி மின்சாரத்தின் விலையை நிர்ணயிப்பதும், மத்திய அரசிடமிருந்து குறைந்த விலையில் எல்.ஈ.டி. பல்புகளை வாங்க மறுப்பதும் அம்மாவிற்குத் தெரியாமல் நடந்திருக்கவே முடியாது.

**வருமான வரித் துறையின் சோதனைக்கு ஆளாகியுள்ள நத்தம் விசுவநாதன், சைதை துரைசாமியின் சொத்துக் குவிப்பு மட்டும் கேள்விக்குரியது அல்ல. இவர்கள் எந்தெந்த தொழில்களில் ஜெயாசசி கும்பலின் பினாமிகளாக இருக்கிறார்கள் என்பதும் விசாரணைக்கு உட்படுத்த வேண்டிய முக்கியமான விடயமாகும்.**



நத்தம் விசுவநாதனுக்குச் சொந்தமான கல்லூரியில் கொள்ளையடிக்கப்பட்ட பணத்தைக் கொண்டு உலகத் தரத்தில் அமைக்கப்பட்டுள்ள கிரிக்கெட் விளையாட்டு மைதானம்.

நத்தம் விசுவநாதனும், சைதை துரைசாமியும் புறங்கையில் வழியும் தேனை நக்கியிருப்பார்கள் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. அவர்கள் அம்மாவுக்குத் தெரியாமல் அமுக்கியதன் காரணமாகத்தான், தமிழகச் சட்டமன்றத் தேர்தலுக்குச் சற்று முன்பு, ஜெயா-சசி கும்பலின் நம்பகமான வட்டத்திலிருந்து சைதை துரைசாமி ஓரங்கட்டப்பட்டார். ஓ.பன்னீர் செல்வம், வைத்திலிங்கம், நத்தம் விசுவநாதன் உள்ளிட்ட ஐவரணியினர் போயசு தோட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

ஐவரணி மட்டுமே ஏறத்தாழ 30,000 கோடி ரூபாய் அளவிற்கு சொத்துக்களை வாங்கி குவித்திருப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சுமத்தின. அதில் தமிழகத்தில் பதுக்கி வைக்கப்பட்டு இருந்த பணத்தை, வாங்கி குவிக்கப்பட்ட சொத்துக்களை, தனது விசுவாசமிக்க போலீசு, உளவுத்துறை அதிகாரிகளைக் கொண்டு கைப்பற்றிக் கொண்டார், ஜெயா. அதேசமயம், அந்த ஐவரணியில் கொட்டை போட்ட பேர்வழியான நத்தம் விசுவநாதன் வெளிநாட்டில் வாங்கிக் குவித்துள்ள சொத்துக்களைத் தமிழகப் போலீசைக் கொண்டு கைப்பற்ற முடியாது என்பதால், வருமானவரித் துறை ஏவப்பட்டிருக்கிறது. இந்தச் சோதனையே அம்மாவுக்குத் தெரிந்துதான், அவரது சம்மதத்துடன்தான் நடந்தது எனப் பத்திரிக்கைகள் குறிப்பிடுவதிலிருந்தே, வருமானவரித் துறை ஜெயாவின் ஏவல் நாயாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை யாரும் புரிந்து கொள்ளலாம். தமிழகச் சட்டமன்றத் தேர்தல் சமயத்தில் நடந்த கண்டெய்னர் பணக் கடத்தல் விவகாரத்தில் ஜெயாவைக் காப்பாற்றிவிட்ட மோடி-அருண் ஜெட்லி-வெங்கய்ய நாயுடு கூட்டணி, அவருக்காக இதையும் செய்யும், இதற்கு மேலேயும் செய்யும்.

ஊடகங்களிலும், அரசியல் வெளியிலும் மிகப் பெரிய அளவிற்குப் பேசப்பட்ட 2ஜி ஊழல் வழக்கில், கலைஞர் டி.வி.க்குக் கைமாறியதாகக் கூறப்படும் தொகை வெறும் 200 கோடி ரூபாய்தான். அதைச் சாக்கிட்டே, தி.மு.க.வும், கருணாநிதி குடும்பமும் ஊழல், அதிகார முறைகேடுகளின் மறுபெயராகவும், தேச விரோதிகள் போலவும் சித்தரிக்கப்பட்டனர். கருணாநிதி குடும்பத்தினர் பலரும் சந்தேக வளையத்திற்குள் கொண்டுவரப்பட்டு, நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். ஆ.ராசா, கனிமொழி மீது வழக்கு பதியப்பட்டு, கைது செய்யப்பட்டு, பிணையில் விடப்பட்டனர்.

ஆனால், நத்தம் விசுவநாதன், சைதை துரைசாமி விவகாரத்தில் மட்டுமே பல்லாயிரம் கோடி ரூபாய் அதிகார முறைகேடுகளின் மூலம் கொள்ளையடிக்கப்பட்டிருப்பதும், ஹவாலா வழியில் பணம் கடத்தப்பட்டிருப்பதும் அம்பலமான பிறகும், அது தேச நலனுக்கு எதிரான குற்றமாக ஊடகங்களில் விவாதிக்கப்படவில்லை. தினகரன், நக்கீரன், ஜூனியர் விகடன் இதழ்களைத் தாண்டி, மற்ற பத்திரிகைகள், குறிப்பாக ஊழலுக்கு எதிராக சவுண்டுவிட்ட வட இந்திய ஊடகங்கள் இந்தக் கொள்ளை குறித்த செய்திகளைக்கூட வெளியிடாமல் இருட்டடிப்பு செய்தன. இந்த இருவர் தாண்டி, ஹவாலா பணம் கடத்தலில் மற்ற அ.தி.மு.க. அமைச்சர்களுக்கு உள்ள தொடர்பு குறித்தோ, இந்த இருவரின் சொத்துக் குவிப்புக்கும் அ.தி.மு.க. ஆட்சிக்கும், முதலமைச்சர் ஜெயாவிற்கும் உள்ள தொடர்பு குறித்தெல்லாம் ஊடகங்களும் கேள்வி எழுப்பவில்லை; “சோதனை” நடத்திய வருமானவரித் துறையும் கண்டுகொள்ளவில்லை. ஊழலைவிட, பார்ப்பன சாதிப் பாசம் பெரிதல்லவா!

● குப்பன்

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, 2nd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, 2nd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGA RAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

தாத்ரா-நாகர் ஹவேலி ஆகிய யூனியன் பிரதேசங்களில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள இந்த நேரடி மானியத் திட்டம் இனி நாடெங்கும் நடைமுறைப்படுத்தப்படும். இதன் வெள்ளோட்டமாக, 39 மாவட்டங்களில் மண்ணெண்ணெய்க்கான மானியம் இனி வங்கிக் கணக்கில்தான் செலுத்தப்படும் என அறிவித்துவிட்டார், நிதியமைச்சர் அருண் ஜெட்லி.

மானிய விலையில் பொருளைக் கொடுத்தால் என்ன, மானியத்தை வங்கியில் போட்டால் என்ன - இரண்டும் ஒன்றுதானே எனச் சமப்படுத்துவதென்பது, போத்திகிட்டு படுத்தால் என்ன, படுத்துகிட்டு போத்திக்கிட்டால் என்ன என்பது போல சாதாரணமானது அல்ல. கையில் ஒரு நூறு ரூபாயோ, நூற்றைம்பதோ இருந்தால் ரேஷன் கடைக்குப் போய் அரிசி, கோதுமை, சர்க்கரை, பருப்பு, பாமாயில் - என அனைத்தையும் இன்று வாங்கிவிட முடியும். மானியத்தை வங்கியில் போடும் நேரடி உணவு மானியத் திட்டம் நடைமுறைக்கு வந்துவிட்டால், இந்தப் பொருட்களை வாங்குவதற்கு குறைந்தது நானூறு, ஐநூறு ரூபாயாவது தேவைப்படும். மாதச் சம்பளம் வாங்கும் நகர்ப்புறத்து நடுத்தர வர்க்கத்திற்கு வேண்டுமானால் இந்தத் தொகை பெரிதாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், தினக் கூலி தொழிலாளர் குடும்பத்திற்கு, கிராமப்புற ஏழைகளுக்கு அப்படி இருக்கப் போவதில்லை.

இந்திய கிராமப்புறங்களில், குறிப்பாக வட இந்திய கிராமப்புறங்களில் ரேசன் கடைகள் தினந்தோறும் திறக்கப்படுவதில்லை. ரேஷன் கடை திறக்கப்படும் நாளன்று கையில் பணம் இருக்க வேண்டும். மானிய விலையில் விநியோகிக்கப்படும் உணவுப் பொருட்களை வாங்குவதற்கே பணத்தைப் புரட்ட முடியாமல் திண்டாடும் ஏழைகள் - பழங்குடியின மக்களை, சந்தை விலையில் பொருட்களை வாங்குமாறு தள்ளுவதென்பது, அவர்களைப் பட்டினிக்குள் தள்ளுவதற்கு ஒப்பானது.

> சந்தை விலையில் பொருளை வாங்குவதற்குரிய பணத்தைப் புரட்ட முடியாத ஏழைகள் பொது விநியோகத்திலிருந்து அப்புறப்படுத்தப்படுவார்கள். வறுமைக் கோட்டுக்கான வரையறையை மாற்றி அமைத்து ஏழைகளை ஒழித்துக் கட்டியது போல, ஏழைகளைப் பொது விநியோகத்திலிருந்து அப்புறப்படுத்துவதன் மூலம் மானியத்தைச் சேமிக்கப் போகிறது அரசு.

நேரடி உணவு மானியத் திட்டத்தின்படி, ஒரு ரேஷன் அட்டைதாரர் பொருள் வாங்காவிட்டால், மானியம் வங்கிக் கணக்கில் சேராது. இதன் விளைவு என்னவென்றால், சந்தை விலையில் பொருளை வாங்குவதற்குரிய பணத்தைப் புரட்ட முடியாத ஏழைகள் பொது விநியோகத்திலிருந்து அப்புறப்படுத்தப்படுவார்கள். வறுமைக் கோட்டுக்கான வரையறையை மாற்றி அமைத்து ஏழைகளை ஒழித்துக் கட்டியதுபோல, ஏழைகளைப் பொது விநியோகத்திலிருந்து அப்புறப்படுத்துவதன் மூலம் மானியத்தைச் சேமிக்கப் போகிறது அரசு.

ரேஷன் கடைகளுக்கு மூடுவிழா நடத்தாமலேயே, நைச்சியமான வழியில் அவற்றை டிபார்ட்மெண்டல் ஸ்டோர்களாக மாற்றும் ரசவாதம்தான் நேரடி உணவு மானியத் திட்டம். பொதுமக்களைச் சந்தை விலைக்கு பொருட்களை வாங்குவதற்குப் பழக்கப்படுத்துவதன் மூலம், உணவுப் பொருட்களுக்கு வழங்கப்படும் மானியத்தை, அவர்கள் அறியாமலேயே வெட்டுவது அரசுக்கு மிகவும் எளிதாகவிடும். வாழைப்பழத்தில் ஊசியை ஏற்றுவது போல, ரேஷன் கடையில் விநியோகிக்கப்படும் உணவுப் பொருட்களுக்கும் அவற்றின் சந்தை விலைக்கும் இடையிலான வித்தியாசம் மெல்லமெல்ல வெட்டப்படும். சமையல் எரிவாயு உருளைக்கான மானியம் வங்கிக் கணக்கில் செலுத்தும் நடைமுறை வந்த பிறகு, மிகச் சமீபமாக எரிவாயு உருளையின் விலையை மாதந்தோறும் இரண்டிரண்டு ரூபாயாக அரசு ஏற்றி வருவதை யாராலும் அறியமுடிகிறதா?

பொது விநியோகத் திட்டத்தின் மூலம் மானிய விலையில் உணவுப் பொருட்களை விநியோகிக்கும் கொள்கையும் நடைமுறையும் இருப்பதால்தான், திறந்த சந்தையில் உணவுப் பொருட்களின் விலை தாறுமாறாக உயர்ந்துவிடாமல் ஓரளவிற்காவது கடிவாளம் போட முடிகிறது. இந்தக் கொள்கையைக் கைவிடுவதென்பது, உணவுப் பொருட்களின் விலையை இனி வர்த்தகச் சூதாடிகள் தீர்மானிப்பதற்குத் தரப்படும் சுதந்திரமாகும். சில்லறை வியாபாரத்தில் பன்னாட்டு நிறுவனங்கள் இறங்குவதற்குக் காத்திருக்கும் சூழலில் பொது விநியோக முறையில் வரவுள்ள நேரடி உணவு மானியத் திட்டம், மக்களுக்கு இதுவரை கிடைத்து வந்த உணவுப் பாதுகாப்பைக்கூட இல்லாது ஒழித்துவிடும். அப்படிபட்ட அபாயகரமான நிலை வந்த பிறகு எதிர்ப்பதைவிட, மானியத்தை வங்கிக் கணக்கில் செலுத்தும் அரசின் நயவஞ்சகத் திட்டத்தை இன்றே எதிர்த்துப் போராட பொதுமக்கள் தயாராக வேண்டும். வருமுன்னர் காவாதான் வாழ்க்கை என்னவாகும் என்பதைப் பட்டுத்தான் தெரிந்து கொள்ள வேண்டுமா?

• அழகு

மதுரை மாவட்டத்தில் ஆதார் அட்டைக்காகப் புகைப்படம் எடுக்க அரசு சேவை மையம் முன் காத்திருக்கும் பொதுமக்கள்.



PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No.42648/85
REGISTERED No.TN/CC(S)Dn/190/15-17. Licensed to Post without pre-payment under WPP No.TN/PMG/CCR/WPP-562/15-17.

